# ஞானச்சுடர்

மாசி 2021

278ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போற் போற்றாக் கடை.**

**பொருள் :** பிற உயிர்களுக்கு நேரும் துன்பங்களைத் தமக்கு வந்த துன்பங்களாகக் கருதி அவைகளை ஒழிக்காதவிடத்து ஒருவனுக்கு உண்டாகிய அறிவினால் யாது பயன்? (315)

**இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கட் செயல்.**

**பொருள் :** துன்பம் விளைக்குமென்று கருதும் செயல்களை ஒருவன் பிறர்க்குச் செய்யாதிருத்தல் வேண்டும். (316)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

நல்லூர்ச் செல்வன்



ஒருபொல்லாப்பு மில்லையென்று சொல்வான் - செல்வன்
உல்லாச மாகவே நல்லூரிற் செல்வான். 01

குருசீட முறையொன்றுங் கொள்ளான் - செல்வன்
குணாதீத னொருவரையுங் கும்பிட்டு நில்லான். 02

அருவென்றும் உருவென்றும் சொல்லான் - செல்வன்
ஆரறி வாரென் றதட்டியே வெல்வான். 03

வருவாரைப் போவாரைத் தெருவில் - செல்வன்
வைவான் சிரிப்பான் மகிழ்ச்சி தருவான். 04

மருமத்தில் மருமமா யிருப்பான் - செல்வன்
மாதவ ருமறி யாதம கத்தான். 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 278

2021 **பொருளடக்கம்** மாசி


| | | |
|---|---|---|
| வீடுபேறு | திருமதி ந. பரமேஸ்வரி | 01 - 04 |
| ஓருரும் நீ | திருமதி சி. யோகேஸ்வரி | 05 - 07 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 08 - 10 |
| முருகனின் வித்தியாசமான... | பூ.க. இராசரத்தினம் | 11 - 12 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 13 - 16 |
| சமயங்களில் தத்துவம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 17 - 18 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 19 - 20 |
| இந்து சமய நம்பிக்கைகளில்... | செல்வி கோ. சர்மிளா | 21 - 24 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 25 - 26 |
| பிரதோஷ மகிமை | வி. செல்வரத்தினம் | 27 - 30 |
| மண்ணில் நல்ல... | திருமதி தி. இந்திரா | 31 - 34 |
| திருநீற்றின் பெருமை | ஆர்.வீ. கந்தசுவாமி | 35 - 37 |
| பத்தாகிய தொண்டர் | முருகவே. பரமநாதன் | 38 - 40 |
| அனுசுயா | எம்.பி. அருளானந்தன் | 41 - 43 |
| திருமூலர் தவமொழி | இ. ஜெயபாலன் | 44 - 46 |
| துணிந்து நில் துணிந்து செல் | வி.ரி. வேலாயுதம் | 47 - 48 |
| கதிர்காம யாத்திரை | திருமதி ம. நிலா | 49 - 52 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Prited & Published By:

*Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.*

Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஆற்றங்கரை வேலவனின் அருளைப்பெற்று அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற்ற அருளாளர் வரிசையில் வைத்து மதிப்பிடக் கூடிய நடமாடும் தெய்வமாக வாழ்ந்து வழி காட்டியவர்தான் முருகேசு சுவாமிகள். இவர் மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி தர்ம வாழ்க்கையில் வழிப்படுத்தி ஆற்றிய தொண்டினை அவரின் காலத்தில் வாழ்ந்த பலரும் - இன்றும் கூட வியந்து பாராட்டி வாழ்த்தி நிற்பதைக் காதாரக் கேட்கிறோம்.



முருகேசு சுவாமிகளின் பெருமுயற்சியினால் சந்நிதியான் ஆச்சிரமம் எந்தக் குறைவுமின்றி நிறைவாக வளர்ச்சிபெற்று வருவது குறிப்பிட வேண்டியதாகும். சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் பெருமை சேர்த்த 63 நாயன்மார்களை நினைவு கூரும் "அறுபத்துமுவர் பூசையை" முதன் முதலாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் தோற்றுவித்த பெருமையும் முருகேசு சுவாமிகளுக்கே உரியதாகும். அத்துடன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிகள் அத்தனைக்கும் உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் அவர்.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள், சிறப்பான - நேர்த்தியான பூசை முறைகளை நெறிப்படுத்தியவரும் அவரே. 23.05.1920இல் அவதரித்த முருகேசு சுவாமிகள் 16.03.1997இல் இறைவன் திருப்பாதங்களைச் சென்றடைந்தார்.

22.03.2021 திங்களன்று முருகேசு சுவாமிகளின் குருபூசை தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட கும்பாபிஷேக தின நிகழ்வு செல்வச்சந்நிதி ஆலயத்தில் 13.04.2021 செவ்வாயன்று நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டு

நமது மனதை சுத்தமாக வைத்திருப்பதற்கு நாம் செய்யும் சேவைகள் ஒரு காரணமாக அமைகின்றது. அதன் பலனாக எமது அகங்காரங்கள் அகன்று எவ்வுயிரையும் தன்னுயிரபோல் மதிக்கும் பெருநிலைக்கு எம்மை ஆளாக்குகின்றது.

சேவை என்பது தொண்டினையே குறிக்கும். தொண்டு பிரதியுபகாரம் கருதாமல், தெளிந்த மனத்துடன் மனம் விரும்பிச் செய்வதாகும். ஆன்மீகத் தொண்டு, அறத்தொண்டு, சமூகத்தொண்டு என்று தொண்டு பல வகைப்படும். ஆன்மீகத் தொண்டு செய்வதற்கு மூல காரணமாக அமைவது தெய்வ சிந்தனையாகும். அதனடிப்படையில் ஆன்மீக நாட்டம் ஏற்படுகின்றது. அது இல்லாதவர்கள் கடவுளுக்கோ அல்லது இறையடியார்களுக்கோ தொண்டு செய்வது கடினம்.

ஆனால் மக்களுக்குச் செய்யப்படும் சேவை, தொண்டு இறைவனுக்குச் செய்யப்படும் சேவையாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு மனிதரிடத்தும் இறைவன் உறைகிறான் என்னும் அடிப்படையில் மக்கள் சேவை மகேசன் சேவை என்று ஆகின்றது. அடுத்தவனும் மனிதன், அவனுக்கு உதவுவதன்மூலம், தொண்டு செய்வதன்மூலம் இறைவனுக்குத் தொண்டு செய்வது போலாகிறது. மக்கள் தொண்டு செய்பவனுக்கு மனத் தூய்மையும், பிறர் நலன் பேணும் மனப்பாங்கும், மனப்பக்குவமும் இன்றியமையாதவை.

தன்னலம் கருதாது, பிரதியுபகாரம் எதிர்பார்க்காது தூய்மையான மனத்துடன் நலிந்து போனவர்களுக்கு, நொந்து போனவர்களுக்கு உதவுபவனும் பணிவிடை செய்பவனுமே உண்மையான தொண்டன், சேவையாளன். நாம் எம்மைச் சார்ந்த சமூகத்துக்கு உளப் பூர்வமாக, உண்மையாகத் தொண்டாற்றும்போது அதன்மூலம் நாம் பெருவாழ்வினை அடையலாம். மனிதாபிமானம், மனிதநேயம் உள்ள எவரும் அடுத்தவனுக்கு உதவும், தொண்டு செய்யும் இயல்புடையவனே. அந்த இயல்புடன் உண்மையும், நேர்மையும் சேர்ந்தாலே அவன் தொண்டனாவான். அடுத்தவன் கஷ்டத்தை, துன்பத்தை தான் அனுபவிப்பது போல் உணர்ந்தவனால் மட்டுமே முழுமையான தொண்டு செய்ய இயலும்.

ஆனாலும், இன்றைய காலத்தில் சமூகத்தொண்டு செய்யப் புறப்படுபவர்களில் கணிசமானோர் பிறர்நலன் பேணுவதைவிட, சுயநலன் பேணுவதற்கு முயல்வதையே காணமுடிகின்றது. தமது புகழ், பதவிகளைப் பேணுவதற்கு மக்களுக்குச் செய்யும், செய்து கொண்டு இருக்கும் தொண்டை விளம்பரப்படுத்தி தமது நிலையை திடப்படுத்திக்கொள்வதோடு தமது மனதில் ஒருவித அகங்காரத்தையும் வளர்த்துக்கொள்கிறார்கள். இது சேவையாளனுக்கு உகந்ததல்ல. நல்ல தொண்டன் தான் செய்யும் பணியைத் தனக்குப் புகழ்சேர்க்கப் பயன் படுத்தமாட்டான். ஆகையால் நாம் உளப்பூர்வமாக தொண்டு செய்யும்போது உள்ளம் பெருங்கோயிலாகும். அக்கோவிலுள் இறைவன் உறைவான் என்பது திண்ணம்.

*அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால்*
*இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே.*

-தாயுமானவர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு



## 24. திருப்பழநி வகுப்பு

எந்தவினை யும்பவமு மெந்தவிட மும்படரு
மெந்தவிக லும்பழியு மெந்தவழு வும்பிணியு
மெந்தவிகழ் வுங்கொடிய வெந்தவசி யும்சிறிது மணுகாமலே:,

எந்தவிர வுந்தனிமை யெந்தவழி யும்புகுத
வெந்தவிட முஞ்சபையி லெந்தமுக மும்புகலு
மெந்தமொழி யுந்தமிழு மெந்தவிசை யும்பெருமை சிதறாமலே:,

வந்தனை செய் துன்சரண நம்புதல்பு ரிந்தவருள்
வந்தநுதி நந்தனிலு நெஞ்சினினை வின்படிவ
ரந்தரவு வந்தருளி தம்பெறுவ தன்றிநெடு வலைவீசியே:,

வஞ்சவிழி சண்டனுறு நின்றபொழு துங்குமர
கந்தவென நன்கறைய வந்தெளிவு தந்துயிர்வ
ருந்துபய முந்தனிமை யுந்தவிர அஞ்சலென வரவேணுமே:,

தந்தனன தந்தனன டிண்டிகுடி டிண்டிகுடி
குண்டமட குண்டமட மண்டமென நின்றுமுர
சந்திமிலை பண்பைதுடி திண்டிமமு முங்குமொலி திசைவீறவே:,

தண்டவமர் மண்டசுரர் மண்டைநிண மென்றலகை
யுண்டுமிழ்தல் கண்டமர ரிந்திரன் வணங்குபத
தண்டைசிறு கிங்கிணி புலம்பிடவ ரும்பவனி மயில்வாகனா:,

செந்தளிரை முந்துபட மென்றுளம ருண்டுநிறை
சந்தனவ னங்குலவு மந்திகுதி கொண்டயல்செ
றிந்தகமு கின்புடைய துங்கிடவ ளைந்துநிமிர் மடல்சாடவே:,

சிந்தியவ ரம்பைபல வின்கனியில் வந்துவிழ
மென்கனியு டைந்தசுளை விண்டநறை கொண்டுசிறு
செண்பகவ னங்கள்வளர் தென்பழநி யம்பதியின் முருகேசனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)

**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)

**ப. பாலபவான்**
(புத்தூர்)

**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)

**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)

**ந. யோகேஸ்வரன்**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)

**அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)

**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)

**திருமதி இ. பத்மநாதன் J.P**
(உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை)

**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)

**வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)

**T. பாக்கியம்**
(கந்தர்மடம்)

**நா. பவளம்**
(அச்சுவேலி)

**திருமதி தேவதாஸ் தயானி**
(அச்சுவேலி)

**கணேசகுலசிங்கம் துஷிகரன்**
(அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ. இராமலிங்கமூர்த்தி
(இளை. உதவி மின் அத்தியட்சகர், கரவெட்டி)
சி. மகாலிங்கம் J.P
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
சு. சிவதாசன் G.S
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
தலைவர், செயலாளர்
(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)
உரிமையாளர்
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
ஐ. லோகஞானம்
(அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்)
ஆ. விஸ்வலிங்கம்
(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)
V. அரியராசா J.P
(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)
கந்தசாமி தேவராணி
(ஆனைக்கோட்டை)
உரிமையாளர்
(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)
செ. சந்திரமூர்த்தி
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
சி. பஞ்சலிங்கம்
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
செ. தேவேந்திரா
(ஓஸ்காவீதி, உரும்பராய்)
இராசரெட்ணம் வசந்தன்
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
இ. குமாரதாசன்
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)
R. குலசிங்கம்
(இளை. அதிபர், கோண்டாவில்)
N. K. தங்கராசா
(இளை. தபாலதிபர், புலோலி)
இ. பாலகிருஷ்ணன்
(முகமாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்**
(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)
**செ. செல்வரெத்தினம்**
(இளை. அதிபர், சுண்ணாகம்)
**த. விவேகானந்தன்**
(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)
**இ. ஜெயபாலன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
**மா. ந. பரமேஸ்வரன்**
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
**பா. கேதீஸ்**
(உரும்பராய்)
**S. ஈஸ்வரன்**
(டச்சுவீதி, சித்தங்கேணி)
**ச. மதனகுமார்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**கெ. தவராசா**
(விவேகானந்தர் வீதி, இணுவில்)
**வி. ந. ஸ்ரீதரன்**
(இளை. அதிபர், நீராவியடி, யாழ்ப்பாணம்))
**செ. செல்விகா**
(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)
**அ. கருணானந்தன்**
(மானிப்பாய்)
**வே. மதிபாலசிங்கம்**
(செட்டியதெரு, கரவெட்டி)
**நா. முருகையா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**செல்வராசா பொன்னுத்துரை**
(கரந்தன், நீர்வேலி)
**விஸ்வலிங்கம் குகலிங்கம்**
(பண்ணாகம், சுழிபுரம்)
**மா. தேவநேரு**
(செட்டிவளவு லேன், இணுவில்)
**சசிகரன் கௌதமன்**
(அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. பாலச்சந்திரன்
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)
(நெல்லியடி, கரவெட்டி)
தி. பாலசுப்பிரமணியம்
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
மா. விஸ்வநாதன்
(புத்தூர்)
நாகன் கிருஸ்ணபிள்ளை
(கோண்டாவில்)
சி. கந்தையா
(சுண்ணாகம்)
K. விஷ்ணுமோகன்
(உரும்பராய் கிழக்கு)
பொ. சிற்றம்பலம்
(கொடிகாமம்)
ச.க. தம்பு
(அல்லாரை, மீசாலை)
சிதம்பரநாதன் ஸ்ரீகரன்
(புத்தூர்)
நாகராசா சாந்தி
(அச்சுவேலி)
க. ரட்ணேஸ்வரன்
(இளை. அதிபர், சங்கானை)
க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்
(ஆனைக்கோட்டை)
திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்
(வட்டுக்கோட்டை)
திருமதி செல்வநாயகம்
(வடலியடைப்பு)
திருமதி சீதாதேவி இந்திரன்
(யா/ கச்சாய் மகா வித்தியாலயம்)
உரிமையாளர்
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுபேறு

*– திருமதி பரமேஸ்வரி நடராஜா* அவர்கள் –

பேறுகளிற் பெரும்பேறு வீடுபேறு
பேறு பெற்ற பெரியோரின் கூற்றிது
பேறிதனைப் பெற்றுய்யும் வழிகூறும்
ஆறிரு தடந்தோளன் அண்ணனே காப்பு

“வீடு” என்பது நாம் அமைதியாகவும் நிம்மதியாகவும் வசிப்பதற்குரிய பாதுகாப்பான ஓர் இடமாகும். முதலில் ஒரு தனிமனிதனை எடுத்துக்கொண்டால் இந்த உடம்பு வீடு. வீட்டில் குடியிருப்பது ஆத்மா. இந்த ஆத்மாவே “நான்”. இந்த உடம்பாகிய வீட்டில் வாழும் கலையை அறிந்து கொண்டால்த்தான் என்னால் நிம்மதியாக வாழமுடியும்.

எனது வீட்டின் அடித்தளம் பிருதுவி. இது திடமானதும் எதையும் தாங்கும் ஆற்றல் கொண்டதுமான சக்தியாகும். நுண் அணுக்களைக் கொண்டு சுவர் எழுப்பப்படுகின்றது. இவற்றை அடுக்கிச் சுவரை உறுதியாக்கக் களிமண்ணாகிய தசையும் செந்நீரும் சேர்க்கப்படுகின்றது. இவற்றை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி உறுதியாகத் திகழ்வதற்காக உள்ளே எலும்புகளான கற்றூண்கள் பொருத்தப்படுகின்றன. இவ்வெலும்புகள் உடல் உறுப்புகளின் பாதுகாப்புக் கோட்டைகளாக அமைகின்றன. இதன்பின் இவற்றை மூடி அழகாக்கும் மேற்பூச்சாக அமைவது தோலாகும் இத்தோல் விரிந்து சுருங்கும் இயல்பைக் கொண்டதாகும். இவ்வாறு சுவர் எழுப்பப்பட்டபின் இதற்குக் கூரை போடவேண்டும். கூரை உறுதியாக இருப்பதுடன் வீட்டின் மேற்பகுதி காற்று, வெளிச்சம் என்பன உள்ளே புகக்கூடியதான சாளரங்களைக் கொண்டதாக அமைய வேண்டும். ஆகவே “எண்சாண்” உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பதற்கிணங்கத் தலை உடம்பின் பிரதான பகுதியாக அமைகின்றது.

ஒளி புகுவதற்குக் கண்களும் பிராண வாயுவாகிய மூச்சுக்காற்று உட்செல்வதற்கு நாசியும் ஒலிகளை உள்வாங்குவதற்காகச் செவிகளும் சாளரங்களாக அமைகின்றன. இதற்குமேல் நாம் கண்டதையும் கேட்டதையும் அறிந்து செயற்படுத்தும் திட்டத்தைத் தயாரிப்பது மூளையாகும். இம்மூளை பிரதான செயலகமாக விளங்குவதால் இதைச் சுற்றிப் பலமான பாதுகாப்புக் கவசமாக மண்டையோடு அமைக்கப்பட்டுள்ளது. இதுவே உடம்பாகிய வீட்டின் கூரையாகும். வெளித்தாக்கத்தால் மண்டையோடு பாதிக்கப்படாதிருக்க முடி கொண்டு கூரை வேயப்படுகின்றது. இதன்

*வாழ்வில் அன்பாகவும், தாழ்வில் தக்க துணையாகவும் விளங்குவது கல்வி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஒவ்வோர் உறுப்புகளும் ஒன்றோடொன்று தொடர்பு கொள்வதற்காக மின்வயர்களாக நரம்புகளை ஊடுருவிச் செல்லுமாறு உரு வாக்கப்படுகின்றது. இவை மூலாதாரத்தில் உள்ள மின்சக்தி நிலையத்தோடு தொடர்பு படுத்தப்பட்டு உடலிலுள்ள ஆறு ஆதாரங் களோடும் பிளக்மூலம் இணைக்கப்படுகின்றது. உணவு, காற்று, நீர் என்பன உள்ளே செல் வதற்கான குழாய்களும் உள்ளே இருந்து கழிவுப் பொருட்கள் வெளியேறுவதற்கான குழாய்களும் பொருத்தப்படுகின்றன. இரைப்பை, நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், இதயம், மூளை போன்ற உள்ளுறுப்புகளும் கை கால் போன்ற வெளியுறுப்புகளும் ஒழுங் காக இயங்குவதற்கான சக்தி மூலாதாரத் தோடு ஒழுங்குபடுத்தப்பட்டுச் செயற்படு கின்றது.

ஒரு சிலந்தி எவ்வாறு வலையாகிய கூடு அமைத்து அதனுள் வாழ்கின்றதோ அதே போல இம்மனித உடலை உருவாக்கி அத னுள்ளே குடியிருப்பவர் இறைவனாகிய இயக்குநர் ஆவார். இவரே இயக்குபவராகவும் இயங்குபவராகவும் விளங்குகின்றார். உடற் கூற்று விஞ்ஞானத்தின் மூலம் உடலுறுப்புகள் இயங்கும் தொடர்பாடல் பற்றி வைத்திய நிபுணர்கள் அறிந்து நோய்களுக்குச் சிகிச்சை செய்கின்றனர். ஆனால் இந்த உடலாகிய வீட்டை அமைத்த கர்த்தா அதனை எந்த நோக்கத்திற்காக அமைத்தார் என்பதை அறிந்து கொண்டால் மட்டுமே உட்போரின்றி எல்லா அணுக்களும் ஒன்றுபட்டுச் செயல் புரியும். அப்போதுதான் உடல்நிலை சீராக அமையும்.

இந்நோக்கத்திற்கான எண்ணக்கரு வானது சிந்தனையாகச் சித்தத்தில் தோன்று கின்றது. அவ்வெண்ணக்கருவின் செயற்பாடு கள் நிழலாக மனத்திரையில் விழுகின்றன. இவற்றைப் புத்தி ஒழுங்குபடுத்துகின்றது. இதன்பின் செயல்கள் மூலம் அவை நடை முறைக்கு வருகின்றன. எண்ணமும் செயலும் முரண்படாதிருக்க புத்தி கண்காணிக்கின்றது. ஆனால் அப்புத்திக்கும் எட்டாத விடயங்களை அறிந்துகொள்ளப் புத்திக்கும் மூலவரான இயக்குனரோடு தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வேளை மனம் அறியாமலே அச்செயல் கள் நடைபெறுகின்றன இது தற்செயல் நிகழ்வு எனவும் இறைவனின் அற்புதம் என வும் பலவாறாகக் கூறப்படுகின்றது. இது ஒரு தனிமனித உடலும் அதன் செயற்பாடும் ஆகும். இப்பிரபஞ்சமாகிய உலக இயக்கமும் இவ்வாறே ஆகும். பிரபஞ்சத்திலுள்ள அனைத் துப்படைப்புகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையன, ஒன்றுக்கொன்று ஆதாரமாயுள்ளன.

ஆகாயமாகிய வெட்ட வெளியே எல்லா இயக்கத்திற்கும் ஆதாரமாயுள்ளது. வெளி என்பது இடமென்றும் பொருள்படும். இடமில்லாவிட்டால் ஒன்றுமியங்க முடியாது. ஓசை, ஒலி, ஒளி, வளி, வெப்பம் எல்லாம் அங்கிருந்தே கிடைக்கின்றன. இவற்றை உணர்ந்துகொள்ள உதவுவன புலன்கள், காணுதல், கேட்டல், உணர்தல் மூலம் தனி மனிதனுக்கும் பிரபஞ்சத்திற்குமான தொடர்பு அறியப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனின் எண்ணக்கருக்களும் வித்தியாசமாக இருப்பது அவரவர் புத்தியின் புரிந்துணர்வுப்படியே ஆகும். இதுவே ஒருவர் மனத்திலிருப்பதை இன்னொருவர் அறிய முடியாத திரையாகும். புத்திக்கு அப்பாற்பட்ட அறிவு ஆத்ம அறி வாகும். பிரபஞ்சம் முழுவதற்குமான ஆத்மா பரமாத்மா என அழைக்கப்படுகின்றது. அன்பு என்னும் காந்த சக்தியால் ஒவ்வொரு மனித னுள்ளும் ஒளிரும் ஆத்ம ஒளி ஈர்க்கப்படு கின்றது. ஆகவே சுத்தாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமடையும் போது பூரணமாகின்றது.

*விடியும் என்று விண்ணை நம்பு. முடியும் என்று உன்னை நம்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூரண அறிவைப் பெற்ற மனிதனின் வாழ்வு சிரமமின்றிச் சிறப்பாக அமைகின்றது.

மனிதனின் எண்ணம் தன் உடலுடன் மட்டுப்படும் போது தன்னுடல் தன்மனம் தன் புத்தி என்று சிந்திக்கின்றான். இதனால் தன்னை ஒரு தனித்தியங்கும் தனி மனிதனாக நினைப்பதால் பரமாத்மாவின் தொடர்பு மறைக் கப்படுகின்றது. இது மலம் எனப்படும். இம் மலத்தை அகற்றுவதே கல்வியறிவின் நோக்க மாகும். இவ்வறிவு வேதாகமங்களைக் கற்பதன் மூலமே நமக்குக் கிடைக்கின்றது. இதை நாம் படிப்பதுடன் மட்டும் நில்லாது படித்தவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலமே முழுமையாக அறிந்து கொள்ளலாம். இதற் கான படிகளே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். சரியை என்பது தூய்மை செய்வதாகும். உள்ளே மனத்தை யும் வெளியே உடலையும் வாழும் சூழலை யும் தூய்மை செய்தலாகும். இத்தூய்மையால் ஆன்மா லயப்படும் என்பதால் ஆலயங்களில் தூய்மைப்படுத்தும் பணிகளைச் செய்வது சிறப்பாகக் கூறப்படுகின்றது. கிரியை என்பது வாழ்விற்குத் தேவையான பொருட்செல்வத்தை யாகங்கள் பூசைகள் செய்வதன் மூலம் அற நெறிக்கமையப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறையாகும். யோகம் என்பது சுயநலம் கருதாது உலக நலனிற்காகச் செய்யப்படும் தொண்டாகும். இவற்றை முறையாகச் செய் வதன் மூலம் மனித மனம் விசாலமடைந்து உலகத்தோடு ஒன்றாகி விடுகின்றது. இந் நிலையில் இவ்வுலகம் முழுவதையும் படைத் தும் காத்தும் தீமைகளை அழித்தும் அருளும் கர்த்தாவாகிய இறைவனே எல்லாவற்றையும் செய்பவன். நான் என்று எண்ணியிருந்த இவ் உடம்பும் அந்தக்கரணங்களும் அவன் கருவி களே என்ற ஞானம் உண்டாகின்றது. சரி யைத் தொண்டின்போது இறைவனின் அடிமை யாகவும் கிரியையின்போது குருவாகிய இறை வனின் சீடனாகவும் யோகி என்னும்போது இறைவனின் நெருங்கிய தோழனாகவும், ஞானமாகிய பூரண ஒளியில் (தானேயதுவாக) நான் என்பது உருவம் கடந்த இறை சக்தி யாகிய உணர்வே என்பதைப் புரிந்து கொள் கின்றான். இதுவே மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கமாகும். எல்லாம் அவன் செயல் நான் சாட்சியாக இருக்கின்றேன் என்ற செயலற்ற நிலையில் ஒவ்வொரு தனிமனிதனாலும் செய் யப்படும் செய்கை எல்லாம் சிரமமின்றி ஒழுங் காக நடைபெறும்.

நான் அதுவாக இருக்கின்றேன் (தத்துவமசி) என்பதே வேதத்தின் அந்தமாகிய வேதாந்தமாகும். இதற்குமேல் அறிவதற்கு எதுவும் இல்லாததால் அம்மனிதன் நிறை மனிதன் ஆகின்றான். வானமே உலகின் கூரை யாகவும் மண்ணே எமைத் தாங்கும் நிலமாக வும் பஞ்ச பூதங்களே உடலாகவும் கொண்ட வீடே இந்த உலகமாகிய வீடாகும். இப் பிரபஞ்சத்தை அறியும் அறிவு பூரண அறிவு ஆகாது இதனைத் தோற்றத்திற்குக் கொண்டு வந்து ஒவ்வொன்றையும் ஒழுங்காக இயக்கும் கர்த்தாவாகிய இறைவனை அவனறிவாலே அறிந்து தெளிவதே பூரண அறிவாகும். இறை சக்தியாகிய ஒன்றே எங்கும் எல்லாவற்றிலும் வியாபித்துள்ளதால் எல்லாம் நல்லவையே அவன் செயல் எல்லாம் நன்மைக்கே என்று உணரும்போது அன்று யோகர் சுவாமிகள் மொழிந்த அற்புதமான உலகம், ஆனந்தமான உலகம், ஒரு புதினமுமில்லை என்ற வார்த் தைகளுக்கான உட்பொருள் தெளிவாகின்றது. நான் எனது எனக்கு என்ற சுவர்கள் எழுப்பப் படாத வெட்ட வெளியாகிய வானமே கூரை யாகக் கொண்ட மாளிகையே எமது ஆரோக் கியமான பெரிய வீடாகும். இதுவே வீடுபேறு எனப்படும்.

*தூய்மையே எல்லா நல்லொழுக்கங்களுக்கும் அடிப்படை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறு எனப்படுவது நாம் எதைப் பெறுவதால் அமைதி பெறுகின்றோமோ அதுவே பெரிய பேறாகும். வீடு என்பது நாம் வசிக்கும் இடம். இது முதல் உடலாக, பின் நாம் குடும்பத்தினருடன் சேர்ந்து வாழும் வீடாக அதன்பின் சமுதாயமாகிய விசாலித்த வீட்டில் ஒரு அங்கமாக, அதன்பின் நாடு என்ற விரிந்த அரண்மனையில் ஒரு அங்க மாக, அதற்கும் பின் இப்பிரபஞ்ச உலகில் ஓர் அங்கத்தவனாக, நான் வளர்ந்த போதும் மற்றவர்களோடு முட்டுப்படாமல் அமைதியாக வாழ்வதற்குரிய ஞானமாகிய வேதாந்த அறிவே நமக்குத் தெளிவான பாதையைக் காட்டும் அறிவாகும். இதன்பின் மேலே எதை யும் தேடி ஓடாமல் இந்த உயரத்தில் எம் அறிவாகிய வீட்டிற்குக் கூரை அமைத்துக் கொண்டு வாழ்ந்தால் அதுவே பேறு பெற்ற பெரிய வீடாகும்.

இந்த ஊனும், மச்சையும், எலும்பும் சேர்ந்த அழிந்து போகக்கூடிய இவ் உட லிற்குள் நாம் வாழும்போதே இந்த அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். சேற்றில்தான் செந் தாமரை மலர்கின்றது. இவ்வுடம்பில் வாழும் போதே ஞானத்தாமரையை மலரச்செய்ய வேண்டும். அதன்பின் இவ்வுடம்பும் நாம் வாழும் இல்லமும் நமது சமுதாயமும் நாடும் உலகமும் எல்லாமே எமக்கு அமைதியளிப்ப தாக அமையும். இதுவே பேரின்ப வீடு.

வேதாகமச் சித்திர வேலாயுதனின் அருட்கடாட்சத்தோடு வேதாகமங்களைக் கற்று அதன் உட்பொருளை உணர்ந்து அதன்படி வாழ்ந்து பேரின்பப் பெருவீட்டை அடை வோமாக. அவனருளாலே அவன்தாள் வணங்குவோம். தேவை அறிந்து தருபவன் அவனே; யாம் எதுவும் அறியோம்; எல்லாம் அவன் செயலே.

## எந்நிதியும் தருவான்..... செல்வச்சந்நிதியான்

### பல்லவி

வரம் தர வரவேண்டும் வடிவேலா!
வண்ணத் தமிழாலே நின்னைத் தினம் பாட. (வரம்)

### அநுபல்லவி

நிரந்தரம் இல்லாத நிலவுலக வாழ்வில்
நெஞ்சார நினைப்பாடி நிம்மதியை அடைய. (வரம்)

### சரணம்

கரங்குவித்தே நின் கழல்களைத் தொழுதிடுவேன்!
கனிவோடு நின் திருப்புகழினைப் பாடிடுவேன்!
சிரந்தாழ்த்தி வணங்கியுமே சிந்தை குளிர்ந்திடுவேன்!
சிங்கார வேலவனே! செந்தமிழ்க் காவலனே!
(வரம்)

சந்நிதியில் குடிகொண்ட செல்வக் குமரனே!
"சரணம்" என்றே வந்தேன்! அம்பிகை பாலனே
எந்நிதியும் தந்து எமைக்காக்கும் எழிலோனே!
ஏறுமயில் ஏறிவந்து என் குறை தீர்ப்பாயே! (வரம்)

~கி. குலசேகரன்~

*கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளை இடுவதையும் அறிவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருரும் நீ

—திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்—

உலகம் முழுவதும் வாழும் மனிதர்கள் ஒரே விதமாகச் சிந்திப்பதில்லை. அது மட்டுமல்ல; சிலவேளைகளில் ஒருவனே நேரத்திற்கு நேரம் வெவ்வேறு விதமாகச் சிந்திக்கிறான். தான் கூறிய கருத்திற்கு முற்றிலும் எதிரான கருத்தை ஒருவன் தெரிவிப்பதைப் பார்த்து நாம் திகைக்கநேரிடுகிறது. "நமது ஊர்; எமது தாய்நாடு; இவை போன்று மற்றோர் ஊரோ நாடோ இருக்கமுடியாது" என எல்லோரும் கூறுவது வழமை. ஒவ்வொரு நாட்டவரும் ஊரவரும் இப்படிப் பெருமை பேசுவதை நாம் அவதானிக்கலாம்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி வாழ்ந்த தாய்நாடு" என குறித்த உணர்ச்சிகரமான பாடல்கள் பலவும் எம்மிடமுள்ளன. அதே வேளையில் இன்று தமிழரின் பரந்த மனப்பாங்கை வெளிப்படுத்தும் நோக்கில் சங்ககாலப்பாடலொன்றின் வரி எங்கும் காட்சிப்படுத்தப்பட்டும் எழுத்திலும் பேச்சிலும் எடுத்துக்காட்டப்பட்டும் வருவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

கணியன் பூங்குன்றனார் என்னும் சங்கப்புலவரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வரியே அதுவாகும். சகலதும் எமது ஊரே. எல்லோரும் எமது உறவுகளே என உலகளாவிய உறவை பறைசாற்றுகிறது இவ்வரி. தமிழனின் விரிந்த உள்ளத்தைக் கண்டு உலகம் வியந்து நிற்கிறது.

திருநாவுக்கரசப் பெருமானின் தேவாரமான "அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ" எனும் தேவாரத்தைப் பாடி வழிபாடு செய்த போது என் மனம் இறைவனது பதத்தை விட்டுவிட்டு சங்ககாலப் பாடல் முதல் "சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா?" எனும் சினிமாப் பாடல் வரையான பாடல்களின் பின்னால் ஓடி மேற்குறித்தவாறு எல்லாம் சிந்தித்துக் குழப்பம் ஏற்படுத்தத் தொடங்கியிருந்தது. ஆரம்பத்திலிருந்து தேவாரத்துடன் இணைந்து இறைவனுடன் ஒன்றித்திருந்த மனம் "ஒருரும் நீ" என்ற அடி வந்ததும் திசைதிரும்பியது. அப்பன் அம்மை ஆதியாம் உறவுகள் பொருள் சுற்றம் முதலான அனைத்தும் நீயே என இறைவனை நோக்கிக் கூறிவந்த அப்பரடிகள் ஊரையும் அவ்வரிசையில் சேர்த்துக் கொள்கிறார். அனைத்தையும் இறைவனாக அவர் காண்கிறார். இறைவன்தான் அப்பன் இறைவன்தான் அம்மை என்று பாடிய தொடரில் இறைவன் தான் ஊர் என்றும் பாடுகின்றார். இத்தேவாரத்திற்கு மற்றொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். அப்பன்தான் இறைவன் அம்மைதான் இறைவன் ஊர்தான் இறைவன் என்றும் நாம் கருதலாம்.

இரு கருத்துகளும் எழுதும்போது சில சொற்கள் முன்னும் பின்னும் மாறி வருவதை விட பெரும் வேறுபாடு இல்லாதது போன்று தோன்றினாலும் ஆழ்ந்து சிந்திக்கும்போது பெரும் வேறுபாடு புலப்படும். ஆண்டவனுடன் ஐக்கியப்பட்டவனுக்கு அவனே தந்தையும் தாயும் சகலதுமாகிவிடுகிறான். பெற்றோர்மேல்

*அரிய காரியங்களைச் செய்ய பெரிய உழைப்பு வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமும் பெரு மதிப்பும் வைத்திருப்பவனுக்கு பெற்றோர் தெய்வமாகத் தெரிவர். கடவுளே கதி என சரணடைந்தவனுக்கு ஊரும் இறை மயமாகத் தோன்றும். மேலே எடுத்துக் காட்டிய சினிமாப் பாடலைப் பாடுபவன் ஊரைத் தெய்வமாகப் போற்றுவான். இறைவனுடன் ஐக்கியப்பட்டவன் ஊரைப் பற்றி அக்கறை காட்டி அதனைத் தெய்வமாகப் பார்ப்பானா? என்றொரு வினா பலரது மனங்களிலே எழுவது இயல்பு.

ஊரிலேன் காணியில்லை. உறவு மற்றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றினேன் பரமமூர்த்தி

என நாராயணன் பாதம் பற்றிய தொண்டரடிப்பொடி ஆழ்வார் ஊரைத் துறந்து பாடுகிறார். இறை ஐக்கியத்தில் துறவு ஏற்படும் என்று அனைவரும் நம்புகின்றனர்.

மணிவாசகப் பெருமான் "உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்" என்று திருப்புலம்பலில் பாடு கின்றார். பக்தி மிகுந்த நிலையிலே உற்றாரும் வேண்டாம். ஊரும் வேண்டாம். எதுவும் வேண் டாம் எனப் புலம்புகின்றார் மாணிக்கவாசகப் பெருமான். வேண்டாம் என வெறுத்தொதுக்கும் ஊரை இறைவனாகவே காண்கின்றார் திரு நாவுக்கரசு நாயனார். ஒவ்வொருவரது நோக் கும் ஒவ்வொரு வகையில் அமைவது அவர வரது மனதைப் பொறுத்தது. பார்வை வேறு படுவது மட்டுமல்ல. உறவுகள் மீதோ பொருட் களின் மீதோ நாம் கொள்ளும் பற்றும் இவ் வண்ணம் மாறுபடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. மேலே எடுத்துப் பேசப்பட்ட ஊரையே எடுத்துக்கொள்வோமே.

குறித்த ஓர் ஊரிலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து அம்மண்ணிலேயே மடியும் வாழ்க்கை வாய்க்கப் பெற்றவருக்கு அந்த ஊரின்மீது அதீத பற்று ஏற்படும். ஓருரில் பிறந்து தந்தை தொழில் ரீதியாக மாற்றம் பெற்றுச் சென்றவேளைகளில் வெவ்வேறு ஊர்களில் வளர்ந்து கல்வி பயின்று பின்னர் தான் பணியாற்றிய ஊர்களில் வாழ்ந்து முடித்த ஒருவருக்கு முன்னவரைப் போன்ற ஊர்ப் பற்று இருக்குமென எதிர்பார்க்க முடி யாது. ஓருரைத் தன் சொந்த ஊர் என்று சொல்லிக் கொள்வதிற்கூட பெரும் பிடிமானம் இல்லாது போகலாம். தான் வாழ்ந்த மற்ற ஊர்களில் ஒன்றிலோ பலவிலோ அதைவிடக் கூடிய அபிமானம் ஏற்பட்டிருக்கலாம். அவரது வாழ்க்கைச் சுற்றோட்டத்தில் நடந்த நிகழ்வு கள் அதற்குக் காரணமாகியிருக்கலாம். இத் தகையவர்கள் தன்னூரிலிருந்து மிக இலகு வாக வேறிடம் சென்றுவிடுவார்கள்.

அப்படியானால் சிவபிரானைக் கயில யங்கிரியில் காணும் ஆவலினால் தன் உடல் தேய்ந்து சிதைவதையும் பொருட்படுத்தாமல் சென்ற அப்பரடிகள் ஊரை இறைவனாகக் காண்பதற்கும் காரணமிருக்குமோ? இருக்கத் தான் வேண்டும் அவர் திருக்காளத்தியிலிருந்து கயிலாயமலைக்குச் செல்லப் புறப்பட்டு நடைப் பயணமாகச் சென்றபோது பாதங்களிரண்டும் புண்ணாகிப் போயின. அதனால் அவர் தவழ்ந்து சென்றார். நீண்ட பயணமல்லவா? கைகளும் முழந்தாழ்களும் நிலத்தில் தேய்ந்து தோல் சிதைந்துவிட தவழ இயலாமற் போயிற்று. அவர் தளராது உருண்டு அங்கப் பிரதட்சணமாகத் தன் இலக்கையடைய முயன்றார். அதனை எட்ட முடியாத நிலை யில் உடல் முழுவதும் இரணமாகி இமயத்தின் அடிவாரத்தில் கிடந்த அப்பர் பெருமானிடம் முனிவரின் வேடத்தில் வந்த சிவபிரான் ஏன் இந்த நிலையில் இங்கே கிடக்கிறீர் என விசாரித்தார். நாவுக்கரசர் தனது நோக்கத்தைத் தெரிவித்தபோது கயிலைக்குச் செல்வது கடினமென முனிவர் விளக்கிக் கூறினார். நாவுக்கரசரோ தன் இலக்கில் உறுதியாக

*நேரத்தைத் தாமதப்படுத்தினால் தீமையான முடிவையே தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார். அதைக் கண்ட சிவபெருமான் அருகேயிருந்த பொய்கையைக் காட்டி "இதில் மூழ்கினாயானால் திருவையாற்றில் எழுந்து கயிலாயக் காட்சியைக் காண்பாய்" என அருளிச் செய்தார். அவ்வாறு செய்ய அவரது உடல் பழையபடியாகி திருவையாற்றில் எழுந்து பார்த்தபோது கயிலாய தரிசனம் கிடைத்தது. கயிலையெம்பெருமானைக் கண்ட மகிழ்விலே திருத்தாண்டகம் பிறந்தது.

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" என ஆரம்பித்து சகலவற்றிலும் கயிலைமலையானைக் கண்டு போற்றி வழி படுகையில் "ஊராகி நின்ற உலகே போற்றி" என்று அவனை ஊராகவும் தரிசித்துப் போற்றி நின்றார். கயிலையங்கிரியானைக் கண்ட கணத்தில் உள்ளத்துள் தோன்றிய எல்லா வற்றையும் இறைவனாகக் காணும் மனப் பக்குவம் அவருள் ஆழவேரோடி நிலைத்து விட்டது. அதனாலேதான் "ஓருரும் நீ" என்று பாடியிருக்கின்றார்.

இவ்வாறு வெவ்வேறு காரணங்களால் ஊரைப் பற்றிய பல்வகை மனநிலை எம்முள் ஏற்பட்டுவிடுகிறது. அவற்றுள் ஊரை இறை வனாகக் காணும் மனப்பக்குவமும் ஆண்ட வனின் அடியார்களிடம் இருக்கிறது.

சைவ சமயத்தில் காணும் பொருட் களெல்லாவற்றிலும் இறைவனைக் காண வைக்கும் பண்பு உள்ளூர்ந்து இருப்பதனை ஏற்கனவே கட்டுரைகளில் விவரித்துக் காட்டி வந்துள்ளோம். மரங்களை, பறவைகளை, மிரு கங்களை அவற்றுள்ளும் பயங்கரமானவற்றை, பயமூட்டும் ஆயுதங்களை எல்லாம் பார்த்ததும் ஒவ்வோர் இறை நாமத்தைக் கூறி வணங்கி நிற்கச் செய்கிறது எம் சமயம். பயஉணர்வோ பயங்கர உணர்ச்சிகளோ ஏற்படவேண்டியதற் குப் பதிலாக பக்தி பெருக வைப்பது எவ்வளவு மகத்தானது. அந்த வரிசையில் இங்கு ஊரைக் குறித்து சிறிது சிந்தித் திருக்கிறோம்.

## பகைவர்களைப் பெற எளிய வழி

துறவி ஒருவர் சொற்பொழிவு செய்துகொண்டிருந்தார். "நல்ல நண்பர்கள் பழைய பிறவித் தொடர்பால் அமைகிறார்கள். நண்பர்களைப் பெற வழி ஏதும் இல்லை, ஆனால் பகைவர்களைப் பெற எளிய வழி ஒன்று உள்ளது" என்றார்.

கூட்டத்தில் இருந்த இளைஞன், "பகைவர்களை எளிதாகப் பெற வழி உள்ளதா? அந்த வழி என்ன சொல்லுங்கள்? நாங்கள் அந்த வழியில் செல்லாமல் இருப்போம்" என்றான்.

புன்முறுவல் பூத்த அவர், "இளைஞர்களே! உலகத்திலேயே சிறந்த ஒழுக்கம் அடக்கம்தான். தன்னை எவன் தாழ்த்திக்கொள்கிறானோ அவன் உயர்த்தப்படுவான். தன்னை எவன் உயர்த்துகிறானோ அவன் தாழ்த்தப்படுவான். பகைவர்களைத் தேடி ஒருவன் எங்கும் அலையவேண்டாம். தன் நண்பர்கள் முன்னிலையில் தான் அவர்களைவிட உயர்ந்தவன் என்று காட்டிக்கொண்டால் அதுவே போதும். நாளடைவில் அந்த நண்பர்கள் அவனுக்குப் பகைவர்களாக மாறி விடுவார்கள்" என்று விளக்கம் தந்தார்.

*ஊக்கமுள்ள மனிதன் தம் கடமையைச் செய்யத் தவறமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம் (தொடர்ச்சி...)

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

125. ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னால்அலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை யேன் மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையு மொத்
தூனையும் என்பினை யும்உருக் காநின்ற ஒண்மையனே.

**ப-ரை:**

வினையேன் மனத்து- பிராரத்த வினையுடையேனது உள்ளத்தில் எழுந்தருளியிருந்து, தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து- தேனையும் பாலையும் கருப்பஞ்சாற்றையும் அமுதத்தினையும் ஒத்து இனிமை செய்து, ஊனையும் என்பினையும் உருக்காநின்ற ஒண்மையனே- எனது உடலின் ஊனினையும் திண்பொருளாகிய எலும்பினையும் உருகிக் கரையச் செய்கின்ற அறிவொளியின்ப வுருவினனே, எந்தாய்- என் தந்தையே, ஆனை வெம் போரில் குறு தூறு என- யானைகள் ஒன்றோடொன்று செய்கின்ற கொடிய போரில் அகப்பட்ட செடிகள் போல, புலனால் அலைப்புண்டேன்- ஐம்புலன்களாலும் அலைக் கப்பட்டு வருந்தி அழிகின்ற என்னை, விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வினையேன் மனத்து எழுந்தருளியிருந்து தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தினையும் ஒத்து இனிமை செய்து எனது ஊனையும் "என்பினையும் உருகச் செய்கின்ற ஒண்மையனே, எந்தாய், ஆனைவெம்போரில் அகப்பட்ட சிறிய பற்றையைப்போல ஐம்புலன்களால் அலைக்கப்பட்டு வருந்தி அழிகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

ஆனை வெம்போர்- யானைகள் ஒன்றோடொன்று பொருதுகின்ற கொடிய போர். "குன்றேறி யானைப்போர் கண்டற்றால்" (குறள் 758) என்றார் திருவள்ளுவரும். ஆனை வெம்போரில் அவற்றின் காலால் மிதியுண்டு சிதையும் சிறு செடிகள் போல ஐம்பொறிகளும் ஐம்புலன்களின் மேற்செல்லும் ஆசையில் அவற்றால் அலைக்கப்பட்ட என்னை என்பார். "ஆனை வெம்போரிற் குறுந்தூறெனப் புலனால் அலைப்புண்டேனை" என்றார். ஆனை வெம் போருக்குப் பொறிகள் புலன்கள்மேற் செல்லும் ஆசையும், குறுந்தூருக்கு அவற்றால் அலைக்கப்பட்ட அடிகளும் உவமை பொறிகளை ஆனையாகக் கூறுதலை "உரனென்னுந்

குறிக்கோளை அடைய விடாமுயற்சிதான் முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டியா லோரைந்துங் காப்பான்" (குறள் 24) என்பதனாலுமறிக. "தொண்டர் அஞ்சு களிறு மடக்கி" (தே.ஞான 250:1) என வருதலுங் காண்க. தூறு- செடி. தூறென- செடி அழிந்தாற்போல. "ஆனை இனத்தின் துகைப்புண்ட அமணாயிரமும் மாய்ந்ததற் பின்" (திருநாவு 299) எனப் பெரிய புராணத்து வருதலுங் காண்க. அலைப்புண்டேனை- ஐம்புலன்களால் அலைக்கப்பட்டு வருந்திய என்னை,

"ஐவரா லலைக்கப்பட்டுக் கழியிடைத் தோணி போன்றேன்" நாவு 31:6.

"ஐவரா லாட்டப்பட்டேன்" நாவு 51:8.

"கூட்டமாய் ஐவர் வந்து கொடுந்தொழிற் குணத்தராகி
ஆட்டுவார்க் காற்ற கில்லேன்" நாவு 67:4.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. இங்கே அடிகள் தம்மைப் புலனாலலைப் புண்டேனை எனக் கூறியது எடுத்த உடம்பும் அது முகந்து நின்ற கன்ம அனுபவமும் உளவாதல் பற்றியாகும். அவற்றை நீக்க வேண்டுமென்பது குறிப்பு.

வினையேன் மனத்து என்பதற்குத் தீவினையேனது மனத்தின் கண் என உரைக்கில் அம்மனத்தின்கண் இறைவன் புலப்பட்டு தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து இனிமை செய்தல் பொருந்தாது. அதனால் பிராரத்த வினையுடையேனது என உரைக்கப் பட்டது. தேன் முதலியவற்றை ஒத்தல் வெவ்வேறு வகையான இன்பஞ் செய்தல். ஊனையும் என்பினையும் உருக்கா நின்ற என்றது, ஊனும் என்பும் உருகும்படியான அன்பினைத் தாரா நின்ற என்றவாறு. "அன்பினாலடியேன் ஆவியோ டாக்கை யானந்தமாய்க் கசிந்துருக" (கோயிற் 2) என அடிகள் அருளியவாறுங் காண்க. ஒண்மை என்பது அறிவு, ஒளி, நன்மை முதலிய பல பொருள் தருதலின் ஒண்மையனே என்பதற்கு அறிவொளி இன்பவுருவினனே என உரைக்கப்பட்டது.

இதன்கண், புலனாலலைப்புண்டேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் புலனாதல் காண்க. 21.

126. ஒண்மைய னேதிரு நீற்றையுத் தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய் பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை யாண்மைய னேஅலிப் பெற்றியனே.

**ப-ரை:**

மெய் அடியவர்கட்கு என்றும் அண்மையனே- மெய்யடியவர்களுக்கு எப்பொழுதும் அணித்தாகவுள்ளவனே; பிறர்க்கு சேயாய்- மெய்யடியவரல்லாதார்க்கு என்றும் தூரத்திலுள்ள வனே; அறிதற்கு அரிதாம்- எத்துணை மேம்பாட்டினரும் அறிதற்கரிய, தொன்மை பெண்மையனே ஆண்மையனே அலி பெற்றியனே- பழமையுடைய பெண் தன்மையுடையவனே, ஆண் தன்மை யுடையவனே, அலித் தன்மையுடையவனே, ஒண்மையனே- அறிவொளியின்பவுருவினனே, திருநீற்றை உத்தூளித்து ஒளி மிளிரும் வெண்மையனே- திருவெண்ணீற்றைப் பரவ அணிந்து

*துணிச்சலோடு உழைப்பவனுக்குத்தான் வெற்றி அருகில் வந்து அமரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் ஒளி விளங்கும் வெண்ணிறமுடையவனே, விட்டிடுதி கண்டாய்- என்னைக் கைவிடு கின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மெய்யடியவர்கட்கு என்றும் அணித்தாகவுள்ளவனே, அல்லாதார்க்குத் தூரத்திலுள்ள வனே, அறிதற்கு அரிதாம் பழமையுடைய பெண் தன்மையுடையவனே, ஆண்டன்மையுடைய வனே, அலித் தன்மையுடையவனே, ஒண்மையனே, திருநீற்றை உத்தூளித்து அணிந்து அதன் ஒளி விளங்கும் வெண்மையனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தூளித்தல்- எங்கும் பரவப் பூசுதல், மிளிர்தல் - விளங்குதல். ஒளி மிளிரும்- திருநீற்றின் ஒளி விளங்கும். "ஒளி வெண் ணீற்றப்பர்" "ஒளிநீ றணிந்து" (ஞான 28:1; 221:3) எனத் தேவாரத்து வருவன காண்க. வெண்மையனே என்றார், செய்ய திருமேனியையுடைய இறைவன் திருவெண்ணீற்றைப் பூசுதலால் வெண்ணிறமுடையவனாய் விளங்குதலின், "செய்ய திருமேனி யிசை வெண்பொடி யணிந்து" (ஞான 336:6) எனத் தேவாரத்து வருதலும் காண்க.

எப்பொழுதும் தன் திருவடியையே சிந்திக்கும் மெய்யடியார்க்கு இறைவன் வெளிப்பட்டுத் தோன்றலின் "மெய்யடியவர் கட் கண்மையனே" என்றும் அம்மெய்யடியாரல்லாத பிறர்க்கு மறைந்திருத்தலின் "பிறர்க்குச் சேயாய்" என்றும் அருளினார்.

"புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க"

சிவபுராணம் 8.

"ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச் சேயானை"

அம்மானை 7.

எனப் பிறாண்டும் அடிகள் அருளியவாறு காண்க. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை அண்மை சேய்மை உடையன் என எல்லைக்குட்பட்ட உருவினனாகக் கூறுதல் அமையுமோவெனின், ஈண்டு அண்மையும் சேய்மையும் இறைவன் திருவருளைப் பெறுதற்குரிய தகுதியையும் தகுதியின்மையையும் உணர்த்தின வாகலின் அமையுமெனக. "என்றும்" என்னும் சொல் என்றும் அண்மையனே, என்றும் சேயாய் என ஈரிடத்தும் இயையும்.

பிறர்க்கரிதாம் தொன்மை- எத்துணை மேம்பாட்டினராலும் அறிய முடியாத பழமை. "சொல்லிறந்து நின்ற தொன்மை" (குயிற் 1) என அடிகள் பிறிதோரிடத்தும் அருளியவாறு காண்க. இறைவன் தொன்மையை "பெண்ணோ டாணலியாய்ப் பிறவா வுருவானவனே" (சுந் 28:6) என்னும் தமிழ் மறையானுமறிக. தொன்மை என்பதைப் பெண்மை அலி என்பவற்றோடும் கூட்டுக. இறைவனைப் பெண் ஆண் அலிப் பெற்றியன் என்றது இன்ன தன்மையன் என்று சுட்டி யுணரப்படாமையினாலாகும்.

இதன் கண் விட்டிடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடா தொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 22. (தொடரும்...

---

அனைத்திலும் சமமாக நிலைபெற்றிருக்கும் பகவானைக் காண்கிறவன் தன்னைத்தானே அழித்துக்கொள்வதில்லை. அதனால் அவன் மேலான நிலையை அடைகிறான். தன்னைத்தானே அழித்துக்கொள்ளாதவன் பிறப்பிலிருந்து நிரந்தரமாய் விடுபட்டு பரமகதியை அடைவான். அது கூடுவிட்டுப் பறவை வான் வெளிக்குத் தாவுகிற மாதிரி.

*வாய்ப்பே ஒரு மனிதனை உயர்வடைய வைக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனின் வித்தியாசமான திருக்கோலங்கள்

– வடகோவை பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

முருகப் பெருமான் தன்னை வணங்குவோருக்கு அருள் கூர்ந்து வரம் அளிக்கத் தோன்றும் போது யானை வாகனத்திலே வருவார். அடியார்களின் துயர் தீர்க்க முருகவேள் யானை வாகனமேறி வருவதை

"உன்றனது சிந்தை சந்தோஷித்தாரை கொண்டருள் வந்து
சிந்தூரத் தேறி" என்று திருப்புகழில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

சூரபன்மன், சிங்கமுகன், தாரகன், அசமுகி ஆகியோர் தவமிருந்து உடல் அழிவின்றி இருக்கின்ற வரத்தைப்பெற்ற மமதையில் தேவர்களையும், தவ சிரேஷ்டர்களையும் துன்பறுத்தி வந்தனர். இதனை ஒரு முடிவுக்கு கொண்டுவர சிவபெருமான் விரும்பினார். தனது நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளை வெளியேற்றினார். அவை சரவணப் பொய்கையில் விடப்பட்டன. கார்த்திகைப் பெண்கள் ஆறு பேரும் குழந்தைகளை வளர்த்தனர். பரம் பொருளின் அறு குணங்களே, முருகனின் அறுமுகங்கள். அன்னை அக்குழந்தைகள் அனைவரையும் அன்புடன் அணைத்த பொழுது பன்னிரண்டு கைகளுடன் ஆறு முகங்கள் கொண்ட ஆறுமுகக் கடவுள், முருகன் தோன்றினான்.



அருவமும் உருவமாகி
அநாதியாயப் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்ற சோதிப்
பிழம்ப தோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய.

"எல்லாம் வல்ல இறைவனே முருகனாக வந்து தோன்றியவர்" என்று கச்சியப்பர் கூறினார். முருகப் பெருமான் தேவர்களைத் துன்புறுத்தாது விட்டுவிடும்படியும் வீரவாகு தேவரை சூரபத்மனிடம் தூது அனுப்பினார். ஆனால் சூரபத்மன் முருகனை, சிறுவன் என இழிவாகக் கூறி அனுப்பினான். முருகன் போர் புரிய ஆயுதங்கள் தாங்கிய படையுடனும், தாயார் பார்வதி கொடுத்த சக்திவாய்ந்த வேலுடனும் போர்க்களம் சென்றார். ஐந்து நாட்களில் அசுரர்களை அழித்தார். சூரபத்மனை, ஞானமாகிய வேலினால் இரண்டாகப் பிழந்தார். உடலில் ஒரு பகுதி மயிலாகியது. மயிலைத் தனது வாகனமாக்கினார். மற்றப் பகுதி சேவலாகியது. சேவலைக் கொடியாக ஏற்று ஆண்டு கொண்டார். ஒவ்வொரு உள்ளத்திலும் எழுகின்ற காமம், குரோதம், உலோபம், மதம், மோகம், மாச்சரியம் ஆகிய ஆறு உட் பகைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று இறைவனை அடைய வேண்டும் என்பதை இந்த நிகழ்ச்சி விளக்குகிறது. அறியாமை என்னும் அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞானத்தை பெற எல்லோரும் முயல வேண்டும்.



**வில் ஏந்திய முருகன்**

வில் ஏந்திய வடிவில் முருகனை சம்ஹார மூர்த்தி என்று கூறுவார்கள். சூரபத்மனின் மகன் இரண்யாசுரனை அழிப்பதற்கு முருகன் கொண்ட கோபம்தான் வில் ஏந்திய சம்ஹாரமூர்த்தி. மேலும் வலது காலை மயில் மீது வைத்த நிலையிலும், வலது முன்கையில் அம்பும், இடது முன்கையில் வில்லும் கொண்டு, பின் இரு கரங் களிலும், சக்தியும் வஜ்ரமும் விளங்குகிறது.

**ஆட்டு வாகனம்**



முருகனது வாகனங்களில் ஆடும் ஒன்றாகும். நாரதர் பெரிய வேள்வி ஒன்றைச் செய்தார். வேள்வியில் இருந்து ஆடு சீறிப்பாய்ந்து எழுந்தது. இதனைக் கண்ட தேவர்கள் அஞ்சி முருகனை வேண்டினர். முருகன் தனது படைத் தளபதியான வீரபாகுவை அனுப்பி அந்த ஆட்டைப் பிடித்துவரச் செய்து தனக்கு வாகனமாக்கிக் கொண்டார். சில ஆலயங்களில் கந்தசஷ்டி உற்சவத்தின் போது ஆட்டு வாகனத்தில் முருகன் பவனி வருகிறார்.



**யானை வாகனப் பெருமான்**

யானையை வாகனமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் கோலம் கஜாரூடர் முருகன் தன்னை வணங்குவோருக்கு, வரம் அளிக்கத் தோன்றும்போது, யானை வாகனத் திலேயே வருவார். யானை வாகனம் ஏறி வருவதை, "உன்றனது சிந்தை சந்தோஷித்தாரை கொண்டருள வந்து சிந்தூரத்தேறி" என்று திருப்புகழில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

இப்படியாக முருகனின் வித்தியாசமான திருக்கோலங்கள் பல உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதர்கள் எம் முறையில் என்னை அணுகினாலும் அம் முறையில் அவர்களை ஏற்கிறேன். அவர்கள் மேற்கொள்ளும் எவ் வழியும் என்வழியே" -பகவத்கீதை.

*எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றி இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

## (இருபத்தொன்பதாவது)

## மாயப் பசுவை வதைத்த படலம்

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் -

அனந்தகுண பாண்டியன் பாம்பைத் துணித்த பின்பு, அப் பாம்பின் பின் வந்த சமணர்கள், காற்றினாற்றள்ளுண்டு செல்லும் மேகங்கள் போல், உடைந்து கலங்கி ஓடினார்கள். ஓடின சமணர்களெல்லாரும் ஓரிடத்து ஒருங்குகூடி, "நாம் முன் விடுத்த யானையைப் போல இன்று விடுத்த பாம்பையுங் கொன்று விட்டார்கள். இனி யாது செய்வோம்?" என்று ஆலோசித்து, "பசுவுக்கு ஊறு செய்யார்கள்; பழிக்கஞ்சுவார்கள்; ஆதலாற் பசுவை விடுப்போம். இதுவே உபாயம்" என்று துணிந்து முன்போல அபிசாரவோமஞ் செய்தார்கள். ஓம குண்டத்தினின்றும் பசுவுருவாகி ஓரசுரன் வந்து தோன்றினான். அப் பசுவைச் சமணர்கள் முன்போல் விடுத்தார்கள். அது யாவரும் அஞ்சும் வண்ணம் இடிபோல் ஆரவாரித்துப், பலரைத் தொடர்ந்து கொன்று, சென்று, மதுரையை அணுகியது. அதனையறிந்த அனந்தகுண பாண்டியனும் நகரத்தார்களும் விரைந்து திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி முறையிட்டார்கள். சிவபெருமான் அவர்கள்மீது திருவருள் சுரந்து, இடபத்தை நோக்கிச், "சமணர்கள் விடுத்த பசுவை நீ போய் வென்று வரக் கடவாய்" என்று பணித்தருளினார்.

அவ்விடபம் இரண்டு கண்களினின்றும் அக்கினி சிந்த, இடிபோல் ஆரவாரித்துக் கொண்டு, விரைந்து சென்று, அப்பசுவைக் கிட்டிச் சமணர்கள் நினைந்தபடியே அதற்கு ஊறு செய்யாது, தனது பேரழகைக் காட்டிற்று. உடனே பசு அவ்விடபம்மீது இச்சைகொண்டு, உயிரோடும் வீரியத்தை விடுத்து, வீழ்ந்து மலைவடிவாயிற்று. அதுகண்ட பாண்டியனும் நகரத்தார்களும் மகிழ்ச்சியடையச் சமணர்கள் எல்லாம் ஓட்டெடுத்தார்கள். இடபம் உலகத்தார் அறியுஞ் சான்றாகத் தனது தூல சரீரத்தை இடப மலையாக அங்கே நிறுத்தி விட்டுச், சூக்கும சரீரத்தோடு சோமசுந்தரக் கடவுளை அடைந்து வணங்க, அவர் திருவருள் சுரந்து, "முன்னை யுருவாகி இங்கே இரு" என்று இருத்தியருளினார். அப்பொழுது பாண்டியனும் நகரத்தார்களும் மகிழ்ச்சி அடைந்து, சந்நிதியில் இருந்த இடபத்தை வணங்கிக்கொண்டு போயினார்கள்.

சீராமர், இலங்கைக்குப் போகும் பொருட்டு, வானர சேனை சூழ, இலக்குமணர் அனுமான் சுக்கிரீவன் முதலிய வீரர்களோடும் அங்கு வந்து, அவ்விடப மலையின்மீது தங்கினார். அகத்திய மகாமுனிவர், அதையறிந்து, அங்கு வந்து, அவருக்குச் சோமசுந்தரக் கடவுளுடைய மான்மியத்தை அருளிச் செய்தார். சீராமர் அதுகேட்டு, அன்புகொண்டு அகத்திய முனிவரோடு சென்று பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, சோமசுந்தரக் கடவுளைச் சிவாகம விதிப்படி பூசித்துத் துதித்து நின்று, "சீவன் முத்திபுர வாசரே! இப் பூமண்டலத்தின்கண் உமக்கு அநேக தலங்கள் இருக்கின்றன. அவைகளுள் இத் திருவாலவாயே மிகுந்த அற்புதமுடைய தலம். அது யாதினாலெனின், சகல லோகத்தாரும்

*மற்றவர்களைவிட அறிவாளியாக இருக்க முயற்சி செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மிடத்து அன்பு வைத்து உய்யும்பொருட்டு நீர் செய்த கருணை பருவத வடிவங்களாய் இத் திருநகர்ப்புறத்து நின்று விளங்குதலி னாலாம். தரிசித்த மாத்திரத்திலே சகல துக்கங்களையும் போக்குதற்கும், சகல பாக் கியங்களையும் ஆக்குதற்கும், கருணை கொண்டு நீர் அதிட்டித்திருக்குஞ் சிறப்பினால் இவ்விலிங்கத்திற்குச் சமானம் வேறில்லை. ஸ்நானஞ் செய்தவுடனே சகல பாவங்களை யும் போக்கி உம்முடைய மங்கல போகங் களைக் கொடுத்தலால், இப் பொற்றாமரை வாவிக்குச் சமானம் வேறில்லை. மற்றையிடங் களிலெல்லாம் தலம், மூர்த்தி, தீர்த்தம் என்னும் மூன்றினுள் ஒவ்வொன்றே சிறந் திருக்கும்; இங்கே இம் மூன்றுஞ் சிறந்திருக் கின்றன. ஆதலால் இந்தத் தலத்தை அடைந் தவர்களெல்லாருக்குஞ் சித்த சுத்தியும் பலவித சித்தியும் உண்டாகும். அடியேன் எண்ணுங் கருமம் உண்மையாக முடிவதரிது. அது எப்படி முடிதல் வேண்டுமோ அப்படி விரைந்து முடியும் பொருட்டருள் செய்யும்" என்று விண்ணப்பஞ் செய்து, வணங்கினார். அதற்குச் சிவபெருமான், "இராமா! கேள்: நீ நமக்குத் தென்கிழக்குத் திக்கிலே போய்ச், சமுத்திரத்திலே சேதுகட்டி, இலங்கையிற் சென்று, இராவணன் முதலாயினோரைக் கொன்று, சீதையைச் சிறையின்று நீக்கி, உன்னயோத்தி நகரத்துக்குத் திரும்பிப், பலகாலம் அரசு செய்துகொண்டிருந்து, பின் வைகுண்டமடையக் கடவாய். கவலை கொள்ளாதே" என்று அசரீரி வாக்காக அருளிச் செய்தார்.

சீராமர் அதுகேட்டு, மனமகிழ்ந்து வணங்கி, விடைபெற்றுக் கொண்டு போய்ச் சேதுபந்தனஞ் செய்து, இலங்கையிற் சென்று, இராவணனைக் கொன்று, அவனுடைய அரசை அவன் தம்பியாகிய விபீஷணனுக் குக் கொடுத்துச், சீதையோடு மீண்டுவந்து, சேதுவிலே சிவலிங்கப் பிரதிட்டை செய்து, பிரமகத்தியினின்று நீங்கிச், சோமசுந்தரக் கடவுளை மீளவும் வந்து வணங்கிக் கொண்டு அயோத்தி நகரத்தை அடைந்தார். அது நிற்க.

அனந்தகுண பாண்டியன் குலபூடண பாண்டியனைப் பெற்று அவனுக்குத் தன் அரசைக் கொடுத்துவிட்டுத் தான் சிவ லோகத்தை அடைந்தான்.

## (முப்பதாவது)
## மெய்க் காட்டிட்ட படலம்

குலபூடண பாண்டியனுக்குச் சுந்தர சாமந்தன் எனப் பெயர் கொண்ட சேனாபதி ஒருவன் இருந்தான். அவன், சிவனடியாரைச் சிவனெனக்கொண்டு பூசிக்குங் கடப்பாட்டு நெறியிலே நின்றான். அவன் பாண்டியனுக்கு இருமைக்குந் துணையாய் ஒழுகு நாளிலே, வேடர்களுக்கு அதிபதியாகிய சேதிராயன் என்பவன் விறல்வலியான் மேலிட்டுப், பாண்டி யன் மேற் படையெடுத்துச் செல்ல நினைந் தான். அதைப் பாண்டியன் அறிந்து, தன் சேனாபதியாகிய சுந்தர சாமந்தனைப் பார்த்துச், "சேதிராயனென்பவன் நமக்கு விரோதமாகப் படையெடுக்க எண்ணியிருக் கின்றான். அவன் மிக வலியவன்; ஆதலால் நீ நமது பொன்னறையைத் திறந்து, வேண்டுந் திரவியங்கள் எடுத்து, நானா சாதியாருள்ளும் இன்னும் சில சேனைகள் சம்பாதிக்கக் கட வாய்" என்றான்.

அதுகேட்ட சுந்தரசாமந்தன், பாண்டிய னுடைய ஆஞ்ஞை பின்றள்ளச், சிவபெரு மானுடைய திருவருள் முன்னிழுப்ப, விரைந்து போய்ப், பொன்னறையைத் திறந்து, தன்னவா அமையத்தக்க திரவியங்களைக் கைக் கொண்டு எண்ணிறந்த களிப்போடு திருக் கோயிலையடைந்து, பொற்றாமரை வாவியிலே

*நம்பிக்கையற்றவன் எந்த உலகிலும் இன்பம் காண முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்நானஞ் செய்து, சிவபெருமானை வணங்கி நின்று, "அடியார்கள் எண்ணிய கருமமெல்லாம் முடிக்கும் எம்பெருமானே! இத் திரவியங்களெல்லாம் உமக்கும் உம்முடைய மெய்யடியார்களுக்குமே ஆகக் கடவன" என்று வேண்டிக்கொண்டு, அவைகளைச் சிவ புண்ணியங்களிலே செலவழிப்பனாயினான். சிவபெருமானுக்குத் திருக்கோபுரங்களும், ஆயிரங்கான் மண்டபமும், இரத்தினாபரணங்களும், குடைகளும், கொடிகளுஞ் செய்வித்தான். யாவராயினும் விபூதியும் உருத்திராட்சமுந் தரித்தவரைக் கண்டால், "இவரே நம் பிறப்பறுக்க வடிவெடுத்த சிவபெருமான்" என்று அவரை விரைந்தெதிர்கொண்டு, வணங்கி, அழைத்து வந்து, திருவமுது செய்வித்து, அவர் புசித்து எஞ்சியதே புசிப்பான். இன்றைக்காயிரம் நாளைக்கிரண்டாயிரம் என்று இப்படி அன்றைக்கன்று இரு மடங்காக, அரசனுடைய பொருள்களெல்லாவற்றையுஞ் சிவபெருமான் பொருட்டுஞ் சிவனடியார் பொருட்டுஞ் செலவழித்துக்கொண்டு வந்தான். இந்தச் சமாசாரத்தைச் சிலர் போய்ப் பாண்டியனுக்குத் தெரிவித்தார்கள்.

சுந்தரசாமந்தன், தன் மேலே பாண்டியன் ஐயுறாவண்ணம், அவன் சபையிலே போய்ப், பிறதேசத்து வீரர்களுக்குத் திரவியம் அனுப்பி, ஓலை விடுத்து, அவர்களை அழைப்பவன் போலப் பாவகஞ் செய்து, காரியகாரர்களை நோக்கி, "தெலுங்கர்களுக்கு ஓலை எழுதுங்கள்; கலிங்கர்களுக்கு ஓலை எழுதுங்கள்; விராடர்களுக்கு ஓலையெழுதுங்கள்; மராடர்களுக்கு ஓலையெழுதுங்கள்; கொங்கர்களுக்கு ஓலையெழுதுங்கள்; வங்கர்களுக்கு ஓலையெழுதுங்கள்; துருக்கர்களுக்கு ஓலையெழுதுங்கள்" என்று சொல்லிப் பொய்யோலை எழுதுவித்து அனுப்பினான். சுந்தரசாமந்தன் இப்படியே எங்கும் ஓலையனுப்பிவிட்டிருப்ப, ஆறுமாசம் வரையுஞ் சேனைகளுடைய வரவைக் காணாது, பாண்டியன், சுந்தரசாமந்தனை அழைத்து, "நாளைச் சூரியன் படுமுன் சேனைகளெல்லாவற்றையும் அழைக்கக் கடவாய்" என்றான். அதற்கேற்பச் சுந்தரசாமந்தன் இசைந்து போய்ச், சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! பாண்டியன் தந்த திரவியங்களெல்லாவற்றையுங் கொண்டு, தமியேனைப் பணிகொண்டருளினீரே. இனிச் சேனைகளுக்கு யாது செய்வேன்?" என்று விண்ணப்பஞ் செய்துகொண்டு நின்றான். அப்பொழுது, "அடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே விரதம் பூண்ட" சிவபெருமானுடைய திருவருளினாலே ஆகாயத்தினின்றும், "நாளைக்கு நாம் சேனையோடு வந்து தோன்றுவோம். நீ பாண்டியன் சபையிலே போயிரு" என்று ஓரசரீரி வாக்குத் தோன்றிற்று. அதுகேட்ட சேனாபதி உவகை வெள்ளத்தாழ்ந்தான். சூரியன் அத்தமித்தான்.

மற்றைநாட் காலையிலே, சுந்தரசாமந்தன் எழுந்து, திருக்கோயிலையடைந்து, பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கிக் கொண்டு பாண்டியனுடைய அரண்மனைக்குச் செல்வானாயினான். அப்பொழுது சிவபெருமான், சங்குகன்னர் முதலிய பிரதம கணங்களும் குண்டோதரர் முதலிய பூதவீரர்களுஞ் சேனை வீரர் வடிவங்கொண்டு பதினெண் படைக்கலங்களையுந் தரித்துப் புறங்காப்ப, நந்தி மகாகாளர் பிருங்கி நிகும்பர் கும்போதரர் முதலிய கணநாதர்களெல்லாரும் நெற்றியிற் திரிபுண்டரந் தரித்துச், சட்டையிட்டு, வாளேந்திக், குதிரைச் சேவர்களாய் சூழச், சாமரைகளும் பீலிக் குஞ்சங்களுங் குடைகளும் கொடிகளும் நெருங்கப், பலவித வாத்தியங்கள் ஒலிக்கத், தமதிடபத்தையே குதிரையாக்கி, அதன்மேல் ஏறிக்கொண்டு, ஒற்றைச்

*முடியாது என்பது முட்டாளின் தத்துவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகராய் எழுந்தருளி வந்தார். சேனையின் வரவைக் கண்ட சுந்தரசாமந்தன் பாண்டியனுக்குப் போய் விண்ணப்பஞ் செய்யப், பாண்டியன் மனமகிழ்ந்து தலைக்கடை வாயிலில் வந்து, அங்குள்ள மண்டபத்திலே சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து கொண்டு, சேனைச் சிறப்பை நோக்கிப், பெருங்களிப் புற்று, "இவர்கள் எவ்வெத் தேசத்திலுள்ள வர்கள்" என்று வினாவினான். சுந்தரசாமந்தன் பாண்டியனெதிரே நின்று, அவ்வத் தேசத்தா ரெல்லாரையும் அணியணியாக நிறுத்திக் கொண்டு, கையிற் பிரம்பை நீட்டி, "மகா ராசாவே! இவர்கள் கொங்கதேசத்தார்; இவர்கள் குரு தேசத்தார்; இவர்கள் கங்க தேசத்தார்; இவர்கள் கன்னட தேசத்தார்; இவர்கள் அங்க தேசத்தார்; இவர்கள் ஆரிய தேசத்தார்; இவர்கள் வங்க தேசத்தார்; இவர்கள் மாளவ தேசத்தார்; இவர்கள் குலிங்க தேசத்தார்; இவர்கள் கொங்கண தேசத்தார்; இவர்கள் தெலுங்க தேசத்தார்; இவர்கள் சிங்கள தேசத்தார்; இவர்கள் கலிங்க தேசத்தார்; இவர்கள் கௌட தேசத்தார்; இவர்கள் ஒட்டிய தேசத்தார்; இவர்கள் கொல்ல தேசத்தார்; இவர்கள் கூர்ச்சர தேசத்தார்; இவர்கள் பல்லவ தேசத்தார்; இவர்கள் பப்பர தேசத்தார்; இவர்கள் சேர தேசத்தார்; இவர்கள் விதேக தேசத்தார்; இவர்கள் கடார தேசத்தார்; இவர்கள் கேகய தேசத்தார்; இவர்கள் மகத தேசத்தார்; இவர்கள் மராட தேசத்தார்; இவர்கள் காஞ்சி தேசத்தார்; இவர்கள் நம்முடைய தேசத்தார்" என்று மெய்க்காட்டி அறிவித்தான். "இத்துணைத் தூர தேசங்களிலுள்ளவர்களை இங்கே அழைத்தது எங்ஙனம் என்று வினாவியருளற்க. உம்முடைய திரவியங்களெல்லாவற்றையும் வரையாது செலுத்தினதினால், இவர்களெல்லாரும் வந்தார்கள்" என்றான். பாண்டியன், அந்தச் சேனையினுள்ளே தூரத்திலே குதிரையேறிக்கொண்டு பின்னின்ற ஒற்றைச் சேவகரைப் பார்த்து, "இவர் யாவர்?" என்றான். சுந்தரசாமந்தன் வணங்கி, "இந்தச் சேனை வெள்ளத்தினுள்ளே இவரை யாவ ரென்றறியலாம்" என்றான். பாண்டியன், "அவரை இங்கே அழை" என்றான். உடனே அவ்வொற்றைச் சேவகர் அப்பாண்டியனெதிரே சென்றார். பாண்டியன் மகிழ்ந்து இரத்தினா பரணங்களையும் பீதாம்பரங்களையும் கொடுத்தான். ஒற்றைச் சேவகர், தம் அன்பனாகிய சுந்தரசாமந்தன் பொருட்டு வாங்கித், தரித்துத், தம்முடைய தமர்களுக்குங் கொடுத்துக், குதிரையைத் தூண்டி, ஐங்கதி நடத்திக் காட்டித், தமது சேனைவெள்ளத்தினுள்ளே போயினார்.

அப்பொழுது "சேதிராயன் வேட்டைக்குப் போய்ப் புலியினால் இறந்து விட்டான்" என்று ஓரொற்றன் வந்து, பாண்டியனுக்குச் சொன்னான். பாண்டியன் சுந்தரசாமந்தனுக்கு அளவில்லாத வரிசைகளையுந் தலைமையையுங் கொடுத்து, "இந்தச் சேனைகளைத் தங்கள் ஊருக்குப் போகும்படி செலுத்தக் கடவாய்" என்றான். சுந்தரசாமந்தனும் அப்படிச் செலுத்துவான் போன்று நிற்பச், சிவபெருமான், மனித வேடங்கொண்ட வீரர்களோடும், அங்கு நின்றபடியே மறைந்தருளினார். பாண்டியன் அதுகண்டு அற்புதமடைந்து, "இது சிவபெருமானுடைய திருவிளையாடல்" என்று நினைந்து, கண்ணீர் பொழிய, உரோமஞ் சிலிர்ப்ப, மெய்யன்பு வடிவமாயினான். தனக்கு உயிர்த்துணையாய் நின்ற சுந்தரசாமந்தனை நோக்கி, "உனக்குச் சிவபெருமான் எளிவந்தாரென்றால், எனக்கு அச் சிவபெருமான் நீயே" என்று அவனுக்கு யாவுங் கொடுத்து, மனக்கவலையின்றி வாழ்ந்திருந்தான்

*நிதானமாக ஆலோசி. ஆனால் துணிவுடன் செயற்படு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயங்களில் தத்துவம்

*— திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் —*

நாம் வாழும் இப் பூமியின் படைப்பு அதி அற்புதமானது. பூமியில் பல்வேறுபட்ட பொருட்களைக் காண்கின்றோம். எங்களையும் உள் அடக்கித்தான். இவற்றை சற்று நேரம் ஒதுக்கி, கூர்ந்து ஆராய்ந்தால் அவை ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு உண்மையை நாம் அறியலாம். இப் பிரபஞ்சத்திலே ஒரு பொருளை முற்றிலும் ஒத்திருக்கிற மற்றொரு பொருளாகக் காண்பதரிது. உயிர் வாழ்வன, உயிர் அற்றன ஆகிய அனைத்துக்கும் இது பொதுவான உண்மை. இந்தப் பேதத்தை உருவாக்குவது சிருஷ்டி. படைத்தவன் படைத்திருக்கும் திறமைக்கு இந்த வேறுபாடே சான்று ஆகின்றது.

சமயங்களும் அவ்வாறே. உள்ளத்தின் இயல்புக்கேற்றவாறு சமயங்களும் பல தரப்படுகின்றன. உடல் வேற்றுமையை விட உள வேற்றுமையே மனிதனைத் தரம்பிரிக்க நன்கு உதவுகின்றது. அவரவர் மனப்பக்குவத்துக்கு ஏற்ப மேலோர் என்கின்றோம் கீழோர் என்கின்றோம். உடலுக்கு உறுதி அளிக்கும் உணவு வகைகளை போஷாக்குணவு என்றாற் போல் மனதை பண்படுத்துவனவற்றை மேலான சமயங்கள் என்கிறோம்.

சமயங்களை, சீர்தூக்கிப் பார்ப்பது எளிதான காரியமன்று. சில செயற்பாடுகளில் கொள்கைகளில் சமயங்கள் வேறுபடலாம். ஆனால், நோக்கங்கள் பொதுவாக ஒத்திருக்கும். உதாரணமாகப் பாருங்கள். விக்கிரக ஆராதனை பண்ணுவது ஒரு மதத்தாருக்கு தேவ நிந்தனையாகவும் பாவச் செயலாகவும் தெரிகிறது. அதே நேரத்தில் இதே செயல் மற்றொரு மதத்தினருக்கு சிறந்ததோர் சாதனமாக தெரிகிறது. மாறுபட்ட இந்த இரு கோட்பாடுகளையும் மனிதன் தன் முன்னேற்றப் பாதையிலே சந்திக்கின்றான். ஒருவரது உடலுக்கு அமுதமாக அமைவது மற்றொருவருக்கு விஷமாக அமையலாம். எனவே, நாம் எமது குறிக்கோளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சமயங்களைப் பொறுத்த அளவில் அவரவர் நெறியில் நின்று முன்னேற்றமடையவே நாம் கடமைப்பட்டுள்ளோம். சமயங்கள் பல ஒரு சமயம் மற்றொரு சமயத்துக்கு அளவுகோல் ஆகாது.

மதங்கள் பல அமைந்திருப்பதுவும், இறைவனின் செயற்பாடு எனலாம். சிருஷ்டியே, தன் குழந்தையின் உடல் நிலைக்கு ஏற்றவாறு தாயானவள் உணவு வகைகளை வேறுபடுத்திச் சமைப்பதுபோல், மாந்தரது மன நிலைக்கு ஏற்றவாறு பல சமயங்கள் இறைவனால் வகுத்துத் தரப்பட்டுள்ளன. பலதரப்பட்ட சமய ஆச்சாரியர்கள் நம்மிடையே அமையப்பெற்றதுவும், இறைவனது மிகப் பெரிய திட்டமென்றே கூறவேண்டும்.

அவனன்றி அணுவும் அசையாது அல்லவா!

எவ்வாறு ஒரு மரத்தின் தரத்தை அதனின்று பெறப்படும் கனியிலிருந்து அறிகின்றோமோ அதேபோன்று ஒரு சமயத்தின் தரமும் அதனின்று உருவாகும் சான்றோர்களைக் கொண்டு அறியப்படுகின்றது. சான்றோர்களை உருவாக்குவதே சமயங்களின்

*ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் மரணம் தள்ளிப்போடப்படுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு நோக்கமாகும். இறைவனது பேரருளுக்குப் பாத்திரமான இந்த மகான்கள் வையத்தில் என்றென்றும் வாழ்வாங்கு வாழ்கின்றார்கள். ஒன்று அவர்களது வரலாறு; அவர்களது தூய வாழ்வில் இடம்பெற்ற இறைவனின் அருட்செயல்கள்.

இரண்டாவது, அவர்கள் தமது தெய்வானுபவங்களை வைத்து ஆக்கித் தந்த நூல் வகைகள், பாடல்கள், தோத்திரங்கள் என்பனவாம்.

உதாரணமாக, எமது சமயத்தை எடுத்துக்கொள்ளுங்கள், நாயன்மார்கள், அனுபூதிமான்கள், இன்றும் எம்மத்தியில் வாழ்ந்துகொண்டுதானிருக்கிறார்கள். உதாரணமாக, ஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள், சுந்தரர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் இவர்களது தேவாரப் பதிகங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருப்புகழ், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், இராமலிங்க சுவாமிகள் பாடல்கள் யாவும் எமது மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதுடன் எம்மையும் வாழ வைத்துக்கொண்டிருக்கின்றன.

தேவார திருவாசகங்கள் எமது சைவ சமயத்தைப் பொறுத்தமட்டில், ஆத்ம சாதகனுக்குரிய அருட் பொக்கிஷங்களாக உள்ளன. உதாரணமாக, திருவாசகத்தை எடுத்துக்கொள்வோம். திருவாசகம் படிப்பவனுக்கு அவனது பக்குவத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. எவ்வாறு தரையில் விழுந்த ஒரு மீனானது தனது சொந்த நீர்ப்பரப்பை விட்டு விலகியதை உணர்ந்து, துள்ளித் துடித்து, பின் சதுப்பு நிலத்தை எட்டிவிட்டால் சிறிது ஆறுதல் பெற்று, மேலும் ஒரு நீர்நிலையை அடைந்தால் கொஞ்சம் நிம்மதி பெற்று, மீண்டும் அதனது எத்தனத்தில் ஒரு ஆற்றையோ ஆழ்கடலையோ அடைந்தால் தனக்கேற்ற வீடு கிடைத்தாற்போல் நிம்மதி அடைகிறதோ அதேபோன்றுதான், இறைவனைப் பிரிந்து வந்த ஆத்மாவின் நிலையும். கடவுளிடமிருந்து பிரிந்து பிரபஞ்ச வாழ்வுக்கு வந்துள்ள மனிதனது ஆத்மாவின் நிலையும் இதுவேதான். தெய்வநிலை பெற அவன் பிறவிகளில் பல்வேறு அல்லல்களை, நிலைகளைத் தாண்டி ஈற்றில், “மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்” என்று அவனது முடிவான நிலையை எய்துகின்றான். ஆதியோடு அந்தமாக, இச் சகல நிலைகளிலும் வழிபாட்டுக்கு அவனுக்கு உதவுபவை பக்திச்சுவை தோய்ந்த தேவார திருவாசகப் பாடல்களாகும்.

எனவே, நாமும் எமது வாழ்வில் தினமும் சிறிதளவு நேரத்தை தேவார திருவாசகத்துக்கு ஒதுக்குவோம்.

**கந்தனைக் கண்டால் போதும்**
**காட்டுவான் நல்ல வாழ்வு**

சந்நிதி வேலனை நம்பி
சகலரும் வருகிறார் இங்கு
வந்திடும் துன்பம் எல்லாம்
வடிவேல் முருகன் தீர்ப்பான்
சிந்தையில் நம்பிக்கை ஒன்றே
சிறிதும் சஞ்சலம் இல்லை
கந்தனைக் கண்டால் போதும்
காட்டுவான் நல்ல வாழ்வு.

-வ. யோகானந்தசிவம்-

*உழைப்பிற்குத் தகுந்த பலன் ஒருநாள் கட்டாயம் கிடைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 44

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நீரோடு நெருப்பிருக்கும் சூட்டோடு குளிரும்போல்
வானோடு காற்றிருக்கும் ஈரமும் வெப்பமும்போல்
நிலத்துள்ளே நிறைந்திருக்கும் ஈர்க்கின்ற சக்தியும்போல்
இறையோடு நிறைந்திருக்கும் கிருபையையும் உணர்ந்திடுவீர்.

02 சும்மா சொல்லிடலாம் என்றெதையும் சொல்லாதீர்
சொல்வதே உண்மையாகி உமக்கிங்கே பலித்துவிடும்
பலித்துவிடும் என்பதைப் பாரில்நீர் உணர்ந்துகொண்டு
சொல்வதையும் செய்வதையும் உண்மையோடு செய்திடுவீர்.

03 தரமற்ற ஒன்றைநீர் பிறர்தலையில் சுமத்திவிட்டு
பெருநஷ்டம் அடையாமல் லாபங்கள் ஈட்டலிலும்
உம்மோடு நஷ்டமது போகட்டும் எனநடந்தால்
இணையில்லா லாபத்தை இறுதியிலே அடைந்திடுவீர்.

04 விரலுக்கு ஏற்றபடி வீக்கமதைத் தேடாமல்
உரலுக்கு ஏற்றபடி வீக்கத்தைத் தேடிப்பின்
விரலாயும் உரலாயும் இல்லாமல் போவதிலும்
வரவுக்கு ஏற்றபடி செலவுசெய்வீர் வாழ்ந்திடுவீர்.

05 நல்லவற்குக் காலமில்லை என்றுஓர் கதைசொல்லி
கெட்டவராய் வாழ்வதைநீர் நியாயப் படுத்தலிலும்
காலத்தால் நல்லதையே கடைசிவரை செய்திடுவீர்
கெட்டவரும் விட்டவற்றை நல்லவராய் மாறிடுவர்.

06 மலர்விரிந்து மணம்பரப்பி மாலையிலே மடிதல்போல்
காய்காய்த்துக் கனியாகி கடவுளையும் அடைதல்போல்
மானிடராய்ப் பிறந்தோரும் தன்கடன் முடிந்திருந்தால்
மறுபிறப்பில் மகத்தான இறைவனையே அடைந்திடலாம்.

*காலத்தின் மதிப்புத் தெரிந்தால்த்தான் வாழ்க்கையின் மதிப்பு தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 தன்வீட்டு நிலமைகளால் தவிக்கின்ற ஒருவரிடம்
உம்வீட்டு நிலமைசொல்லி உள்ளதையும் கெடுத்திடாதீர்
அவர்வீட்டு நிலமைமாற அனுசரணை காட்டுமவர்
உம்வீட்டு நிலமைமாற உரியநேரம் உதவிடுவார்.

08 குழந்தையிலே எல்லாமும் அழகாக இருப்பதெல்லாம்
வளர்ந்தவர்கள் வாஞ்சையுடன் வளர்த்தெடுக்கத் தானாகும்
வயோதிபத்தில் எல்லாமே அசிங்கமாக இருப்பதெல்லாம்
இறப்பென்ற பிரிவதனை இடரின்றித் தாங்குதற்காம்.

09 அடுத்தவரின் ஒன்றைநீங்கள் உமதாக்கிக் கொள்ளஎண்ணில்
உம்முடைய ஏதோஒன்றை இழந்தேதான் ஆகவேண்டும்
உமதையும் நீரிழந்து அடுத்தவரது அவற்கேயானால்
அபகரிப்பின் விலையைநீங்கள் அதிகமாய்த்தான் கொடுக்கவேண்டும்.

10 தன்னைப்பற்றியே என்றும் சிந்தித்து வாழ்பவர்கள்
ஏதோஒரு வகையில் சிறையில்தான் வாழ்கிறார்கள்
தன்னோடு பிறரையும் சிந்தித்து வாழ்பவரே
விடுதலை என்றவானில் சிறகடித்துப் பறக்கிறார்கள்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

தொ.இல – 0213219599, 0212263406

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*வாழ்க்கையில் முன்னேறும்போதுதான் உழைப்பின் உன்னதம் புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத நம்பிக்கைகளில் ஊடகங்களின் பங்களிப்பு

– செல்வி கோ. சர்மிளா அவர்கள் –

இந்து மதமானது என்றும் நிலைத் திருக்கும் வாழ்வியல் தர்மம் எனப்படும் சனாதன தர்மமேயாகும். பிரசாரங்கள் எதுவு மில்லாது அதன் தனித்துவம் குறையாமல் வளர்ந்து வருகின்றது. உயிர் ஊற்றாகிய மதத் தத்துவங்களையும், ஆன்மிகக் கருத் துக்களையும், வாழ்வியல் கருத்துக்களையும் அண்டபேரண்டங்களுக்குள் உள்ள சாதாரண மனிதனுக்கும் உரைக்கும் மங்கள ஒளி பொருந்திய ஆற்றலைத் தன்னுள்ளே கொண் டுள்ளது. இவ்வாறாக இன்றளவிலும் இந்து மதத்தின் தனித்துவம் பேசப்படுகிறதென்றால் அதற்கு முதன்மை காரணமாக அமைவது இந்து மத நம்பிக்கைகளேயாகும்.

ஒருவன் வாழ்வில் முன்னேற்றம் அடையப் பெரிதும் உதவுவது நம்பிக்கையே ஆகும். கவியரசு கண்ணதாசன் நம்பிக்கை கொண்டு எந்தச் செயலையும் செய்யவேண்டும் என்பதனை தனது திரையிசைப் பாடலில் சுட்டுகின்றார்.

“கடலுக்குப் பயந்தவன் கரையில் நின்றான் - அதைப் படகினில் கடந்தவன் உலகைக் கண்டான். பயந்தவன் தனக்கே பகையாவான் என்றும் துணிந்தவன் உல கிற்கு ஒளியாவான்”

நம்பிக்கையே மனிதனை உயர்த்து கின்றது. மனிதனின் நம்பிக்கையை வளர்ப் பதில் மதம் செல்வாக்குச் செலுத்துகின்றது. வெற்றி பெற்றவனுக்கு மட்டுமல்லாமல் தோற்றவனுக்கும் கடவுள் காட்சியளிக்கின்றார். கடவுள் நம்பிக்கை என்பது ஏதாவது ஒரு வடிவில் அனைவருக்கும் இருந்தே தீருகின்றது. எனினும் இறை நம்பிக்கை ஒவ்வொரு மனி தனிடமும் முழுமையாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் எம்மால் பூரண பலனைப் பெறமுடியும் என்ற கருத்தினைப் பல வழி களில் சான்றோர்கள் வெளிப்படுத்தியிருக்கின் றனர். இவ்வாறான இந்துமத நம்பிக்கையை வழிப்படுத்தும் முயற்சியை மேற்கொள்வதில் ஊடகங்கள் முதன்மையிடம் பெறுகின்றன.

ஊடகம் என்பது வெறுமனே பொழுது போக்கிற்கு இயங்கும் துறையல்லாமல் பொறுப்பான ஒரு துறையாகவும் இன்றைய நிலையில் அடையாளங் காணப்பட்டுள்ளது. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை எது வென்றாலும் மனிதர்களை சிந்திக்கவோ சிரிக்கவோ வைத்தபடிதான் நகர்கின்றது. ஒவ் வொரு ஊடகவியலாளர்களும் ஒரு விடயத் தைக் கையிலெடுக்கும் போதும் இது நிச்சயம் மக்களை சென்றடைய வேண்டும் என்றே உழைக்கின்றனர். ஊடகங்கள் மக்களின் பொழுதுபோக்கினைப் பூர்த்தி செய்யும் அதே வேளை அவர்களின் உடல் ரீதியான ஆரோக் கிய செயற்பாடுகளையும், உளரீதியான மகிழ்ச் சிக்குரிய செயற்பாடுகளையும் முன்னெடுத்து மக்களை சிறப்பான முறையில் நெறியாள்கை செய்யும் துறையாகவும் காணப்படுகின்றது. இவ்வகையில் ஊடகங்கள் ஆற்றிவரும் பல செயற்பாடுகளில் எம்மால் முதன்மையானதாக அடையாளங் காணப்பட்ட விடயம் இந்துமத

*வெற்றிபெறும் ஒவ்வொரு செயலும் ஒரு குறிக்கோளாக ஆகிவிடுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை சார்ந்ததாகும். இவை இந்து சமய நம்பிக்கைகளை உலகறியச் செய்யும் நோக்குடன் இந்துப் பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்துப் பண்பாட்டம்சங்களில் உள் அடங்கும் சமயம் நம்பிக்கையின் வெளிப்பாடு ஆகும். பாரம்பரியக் கலைகள், சடங்குகள், ஆலயங்களும் பூசை முறைகளும், ஆன்மீகம் சார்ந்த இந்து மருத்துவ சிந்தனைகள், ஜோதிட பலன், இலக்கியம் போன்ற பல பண்பாட்டம்சங்கள், பொழுதுபோக்கு நிகழ்வுகளுடன் இணைத்து மக்களின் பார்வைக்கு கொண்டு சேர்த்தல் ஊடகத்தின் சிறப்பான பணியாகும்.

இந்துமத நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் இடங்களுள் ஆலயம் முதன்மையானது. ஊடகங்களான தொலைக்காட்சி, வானொலிகளில் தினமும் அதிகாலையில் புகழ்பெற்ற ஆலயங்களையும் அவ்வாலயங்களின் பூஜைகளையும் அதன் நடைமுறைகளையும் இசைநயத்துடன் ஒளிபரப்பப்படுவதனைக் காணமுடிகின்றது. இத்தகைய செயற்பாடானது மக்கள் தினமும் எச்செயலைத் தொடங்கும் முன்பும் இறைவழிபாடு அவசியம் என்ற நம்பிக்கையை உணர்த்துகின்றது. இறைநம்பிக்கையுடன் எச்செயலைத் தொடங்கினாலும் நன்மை பெறலாம் என்பது இந்துசமய நம்பிக்கை ஆகும். இவற்றுடன் பிரசித்திபெற்ற ஆலயங்களின் பெருமைகளை வெளிப்படுத்துவதனையும் அவதானிக்கலாம். இந்திய தமிழ் தொலைக்காட்சிகளில் "அற்புதங்கள் தரும் ஆலயங்கள்" என்ற தலைப்பில் ஆலயங்களின் வரலாறு, மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்கள் எடுத்தியம்பப்படுகின்றன.

இந்துமத நம்பிக்கையை பலப்படுத்துவதில் ஜோதிட பலன்களுக்கு முதன்மையிடம் கொடுக்கப்படுகின்றது. இந்துக்கள் தம் ஒவ்வொருவரின் பலன்களைத் தெரிந்துகொள்வதில் ஆர்வமுடையவர்கள். தமது இராசிக்குரிய பலன்கள் ஜோதிடங்களில் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை அவதானித்தே அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். ஆதலால், இந்து மக்களின் ஜோதிட பலன்களை கூறுவதில் ஊடகங்கள் தனித்துவம் பெறுகின்றன. "நல்ல நேரம் பிறக்குது", "ஒளிமயமான எதிர்காலம்", "இராசி பலன்" ஆகிய தலைப்புகளில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளில் ஜோதிட பலன்கள் கூறப்படுகின்றன. இராசி பலன்களில் சங்கடம் உள்ளவர்கள் எவ்வாறான வழிகளில் இறைவழிபாடாற்றி நிவிர்த்திக் கடன்களை செய்தால் பலன் கிடைக்கும் என்ற விதிமுறைகள் புகழ்பெற்ற ஜோதிடர்களால் கூறப்படுகின்றன. நம்பிக்கையுடன் அவர்கள் கூறும் வழிபாடுகளை ஆற்றினால், ஒளிமயமான எதிர்காலம் எமது வாழ்விலும் ஏற்படும் என்ற உணர்வினை இந்துக்கள் மத்தியில் தூண்டுவதில் ஊடகங்கள் பெரும் பங்காற்றுகின்றன.

இந்துமத நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் ஊடகங்களில் பாரம்பரிய கலைகள் மற்றும் சடங்குகள் பற்றிக் கூறப்படுகின்றது. இன்றளவிலும் பாரம்பரிய கலைகளை பேணும் துறை ஊடகம் என்றே கூறலாம். இசைக்கலை, நாட்டியக்கலை, இசை வாத்தியங்களை மீட்டல்போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிப்பதனூடாக பாரம்பரிய கலைகள் மேலும் வளர்ச்சியடைவதற்கு ஊடகங்கள் வித்திடுகின்றன. இந்திய தமிழ் தொலைக்காட்சிகளில் கலைகளின் வெளிப்பாடுகளை பெருமளவில் காணமுடிகின்றது. கலைத்துறையில் ஆர்வம் உள்ளவர்களை மேலும்

*பொறுமையைக் கடைப்பிடிப்பவன் எல்லாவற்றையும் அடைவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்கும் வகையில் ஊடகங்கள் செயல் ஆற்றி வருகின்றன. சாதனைகள் படைப்பதற்கு வறுமை தடையாக இருத்தலாகாது என்ற நம்பிக்கையை மக்கள் மனங்களில் உணர்த் தும் வகையில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி அனைவரினதும் விருப்பங்களை பூர்த்திசெய்யும் களமாக ஊடகங்கள் மிளிர் கின்றன.

இந்துக்களின் பண்பாட்டம்சங்களுள் சடங்குகள் பிரதானமானவை. மதச் சடங்கு களை ஊடகங்கள் சிறப்படையச் செய்யும் பொருட்டு பணியாற்றி வருகின்றன. பண்டி கைக் காலங்களில் பாரம்பரிய விளையாட்டுக் கள் ஊடகவியலாளர்களால் நடத்தப்படுகின் றன. இவற்றை பொழுதுபோக்கிற்காகப் பார்வை யிடுவதை எம் மக்கள் நோக்காகக் கொண்டா லும் பாரம்பரிய பண்பாட்டம்சங்கள் எல்லோ ரையும் சென்றடைவது போற்றுதற்குரியதாகும். மக்களின் பொழுதுபோக்கின் பொருட்டே பல நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பினும் அவற்றினூடாக இந்து சமய நம்பிக்கைகள் கடத்தப்படுவது மிகவும் சிறப்பானதாகும். மக் களுக்கு எவ்வாறான முறையில் இத்தகைய இறை நம்பிக்கை சார்ந்த கருத்துக்களை சென்றடையச் செய்தால் அவர்கள் பயன்பெறு வார்கள் என்பதை உணர்த்துமுகமாக சில நிகழ்ச்சிகளை ஊடகங்கள் ஒழுங்கமைத்து வருகின்றன.

ஆன்மீகக் கருத்தரங்குகளை மாதம் ஒருமுறை நடத்துவதன்மூலம் இந்துமத நம்பிக்கைகள் வளப்படுத்தப்படுகின்றது. இக் கருத்தரங்குகளில் இந்து மருத்துவத்தின் சிறப் பம்சங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. இந்துக்கள் அனைவரையும் ஒழுக்கசீலர்களாக உருவாக் கும் பொருட்டு இத்தகைய கருத்தரங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இந்து இலக்கியங்களின் பெருமைகளை கூறுவதன் மூலமும் இந்துமத நம்பிக்கையின் மேன்மை யைக் காணலாம். இறை நம்பிக்கையை பெருமையுடன் கூறும் திருப்புகழ், கந்தரனுபூதி போன்ற பல பக்தி நூல்களின் பாடல்களுக் கான பொருள் விளக்கம் அளிக்கப்பட்டு இறை வனை நம்பிவாழ்ந்த அனுபவ நெறியாளர் களின் வாழ்க்கை நிகழ்வுகளைக் கூறுவதன் மூலம் மக்களின் வாழ்க்கை மேண்மையடையும் பொருட்டு ஊடகங்கள் செயற்பட்டு வரு வதனை சமய அனுபவம் தொடர்பான நிகழ்ச் சிகள் மூலம் அவதானிக்கலாம்.

ஊடகங்களில் இறை அனுபவத்தை யும் இறை நம்பிக்கையின் சிறப்பையும் வெளிப்படுத்தும் பக்திசார்பான தொடர் கதை கள் ஒளிபரப்பப்படுகின்றன. தொடர் கதைகள் எனின் மக்களை விரைவில் கவர்ந்திழுக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்கள் விரும்பும் வகையிலும் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையிலும் இந்துமதத்தின் பெரு மைகள் எடுத்தாளப்படுகின்றன. விநாயகர், சனீஸ்வரன், விஷ்ணு தசாவதாரம், ராதா கிருஷ்ணன், இராமானுஜர், இராமாயணம், மகாபாரதம், காக்கும் தெய்வம் காளி போன்ற தொடர் கதைகளை உதாரணமாகக் கூறலாம். இறைவன்மீது பக்தி செலுத்தி நல்வினை செய்பவர்கள் பெறும் பலனும், தீவினை செய்பவர்கள் பெறும் துன்பமும் மற்றும் இறைவன்மீது அன்புகொண்ட அடியவர்கள் பெறும் நற்பேறும் இத் தொடர்கதைகள்மூலம் வெளிப்படுத்தப்படுவது சிறப்பானது. கற்ற வராயினும் கல்லாதவராயினும் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பப்படும் தொடர்கதை களில் அனைவரும் நாட்டம் கொண்டவர்களே. இவர்களின் மனங்களில் இறைநம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்குடன் ஊடகங்கள் பக்தி சார்ந்த தொடர்கதைகளுக்கு முதன்மையிட மளித்துள்ளமை போற்றத்தக்கது.

*உன்னையின்றி உனக்கு தலைவன் வேறு யாரும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் எனப்படுவதே நம்பிக்கை சார்ந்ததாகும். இறை வழிபாட்டில் நம்பிக்கை யுடன் கூடிய வழிபாடே இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும், இந்து மதத்தவ ராக பிறந்த ஒவ்வொருவரும் தமது வாழ்க் கையின் நிலையாமையை அறிந்துகொள்ளல் வேண்டும். இவ்வாறாக இந்து மதம் சார்ந்த நிகழ்வுகளினூடாக மக்களிடையே இறைவன் மீதான பக்தி உணர்வினைத் தூண்டி ஆன்மீக நெறியில் சிறப்பான வாழ்வு வாழ வேண்டும் என்பதுடன் இந்துமதம் சார்ந்த சிறப்பம்சங்கள் எல்லோரிடமும் சென்றடைய வேண்டும் என்ற கருப்பொருளை கருத்திற்கொண்டு ஊடகங்கள் செயலாற்றி வருகின்றமை வரவேற்கத்தக்கது.

---

தெய்வம், சொர்க்கம், நரகம், பாவம், புண்ணியம், மறுபிறப்பு இவையெல்லாம் சமூகத்தில் மக்களை ஒழுக்கத்தில் நிலைநிறுத்த ஏற்படுத்தப்பட்ட விஷயங்களா? அல்லது ஒரு நம்பிக்கையா? அவைகள் இருந்தால் ஏன் நமது கண்களுக்குத் தெரியவில்லை? என்பது பலபேரின் கேள்வி!!! பிறவியிலிருந்தே நமக்குக் கண்கள் தெரியாது என்றால், இந்த உலகத்திலேயுள்ள கோடானுகோடி மக்கள் காண்பது எதையும் எம்மால் பார்க்க முடியாது. எம்மால் பார்க்க முடியவில்லை என்பதற்காக இந்த உலகத்திலுள்ள (மற்றவர்கள் பார்க்கின்ற) பொருட்கள் யாவும் இல்லையென்று கூறிவிடமுடியுமா? குறை நம்மிடமல்லவா? அதேபோன்று உலகத்திலுள்ள பெரும் பாலான மக்களது மனதில் காமம், கோபம், பற்று, பொறாமை போன்ற பல விடயங்கள் நிறைந்திருப்பதனால் இறைவனது காட்சியைக் காணமுடிவதில்லை. இதற்கெல்லாம் திவ்யமான கண்கள் வேண்டுமென்று மகான்கள் கூறியுள்ளார்கள்.

இரவிலே நாம் தூங்குகிறோம். அப்போது நம்முடைய கண்கள் மூடியே உள்ளன. அப்படித் தூங்கிக்கொண்டிருக்கும் நிலையில் நமக்குக் கனவு வருகிறது. அந்தக் கனவில் வரும் காட்சிகளை நாம் அனுபவித்துப் பார்க்கிறோமல்லவா? நமது கண்கள் மூடியே இருக்கின்றன. அப்படி இருக்கும்போது எப்படிக் காட்சிகளைக் கண்டோம்? அவைதான் "மனோமயமான கண்கள்" என்கின்றன புராண இதிகாசங்கள். கனவு காணுகின்ற நம்முடைய மனதிலே உலகப்பற்று இருந்தால் உலகப் பற்றுள்ள விடயங்கள் மட்டும்தான் தோன்றும். இறையருளினாலும் பல பயிற்சிகளினாலும் "பற்று" என்னும் மாசு நம்முடைய மனதிலிருந்து துப்புரவாக நீங்கிவிட்டால், அதி நுணுக்கமான தெய்வீகக் காட்சிகளைக் கனவில் மட்டுமன்றி நேரிலேயும் காணலாம் என்று இப்படியான காட்சிகளை காணுகின்ற கண்களுக்குத்தான் "திவ்வியமான கண்கள்" என்று ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். எனவே நமக்கும் திவ்யமான கண்கள் இருந்தால் பாம்பன் சுவாமிகள் கண்டதுபோன்ற காட்சிகளை நாமும் காணமுடியும்.

*நீ நடந்துபோக பாதை இல்லையே என்று கவலைப்படாதே. நீ நடந்தால் அதுவே ஒரு பாதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| வே. முருகேசு சுவாமிகள் | வவுனியா | 50000. 00 |
| திரு லோகநாதன் | கிளிநொச்சி | 2000. 00 |
| திரு குலேந்திரதாசன் குடும்பம் | கிளிநொச்சி | 100 யூரோ |
| வி. ராஜகோபால் | மட்டக்களப்பு | 1000. 00 |
| திரு கந்தசாமி குடும்பம் | ஆனைக்கோட்டை | 15000. 00 |
| V. சிவஞானசுந்தரம் | லண்டன் | 10000. 00 |
| கௌ. சித்தாந்தன் | ஏழாலை | 5600. 00 |
| சிவசக்தி மில் | வவுனியா | (25kg) 25 புட்டி அரிசி |
| க. நவீன், க. அட்சயா | கனடா | 5000. 00 |
| ஆ. சிவநாதன் | நெல்லியடி | 1000. 00 |
| ஐ. மனோன்மணி | மல்லாகம் | 1000. 00 |
| கு. சந்நிதிச்செல்வி | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| அ. அபிதாஸ், சிவலிங்கம் | சுவிஸ் | 100 சுவிஸ் பிராங் |
| அ. தில்லைநாதன் | ஆவரங்கால் | 2000. 00 |
| J. முருகதாசன் | ஆவரங்கால் | 1000. 00 |
| சுப்பிரமணியம் ஸ்ரோர்ஸ் | அப்புத்தளை | 1000. 00 |
| R. ரவிசங்கர் | வெள்ளவத்தை | 500. 00 |
| பி. ரிஷானா, பி. ரியானா | நெல்லியடி | 10000. 00 |
| த. ரவீந்திரன் | நீர்வேலி | 2000. 00 |
| மு. சந்திரகுமார் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| திரு அறிவுச்செல்வன் குடும்பம் | சுழிபுரம் | 1000. 00 |
| சி. மகாலிங்கம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| ம. சுரேந்திரன் | ஆனைக்கோட்டை | 3000. 00 |
| ப. சந்திரமோகன் குடும்பம் | வெள்ளவத்தை | 10000. 00 |
| ச. தனுஜன் | சாவகச்சேரி | 1000. 00 |
| க. குணசிங்கம் | சாவகச்சேரி | 500. 00 |
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |

அன்பை வெளிப்படுத்த யோசிக்காதே. கோபத்தை வெளிப்படுத்துமுன் யோசிக்க மறந்துவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ர. சுதாகர் | பருத்தித்துறை | 2500. 00 |
| செ. மதுஷிகன் | லண்டன் | 2500. 00 |
| க. சரவணபவன் | மட்டுவில் | 2000. 00 |
| ரூபிகா கந்தையா | கொழும்பு | 5000. 00 |
| த. சந்திரராஜா | மட்டக்களப்பு | 600. 00 |
| ந. ருக்ஷிகா | கனடா | 5000. 00 |
| ஓர் அன்பர் | வட்டு. கிழக்கு | 2000. 00 |
| க. சுதர்ஷன் | சிறுப்பிட்டி | 25000. 00 |
| T. சரஸ்வதி | ஏழாலை | 1000. 00 |
| ம. யதுஷாயினி | ஏழாலை | 1000. 00 |
| ச. தெய்வானைப்பிள்ளை | கரவெட்டி | 6000. 00 |
| கு. ரங்கநாதன் | இணுவில் | 10000. 00 |
| சி. ஞானசுந்தரம் | அச்சுவேலி | 5000. 00 |
| நி. ஆதேஸ் | கொக்குவில் | 2000. 00 |
| செ. ராஜலக்ஷ்மன் | கோப்பாய் | 5000. 00 |
| து. அமுதமலர் | வல்வெட்டி | 1000. 00 |
| திருமதி விஜி கணேஸ் | கந்தர்மடம் | 1000. 00 |
| அ. செல்வி | நல்லூர் | 500. 00 |
| நவிக்கா கிருபாகரன் | U.K | 3000. 00 |
| கிருபாகரன் அகல்யன் | U.K | 3000. 00 |
| பொ. மோகனரூபன் | உரும்பராய் | 5000. 00 |
| S. ஈஸ்வரன் | சித்தங்கேணி | 5000. 00 |
| S. வினோதன் | ஊர்காவற்துறை | 10000. 00 |
| திரு சுபதாசன் குடும்பம் | கோண்டாவில் | 25000. 00 |
| S. நிலோஜன் | நோர்வே | 5000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | நீர்வேலி | 1100. 00 |
| திரு திருமுருகன் | நீர்வேலி | 500. 00 |
| த. ஸ்ரீஸ்கந்தராசா | உடுப்பிட்டி | 3000. 00 |
| ம. சுரேந்திரன் | திருநெல்வேலி | 1000. 00 |
| சி. லிங்கநேசன் | நீர்வேலி | 1000. 00 |
| இ. மனோகரன் | கொம்மந்தறை (கனடா) | 10000. 00 |
| ஏ. சதாசிவம் | மந்திகை | 10000. 00 |
| ஜெ. கனித் | கனடா | 10000. 00 |
| V. அரியராசா | தொண்டைமானாறு | 1000. 00 |
| ந. நடேஸ்வரன் | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| வீ. ராஜசிங்கம் | குப்பிளான் | 2000. 00 |
| திரு. திலகநாதன் | சுவிஸ்லாந்து | 10000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ மகிமை

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

சிவபெருமானின் பேரருளைப் பெற்று இனிதே வாழப் பலவகையான விரதங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் மிகச் சிறப்பாகக் கருதப்படுவது பிரதோஷ நாள் வழிபாடாகும்.

பிரதோஷ நாள் மாதம் இருமுறை வரும். திரயோதசித் திதியில் - வளர்பிறை (சுக்ல பட்சம்) ஒன்றும், தேய்பிறையில் (கிருஷ்ணபட்சம்) ஒன்றும் வரும்.

## பிரதோஷ காலம்

சூரியன் மறைவதற்கு முன் உள்ள மூன்றே முக்கால் நாழிகையும், மறைந்த பின் உள்ள மூன்றே முக்கால் நாழிகையும் சேர்ந்த காலமே பிரதோஷ காலமாகும். இதனை மிகவும் துல்லியமாகக் கணக்கிட்டு மாலை 4.45 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் என்று பிரதோஷ காலத்தைச் சாஸ்திர அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். (இரவும் பகலும் சந்திக்கும் காலம்) கடும் தோஷமுள்ள காலத்தைப் பிரதோஷம் என்பர். குற்றங்கள் நிறைந்த காலம் எனப் பொருள் கொள்ளலாம். இந்த நேரத்தில்தான் அரக்கர்கள், பூத பிசாசுகள் உலாவுவார்கள் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது.

விஞ்ஞான ரீதியாகவும் நாம் இந்த நேரத்தில் உணவு உட்கொள்ளக்கூடாது என்று கூறப்படுகிறது. அந்த உணவு ஜீரணிக்காது. இதனால் பலவித நோய்கள் ஏற்பட வழிசெய்யும். இந்த நேரத்தில் உறங்கக்கூடாது. நோயுற்றவர்களாக இருந்தால்கூட படுக்கையில் படுக்காமல் எழுந்து இறைவனைத் தியானிக்க வேண்டும். ஆகவேதான் தோஷமான சாயங்கால நேரத்தில் இறை வழிபாடு செய்யவேண்டுமென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

தோஷமான அந்தக் காலத்தில் பரமேஸ்வரர் பூதங்களை அடக்கித் திருநடனம் ஆடுகிறார். சகல தேவர்களும் அவரது நடனத்தில் மயங்கி அவரது சந்நிதியில் அக்காலத்தில் கூடித் துதிக்கின்றனர். ஆகையால், பிரதோஷ காலத்தில் சிவாலயங்களுக்குச் சென்று சிவதரிசனம் செய்ய வேண்டும் என்று சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ளது.

## பிரதோஷ வரலாறு

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அடிக்கடி போர் நிகழ்வது வழக்கம். இது தேவர்களுக்கு அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. தாங்கள் இறக்காமல் இருப்பதற்கு விரும்பிப் பிரம்மாவிடம் முறையிட்டு ஆலோசனை கேட்டனர். இதனைச் செவிமடுத்த பிரம்மா அனைவரையும் அழைத்துக்கொண்டு திருமாலிடம் சென்று தேவர்களின் வேண்டுகோளைக் கூறினார். அதற்குத் திருமால், பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து வரும் அமிர்தத்தை உண்டால் முதுமை, மரணம் இன்றி என்றும் இளமையோடு வாழலாம் என்று கூறினார்.

*உன் பலத்தோடு மோதுபவன் எதிரி. உன் பலவீனத்தோடு மோதுபவன் துரோகி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் கூறியபடி அமிர்தம் பெற முடிவு செய்யப்பட்டது. மந்தர மலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைய ஏற்பாடு செய்தனர். ஆனால், அசுரர்களின் உதவியின்றிப் பாற்கடலைக் கடைய முடியாது என்பதால், தந்திரசாலியான மஹாவிஷ்ணுவின் ஏற்பாட்டின்படி அசுரர்கள் உதவிக்கு வர இசைந்தனர். அவர்கள் தங்களுக்கும் பங்கு கிடைக்கும் என்று எண்ணினர்.

திருமால், தேவர்கள் வால் பக்கமும் அசுரர்கள் தலைப் பக்கமும் நின்று பாற்கடலைக் கடைய ஏற்பாடு செய்தார். பின் அவர் ஆமை வடிவெடுத்துக் கடலுக்கடியில் சென்று மந்தர மலையைத் தாங்கினார். கடையத் தொடங்கிய நேரம் தசமித் திதி காலையாகும்.

தொடர்ந்து கடைந்துகொண்டே இருந்தனர். இரவு கழிந்து அடுத்தநாள் ஏகாதசி காலையில் வாசுகி வலி பொறுக்கமுடியாமல் விஷத்தைக் கக்கியது. கடலிலிருந்தும் விஷம் தோன்றியது. ஆலம் என்பது விஷம். ஆலால விஷம் புகைமண்டலமாக வடிவெடுத்தது.



அதன் வெப்பம் தாங்கமுடியாமல் தேவர்களும் மற்றவர்களும் சிதறி ஓடினர். ஆமை வடிவம் நீக்கி மேலே வந்த திருமாலின் பளிங்கு நிறமும் விஷப் புகையால் கருநிறமாக மாறியது.

சிவபிரானிடம் புகலடைய எண்ணிய அவர்கள் அனைவரும் கைலையை நோக்கி வலமாகச் செல்ல முயன்றனர். அங்கு விஷமண்டலம் பரவியிருந்ததால் செல்ல முடியாமல் இடமாகத் திரும்பி ஓடினர். அங்கும் விஷம் வந்து தாக்கவே திரும்பி ஓடி வந்தனர். இப்படி அவர்கள் வலமாகவும் இடமாகவும் மாறி மாறி ஓடிய காரணத்தால் பிரதோஷ நாளன்று சிவாலயத்தில் விசேடமான வழிபாட்டு முறை ஒன்று உருவாகியது. இது சோமசூத்திரப் பிரதட்சணம் எனப்படும்.

பின்னர் தேவர்கள் நந்திதேவரின் துணையால் பரமனைத் தரிசித்துத் தமது துன்பங்களைக் கூறினர். கருணையே வடிவான கண்ணுதற் கடவுள் அருகில் அணுக்கத் தொண்டராய் நின்ற சுந்தரரை ஏவ, அவர் ஆலாலத்தைக் கொண்டு வந்தார். பரமன் அதனை எடுத்துப் புன்சிரிப்புடன் திருவாயிலிட்டு விழுங்கினார். தேவர்கள் அஞ்சினர். அவ்விஷம்

*அன்புதான் உனது பலவீனம் என்றால், உலகிலே நீதான் மிகப்பெரிய பலசாலி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே சென்றால், அங்குள்ள எண்ணற்ற ஜீவகோடிகள் அழிந்துவிடும் என்பதால் அருகிலிருந்த உமாதேவியார் தம் திருக் கரத்தினால் இறைவனின் கண்டத்தைத் தடவ விஷம் அம்பிகை மகிமையால் அமிர்தத் தன்மை அடைந்ததுடன், அங்கேயே தங்கி யது. சிவபிரான் மணிகண்டர் ஆனார். திரு நீலகண்டர் எனவும் அழைக்கப்படலானார். தேவர்கள் அச்சம் நீங்கிச் சிவபிரான் கட்டளைப்படி மீண்டும் சென்று பாற்கடலைக் கடைந்தனர். இது ஏகாதசித் திதியாகும்.

முதலில் பாற்கடலிலிருந்து வெளிப் பட்ட இலக்குமியைத் திருமால் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து வெளிப்பட்ட ஐரா வதம், காமதேனு, கற்பகதரு, சிந்தாமணி, கௌஸ்துப மணி, சூடாமணி, உச்சைஸ்ரவம் என்ற குதிரை முதலியவற்றை இத்தியாதி தேவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

ஏகாதசி இரவு கழிந்து மறுநாள் துவாதசி அன்று அதிகாலையில் கடலிலிருந்து அமிர்தம் தோன்றியது. அதனைத் தேவர்கள் பகிர்ந்துண்டனர். அமிர்தம் உண்ட மகிழ்ச்சி யில் தேவர்கள் ஆடியும் பாடியும் பொழுது போக்கினர்.

மறுநாள் திரயோதசி. தாம் சிவ பிரானை வணங்காது ஆடிப்பாடி பொழுது போக்கியமைக்காகத் தேவர்கள் வருந்தி, அனைவரும் பரமனிடம் சென்று பணிந்து மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டனர். தேவர்களை மகிழ்விக்கத் திருவுளம் கொண்ட இறைவன் அம்பிகையும் காணும்படி இடப தேவரின் கொம்புகளுக்கிடையே நின்று ஆனந் தத் தாண்டவம் ஆடியருளினார். அவர் அவ் வாறு ஆடிய நேரமே பிரதோஷ வேளை ஆகும். அதனால்த்தான் நந்தியின் கொம்பு களுக்கிடையில் சிவலிங்க மூர்த்தியைத் தரிசித்து வணங்கும் முறை பின்பற்றப் படுகிறது.

அத்தினம் ஒரு சனிக்கிழமை ஆத லால், சனிப்பிரதோஷம் மிகச் சிறப்பான தென்று சொல்லப்படும். மகா பிரதோஷம் என்று இது போற்றப்படுகிறது.

---

## பிரதோஷ தினத்தில் சிவனை வழிபடும் சோமசூத்திரப் பிரதட்சணம்

முதலில் இடபதேவரைத் தரிசித்து அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, வலமாக வடதிசை சென்று கோமுகையைக் கடவாது திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்துப் பின் இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்துத் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து வலமாகக் கோமுகை வரை சென்று மீண்டும் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்துத் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அவரது இரு கொம்புகளின் நடுவே சிவபிரானைத் தரிசித்து பிரணவத்தோடு ஹரஹர என்று வணங்கவேண்டும். இதுபோல மூன்றுமுறை செய்ய வேண்டும்.

பிரதோஷ விரதம் இருப்பவர்கள் மறுபிறப்பில் தனவந்தர்கள் ஆவர். அவர்கள் இனிதே வாழ்வர். பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்வோர் ஒரு வருடம் ஆலயம் சென்று வழிபட்ட பலனை அடைவர். சனிப்பிரதோஷ வேளையில் சிவாலயத்தில் இறைவழிபாடு செய்வோர், ஐந்து வருடம் தவறாது தினசரி சிவாலய வழிபாடு செய்த பலன் பெறுவர்.

பிரதோஷ விரதம் இருப்பவர்கள் முதலில் சிவனடியார்களுக்கு உணவளித்த பின்னரே உணவருந்தி விரதத்தை முடித்துக்கொள்ள வேண்டும். வேதம் ஓதும் வேதியர்களுக்குத்

*வாழ்க்கையில் திரும்பப் பெறமுடியாதவை உயிரும், நேரமும், சொற்களும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் அளிப்பது இச்சமயத்தில் சிறப்பான பலன்களைத் தரும். பதினொரு பிரதோஷங்களைத் தொடர்ந்து பூசிப்பவர்கள் ஒரு கும்பாபிஷேகத்தைக் கண்ட பலனைப் பெறுவர். நூற்றிருபது பிரதோஷங்களைத் தொடர்ந்து அனுட்டிப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை எனச் சாத்திரங்களில் கூறப்படுகிறது. இத்தகைய சிறந்த பிரதோஷ வழிபாட்டைச் சகல சிவாலயங்களிலும் ஏற்படுத்த வேண்டும். ஆலய பூசகர்கள் இவ்வழிபாட்டின் மகிமையை அடியார்களுக்கு எடுத்துக்கூறி வழிப்படுத்த வேண்டும்.

## நந்திகேஸ்வரர்

முனிவர் சிலாதருக்கும் அவர்தம் பத்தினி சித்திரவதி அம்மையாருக்கும் பிறந்த தவப்புதல்வர் நந்திகேஸ்வரர். இவர் கைலையங்கிரியில் காவல் தலைவராக இருக்கிறார். உலக வாழ்வில் ஆசையற்ற நந்திகேஸர், ஈசனைக் குறித்துப் பஞ்சாக்கினியில் பல ஆண்டுகள் கடும் தவமியற்றிச் சிவபிரானின் ஆசியைப் பெற்றவர். பிரதோஷ காலத்தில் இவருக்கு விஷேச பூஜைகள் நடைபெற வேண்டும். அறுகம்புல் மாலை அணிவித்து வில்வத்தால் அர்ச்சிக்க வேண்டும். சிவப்பரிசியும் வெல்லமும் கலந்து நிவேதனம் செய்ய வேண்டும். நெய்விளக்கு ஏற்றவேண்டும்.

## பிரதோஷ தரிசன பலன்கள்

பிரதோஷ காலம் என்றாலே பாவங்களைப் போக்கி நல்ல பலன்களைத் தரும் புண்ணிய காலமாகும். அக்காலத்தில் சிவபெருமானைத் தரிசிப்பதால் தோஷங்கள் எதுவாக இருந்தாலும் உடனே விலகும். பயவுணர்வு, அச்சம், குழப்பம், தீராப்பிணிகள் என்பன மறையும். மனநலம், உடல்நலம், வாக்குநலம் வளம்பெறும். வருகின்ற செய்திகள் எல்லாம் நல்லதாகவே வரும். மங்கலச் செயல்கள் தொடரும். சாதனைகள் புரிய வல்லமையும் உண்டாகும்.

---

விஸ்வாமித்ர மகரிஷியைப்பற்றி உங்களுக்குத் தெரியும். கௌசிகன் என்ற மன்னரான அவர் வசிஷ்ட முனிவருடனான சபதம் காரணமாக தவசியானார். பின்னர் ராஜரிஷியானார். ஒரு சமயம் திரிசங்கு என்ற மன்னன் அவரிடம் "சுவாமி நான் என் உடலோடு சொர்க்கம் போக விரும்புகிறேன். முனிவர்கள் பலரும் முடியாது என்று சொல்லிவிட்டார்கள்" என்றான். விஸ்வாமித்திரருக்கு இது ஒரு சவாலாகத் தோன்றியது. தன் தவவலிமை முழுவதையும் பயன்படுத்தி திரிசங்குவை அவன் விருப்பப்படியே சொர்க்கத்துக்கு அனுப்பி வைத்தார். மேலுலகம் சென்ற திரிசங்குவுக்கு அங்கேயிருந்த அற்புதக் காட்சிகள் பரவசத்தைத் தந்தாலும் "இப்படி ஒரு அற்புதமான இடத்தில் நம்மை அனுமதிப்பார்களா!" என்ற எண்ணம் அவனது மனதிற்குள் எழுந்தது. அந்த எண்ணம் எழுந்த மறுகணமே அங்கிருந்து தலைகுப்புறக் கீழே தள்ளப்பட்டான். விஸ்வாமித்ரர் தனது தவவலிமையால் திரிசங்குவைச் சொர்க்கத்துக்கு அனுப்பியிருந்தபோதும் திரிசங்குவின் மனோபலம் குறைந்த மறுநிமிடமே எல்லாமும் வீணாகிவிட்டது.

அன்பர்களே! எம்முடைய ஆழ்மனதின் அளவிடமுடியாத ஆற்றலினால் ஏதாவதொரு விடயத்தைத் திட்டமிட்டு அதில் வெற்றியுடன் சரியான பாதையில் போய்க்கொண்டும் இருப்போம். திடீரென நமது வளர்ச்சியில் விருப்பமில்லாத ஒருவர் ஏதாவது ஒரு எதிர்மறையான கருத்தைத் தெரிவித்தாலும் அதை உள்வாங்கிக்கொள்ளாதீர்கள். விஸ்வாமித்ரரின் தவவலிமை போன்றது நமது ஆழ்மனதின் ஆற்றல் என்று எண்ணி மனோபலத்துடன் வீறுநடை போடுங்கள். சொல்பவரின் வார்த்தையால் மனோபலத்தை இழந்துவிடாதீர்கள். இழந்துவிட்டால் திரிசங்குவினுடைய நிலைதான் ஏற்படும்.

*நமக்கு நாமே ஆறுதல் கூறும் மனத் தைரியம் இருந்தால் அனைத்தையும் கடந்து போகலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

(தொடர்ச்சி...

– திருமதி இந்திரா திருநீலகண்டன் அவர்கள் –

உணவு உண்பதில் மிகைப்பட்ட பற்றுதல் வைத்திருப்பது பொருந்தாது. உடைகளைப் பெருக்குவதும் விலையுயர்ந்தவைகளாக்குவதும், அவைகளிடத்து அலாதியான ஆசை வைப்பதுவும் ஒண்ணாது. உடலைப் பேணுதலிலும், அதை அலங்கரிப்பதிலும், அதனிடத்து அலாதியான அபிமானம் கொள்ளுதலிலும் கருத்தைச் செலுத்தலாகாது. முடி அலங்காரத்தில் மிகைபட மனதைச் செலுத்துதலும் பொருந்தாது. இத்தகைய பற்றுதல்கள் மனிதனுடைய மனதைக் கீழ்நிலைக்குக் கொண்டு வந்து விடுகின்றன. இல்வாழ்பவன் ஒருவன் மனத்தூய்மையே வடிவெடுத்தவனாய் இருத்தல் வேண்டும். உடலைப் புனிதமான நிலையில் வைத்திருப்பதும் அவனுடைய கடமையாகும். சோம்பலுக்கு ஒரு நாளும் இடம் கொடுத்து விடலாகாது. எப்பொழுதும் சுறுசுறுப்பும், வினையாற்றுதலில் விருப்பமும் வடிவெடுத்தவனாக இல்வாழ்பவன் இருக்க வேண்டும். தனக்கு வந்து அமையும் கடமை எதுவாயினும் அதைத் திறம்பட செய்யத் தன்னைத் தகுதியுடையவனாகச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

உலக வாழ்க்கையில் எத்தகைய மனிதனுக்கும் எதிரிகள் என்பார் சிலர் அமைந்து விடுவார்கள். பகைவர்கள் இல்லாத பூவுலக வாழ்க்கை இல்வாழ்பவர் யாருக்கும் அமைவதில்லை. எதிரிகள் முன்னிலையில் இல்வாழ்பவன் ஒருவன் ஒரு வீரனாக நடந்து கொள்ள வேண்டும். பகைவர்களை எதிர்த்து அவர்களை அடக்கியாள இல்வாழ்பவன் கடமைப்பட்டிருக்கிறான். விரோதிகளிடத்திருந்து தனக்கு விபத்து வந்துவிட்டதே என்று ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு விம்மி அழுவது கிரஹஸ்தன் ஒருவனுக்குப் பொருந்தாது. எதிர்த்து வருகின்றவர்களுக்கு ஹிம்சை செய்யலாகாது என்ற பொருளற்ற பேச்சை அவன் பேசலாகாது. சத்துருக்கள் முன்னிலையில் பராக்கிரமம் வாய்ந்தவனாகத் தன்னைக் காட்டிக்கொள்ளாவிட்டால் கிரஹஸ்தன் ஒருவன் முறையாகத் தன் தர்மத்தைக் கடைப்பிடித்தவன் ஆகான். எதிரிகளின் முன்னிலையிலே அவன் சிம்ம ஏறு போன்றும், உற்றார் உறவினர் முன்னிலையில் சாந்தமே வடிவெடுத்துள்ள ஓர் ஆட்டுக்குட்டி போன்றும் நடந்து கொள்பவனே இல்வாழ்க்கைக்குத் தகுதியுடையவனாகின்றான்.

உலகில் எப்பொழுதுமே போக்கிரிகளும், பொருந்தாத ஒழுக்கமுடையவர்களும் இருந்து வருகிறார்கள். அத்தகையவர்களுக்கு கிரஹஸ்தன் ஒருவன் எந்த விதத்திலும் மரியாதை காட்டலாகாது. கெட்டவர்களைக் கண்டிக்கின்ற பாங்கிலேயே அவன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அதற்கு மாறாக துஷ்டர்களுக்கு அவன் மரியாதை காட்டுவானாகில் அது துஷ்டத்தனத்தை ஆதரிப்பதற்கு ஒப்பாகும். தீமையையும் தீயவர்களையும் யாண்டும் எதிர்த்திருப்பதே இல்வாழ்பவனுடைய அறமாகும். இனி, உலகில் வணக்கத்துக்குரிய நன்மக்களும் யாண்டும் இருந்து வருகின்றனர். அத்தகைய நல்லார்க்கு மரியாதை காட்ட இல்வாழ்பவன் தவறிவிடுவானாகில் அது பெருங்குற்றமாகும். நல்லாரோடு நல்ல பாங்கில் உறவாடுவது முற்றிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானது. ஆனால் நட்பை உண்டு பண்ணுவதற்கு ஆத்திரத்தோடு ஒருவன் முந்தலாகாது. எப்படியாவது பலபேரோடு நட்புக் கொண்டாட வேண்டும் என்கின்ற ஆர் வம் உதவாது. அடக்க ஒடுக்கத்துடன் இருந்து நேர்மையான பாங்கில் இயல்பாக அமைகின்ற நட்டையே வளர்த்துவர வேண்டும். யாருடன் தான் நட்புக் கொண்டாட விரும்பு கின்றானோ அம் மனிதனுடைய செயல்கள் எத்தகையவைகள் என்று முதலில் அமைதி யாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். தான் உறவாட விரும்பும் மனிதன் மற்ற மனிதர் களோடு எங்ஙனம் உறவாடுகின்றான் அல்லது நடந்து கொள்கிறான் என்று கூர்ந்து கவனித் துப் பார்க்கவேண்டும். அம்மனிதனுடைய செயல்களெல்லாம் நெறிக்கு ஏற்புடையவை களா, என்று ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மனிதனை முற்றிலும் நல்லான் என்று ஓர்ந்து ஆராய்ந்து அறிந்துகொண்ட பின்பே அவனோடு உறவாட வேண்டும்.

இல்வாழ்பவன் ஒருவனுக்கு நாவடக் கம் முற்றிலும் இன்றியமையாதது. எதைப் பேச வேண்டும், எங்கு பேச வேண்டும், எப் பொழுது பேச வேண்டும் என்னும் நல்லறிவு அவனிடத்து நிலைபெற்றிருக்க வேண்டும். கால தேச வர்த்தமானத்துக்கு ஒத்தபடி உரையாடுதல் அவசியமாகிறது. மூன்று விஷ யங்களைப் பற்றி அவன் பொதுவாகப் பேச லாகாது. தன்னுடைய கீர்த்தியைப்பற்றி யாண்டும் பேசாதிருப்பதே பொருத்தமானது. தன்னுடைய பேரையும் புகழையும் பற்றியோ அல்லது தனது பராக்கிரமத்தைப் பற்றியோ அவன் யாருக்கும் எடுத்துப் புகட்டலாகாது. தனக்குச் செல்வம் எவ்வளவு இருக்கிறது என்பதைப் பற்றியும் ஏனையவரிடம் பேசிக் கொண்டிருக்கலாகாது. உடையது விளம்பேல் என்பது கோட்பாடு. ஆனால் சில சந்தர்ப்பங் களில் தனது நண்பர்களிடம் ஈண்டு இயம்பி உள்ள விஷயங்களில் சிலவற்றை எடுத்து உரைப்பது குற்றமாகாது. இன்னும் சில விஷயங்களை யாரிடத்தும் எடுத்து இயம்ப லாகாது, இரகசியமாகவே வைத்திருக்க வேண்டும். யாராவது ஒருவர் தன்னிடம் சொல் லியவைகளை முற்றிலும் இரகசியமாகவே பாதுகாத்து வைத்திருப்பது குடும்பஸ்தன் ஒரு வனுடைய கடமையாகும்.

தான் ஏழையென்றோ அல்லது பணக் காரனென்றோ ஒரு மனிதன் மற்றவர்களிடம் பேசலாகாது. தன்னிடத்து இன்னின்ன பொருள் கள் இருக்கின்றனவென்று அப்பொருள்களைப் பற்றிப் பெருமைப்படப் பேசுவதும் பொருந்தாது. தன்னுடைய அபிப்பிராயங்களைத் தாராள மாகப் பிறர்க்கெடுத்து வழங்குதல் முறை யன்று. வேண்டுமென்று விரும்பிக் கேட்ப வருக்கு ஒருவன் தன் அபிப்பிராயத்தை அடக் கமாகவும் அமைதியாகவும் வெளியிடலாம். ஆனால் அவசியம் ஏற்படாத இடங்களிளெல் லாம் தன் கருத்துக்களைத் தங்குதடையின்றி வெளியிட்டுக்கொண்டிருப்பது பொருந்தாது. இங்ஙனம் அடக்கமாக இருப்பது ஒரு வனுடைய அறச்செயல் ஆகின்றது. இப்படி ஒழுகுவதும் வெறும் லௌகீகத்துக்குரிய சாமர்த்தியம் அன்று. நல்வாழ்வுக்குரிய ஒழுக் கங்களாக இவை யாவும் வந்தமைகின்றன. இத்தகைய அறநெறிகளை ஒருவன் முறை யாகக் கடைப்பிடிக்காவிடில் அவன் ஒழுக்கத் தினின்று தவறியவன் ஆவான்.

ஒரு மரத்தின் அடிப்பாகம் அதற்கு ஆதரவாயிருப்பதுபோன்று சமுதாயம் முழுதுக் கும் ஆதரவு அல்லது பற்றுக்கோடாயிருப்பவன் கிரஹஸ்தன். சமுதாயத்துக்கு தேவையாய் இருக்கின்ற பொருள்களைச் சேகரிப்பவர்களுள்

*பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன்கேட்கும்போதுதான் புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமானவன் கிரஹஸ்தன். அங்க வீனர்களும், பலவீனர்களும், குழந்தைகளும், பெண்பாலரில் பலரும் சமுதாயத்துக்குத் தேவையாய் இருக்கின்ற செயல்களை ஆற்றத் தகுதியற்றவர்களாய் இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் தாங்குகின்ற நிலையில் கிரஹஸ்தன் இருக்கின்றான். மேலும்,

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

என்பது மறுக்கமுடியாத மறைமொழி ஆகும். ஆகவே குடும்பஸ்தன் ஒருவன் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பல இருக்கின்றன. கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஆற்றலும் ஊக்கமும் படைத்தவனாக இல்வாழ்பவன் இருந்தாக வேண்டும். தனக்குப் பொருந்தாத கடமைகள் பல தலைச்சுமைகளாக தன்மீது சுமத்தப் பட்டிருக்கின்றன என்று அவன் எண்ணலாகாது. குடித்தனமோ துரைத்தனமோ என்பது பழமொழி. ஒரு சிறிய முறையில் அரசாங்கத்தை நடத்துவதற்கு ஒப்பாகிறது இல்வாழ்வு. இல்வாழ்பவன் எதைச் செய்கின்றான், எதைப் பேசுகின்றான் என்பனவெல்லாம் வாழ்க்கையைப் பண்படுத்துவதற்கான முக்கியமான கோட்பாடுகள் ஆகின்றன. தன்னுடைய தகுதிக்கு ஒவ்வாத அற்பச் செயல் ஏதேனும் ஒன்றை இல்வாழ்பவன் செய்துவிட்டால் அதை அவன் மற்றவர்களுக்கு விளம்பரம் செய்யலாகாது. பின்பு சமுதாய நடைமுறைக்கு ஒவ்வாத குற்றம் ஒன்றையே இல்வாழ்பவன் அறிந்தோ அறியாமலோ செய்துவிட நேரிடலாம். அத்தகைய குற்றத்தையும் மற்றவர்களுக்கெல்லாம் தெரியும்படி வெளியிடுவது ஒவ்வாது. புதிய திட்டம் ஏதாவது ஒன்றில் இல்வாழ்வான் ஈடுபட்டிருக்கலாம்; அத்தகைய திட்டத்தைத் தொடக்கிய பிறகு அதில் தான் தோல்வியடையப் போகிறான் என்பதை அவன் அறிய வருகிறான். தான் தொடக்கிய திட்டம் தோல்வியடையப் போகிறது என்று அதைப் பற்றி அவன் பேசிக்கொண்டிருக்கலாகாது. அந்த நெருக்கடியிலும் அமைதியாகவும் முறையாகவும் தான் எடுத்த கருமத்தை அவன் செய்துகொண்டே இருக்கவேண்டும். தன் கடமையை முறையாகச் செய்வதற்குப் பதிலாக அது பயன்படாது போவதைப்பற்றி அவன் பேசிக்கொண்டிருப்பானாகில் அவன் மேலும் மேலும் பலவீனன் ஆகிவிடுவான்; எடுத்துக்கொண்ட காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் வல்லமையை அவன் இழந்துவிடுவான். மற்றவர்களுடைய மனதில் குழப்பத்தை உண்டுபண்ணுவதும் பொருந்தாது. எடுத்துக்கொண்ட காரியத்தை முறையாகவும் ஒழுங்காகவும் செய்துவருவதன்மூலம் இல்வாழ்பவன் ஒருவன் மன உறுதி பெறுகின்றான். அப்படி மனத்திட்பம் அடைவது ஆத்ம சாதனம் எனப்படுகிறது. வாழ்க்கையில் அவனுக்கு என்னென்ன கடமைகள் அமைந்திருக்கின்றனவோ அவைகளையெல்லாம் திறம்பட ஆற்றுவது அவனுடைய ஆத்ம சாதனமாகிறது. பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு குடும்பஸ்தன் ஒருவன் ஞானத்தையும் செல்வத்தையும் சேகரிக்க வேண்டும். வெறும் செல்வத்தைச் சேகரிப்பதிலேயே அவன் கண்ணும் கருத்துமாய் இருந்தால் போதாது; அல்லது தனியாக ஞானத்தைத் தேடுவதிலேயே அவன் காலத்தைக் கழித்துவிடுவதும் பொருந்தாது. தன்னுடைய சொந்த வாழ்வைச் செப்பனிடுவதற்கு அவனுக்கு ஞானம் பயன்படுகிறது; தன்னுடைய வாழ்வு மற்றவர்களுக்குப்

*ஒருவர் துன்பப்படும்போது நிபந்தனை எதுவுமின்றி உதவுவதுதான் நட்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுவதற்குச் செல்வம் உதவுகிறது. ஆக, இவ்விரண்டையும் தேடிச் சம்பாதிக்க அவன் கடமைப்பட்டிருக்கிறான். ஞானத் தையும் செல்வத்தையும் சேகரிக்காத குடும் பஸ்தன் ஒருவன் மானுடன் என மதிக்கப்பட மாட்டான். செல்வத்தைத் திரட்டி எடுக்க முயற்சி பண்ணாவிட்டால் நெறிவழுவியவன் என அவன் கருதப்படுவான். சோம்பலுக்கு அவன் இடம்கொடுத்து விடலாகாது. செய லற்ற சோம்பேறிபோன்று அவன் வாழ்க் கையை நடத்தலாகாது. சோம்பலுக்கு அடிமைப்பட்டிருக்கின்ற குடும்பஸ்தன் ஒருவன் நெறிவழுவியவன் எனக் கருதப்படுவான். தன்னைச் சார்ந்திருக்கும் பலபேரை ஆதரிக் கின்றளவுக்கே அவன் தர்மத்தை நன்கு அனுஷ்டித்தவன் ஆகின்றான். நல்லான் ஒரு வனுக்குச் செல்வம் மிகச் சேருவது நடுவூரில் இருக்கும் மரம் பழுப்பதற்கு ஒப்பாகும்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்; செல்வம்
நயனுடை யான்கண் படின்.

(தொடரும்...

---

உங்களில் பல பேர் “ஆரா” என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நம் ஒவ்வொருவரையும் சுற்றி ஒரு பாதுகாப்புக் கவசம்போல், கண்ணுக்குத் தெரியாத ஒளிவட்டமாக, பிரபஞ்ச சக்திக்கும் நமக்கும் இடையேயான தொடர் சாதனமாக இருப்பதுதான் இந்த ஆரா.

உண்மையான மகான் ஒருவரை நாம் சந்தித்துவிட்டு “என்ன ஒரு தேஜஸ்! அவருக்குக்கிட்ட ஒரு கணம் நின்றாலே நம்மை அறியாமலே ஒரு பரவசம் ஏற்படுகிறதே!” என்று இப்படியெல்லாம் பேசுவோமல்லவா? அதற்கெல்லாம் காரணம்... மகான்கள் யோகிகள் இவர்களைச் சுற்றியுள்ள ஆரா அற்புத ஆற்றலுடன் இருப்பதுதான்.

அதேபோன்று சில சமயங்களில் சபை ஒன்றிலே நாமெல்லாம் அமர்ந்திருக்கிறோம். அந்த சபையிலே எங்கோ இருந்து நமக்குத் தெரியாத ஒருவர் வந்து நமது பக்கத்தில் அமர்ந்து கொள்கிறார். அவர் அமர்ந்து ஒரு சில நிமிடத்தில் எமது மனநிலையில் மாற்றம் ஏற்பட்டால், அதற்குக் காரணம் எம்மைச் சுற்றியுள்ள ஆரா வட்டத்துக்குள் அவர் வந்தபோது எமது ஆராவில் ஏற்பட்ட மாற்றம்தான்.

அதாவது நமது எண்ண அலைக்கு எதிர்மறையான எண்ண ஓட்டத்தில் அவர் ஆழ்ந்திருக்கிறார் என்பது அர்த்தம். ஒருவரையே சிலசமயம் நாம் நேசிப்பதற்கும், வெறுப்பதற்கும் காரணமும் ஆராதான் என்கின்றனர் அறிஞர்கள். நம்முடைய மனதின் ஆற்றல் எந்த அளவுக்கு வலிமையாக இருக்கிறதோ அந்த அளவுக்கு நமது ஆராவும் வலிமைமிக்கதாக இருக்கும். நமது ஆழ்மனதின் ஆற்றலை அதிகரிக்க வேண்டுமானால், இந்த ஆராவை வலிமையாக்க வேண்டும். அதற்கு நல்ல நேர்மறையான சிந்தனைகளை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

நீ உன்னுடைய எந்தக் குணத்தைக் கைவிட்டாலும் உயர்வான எண்ணங்களை மட்டும் கைவிட்டு விடாதே!!! அப்படி செய்வதால் என்ன ஆகும் தெரியுமா? ஆராவின் ஆற்றல் அதிகமாகும். ஆராவின் ஆற்றல் அதிகமாகும்போது எந்த தீய எண்ணம் படைத்தவர் உன்னை நெருங்கினாலும் நீ அவர்களை அடையாளம் கண்டுகொள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றின் பெருமை

— *ஆர்.வி. கந்தசுவாமி* அவர்கள் —

சைவ சமயத்தவர்களின் முத்தியடைதலுக்கான சாதனங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது திருநீறு ஆகும். இதனுடன் உருத்திராக்கம், திருவைந்தெழுத்து ஆகியவை ஏனைய சாதனங்களாகும். இவை சிவ சின்னங்கள் எனப்படும். "திருநீறு" என்பது தெய்வத்தன்மை வாய்ந்த வெண்தூள் எனக் கருதப்படும். விபூதி, இரட்சை, சாரம், பஸ்பம், பசிதம், க்ஷாரம் என்பன திருநீற்றைக் குறிக்கும் மறு பெயர்களாகும். "விபூதி" என்றால் அணிபவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுப்பது எனப் பொருளாகும். மேலான செல்வம் என்பது இறைவனாகிய சிவபெருமானுடன் இரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்தி இன்பத்தைத் தருதலாகும். அதேபோன்று ஆன்மாக்களை அணியுந்தோறும் காத்து இரட்சிப்பதால் "இரட்சை" எனப்படுகிறது. மன அழுக்குகளை நீக்குவதால் "சாரம்" எனவும், இருவினையொப்பாகிய நல்வினை, தீவினை இரண்டையும் சமமாகக் கருதுவதால் "பஸ்மம்" எனவும், திருவருளை ஆன்மாவானது பெற்றுக் கொள்ளச் செய்வதால் "பசிதம்" எனவும் அழைக்கப்படுகிறது. "க்ஷாரம்" எனப்படுவதன் காரணம், தடைகளை (உலக இன்பங்களை) அறுப்பதால் ஆகும்.

இத்தகைய பெருமைக்குரிய திருநீற்றினைத் தரித்துக்கொள்பவர்களாகச் சைவ சமயத்தவர்கள் மாத்திரமன்றி ஏனைய இந்து சமயத்தவர்களும் விளங்குகிறார்கள். சைவர்கள், திரிபுண்டரமாகவும் (மூன்று குறிகளாகத் தரித்தல்), உத்தூளனமாகவும் (நெற்றியில் பரவிப் பூசுதல்) இருவகைகளில் திருநீற்றை அணிகிறார்கள். வைணவர்கள் நாமமாக வடகலை, தென்கலை ஆகியவற்றுக்கு ஏற்ற முறையில் பூசிக்கொள்கிறார்கள். சாக்தர்கள் (சக்தி வழிபாட்டினர்), காணபத்தியம் (கணபதி வழிபாட்டினர்) கௌமாரம் ((முருக வழிபாட்டினர்) சௌரம் (சூரிய வணக்கத்தினர்) ஆகிய வழிபாட்டினரும் திருநீற்றின் மகிமையைப் போற்றியே வருகின்றனர். எனவே திருநீறானது இந்து சமயத்தவர் அனைவருக்கும் புனிதமான தெய்வீக அருட்சாதனமாக விளங்குகின்றமை புலனாகிறது.

திருநீறு, கோமாதா எனப் போற்றப்படும் பசுவின் சாணத்தினைச் சுட்டெரிப்பதன் மூலம் தயாரிக்கப்படுவது. நிலையாமையை உணர்த்தும் வேதப் பொருளாகவும், வாழ்வின் சூட்சுமங்களை உணர்த்தும் சூட்சுமப் பொருள் ஆகவும், கொடிய நோய்களைத் தீர்க்கவல்லதாகவும், துன்பங்களிலிருந்து மீட்டெடுக்கக் கூடியதாகவும், மேலான அறிவையும், பக்தியையும் தருவதாகவும், தூய இறையருட் சாதனமாகவும், முத்தியடைவதற்கான கருவியாகவும் விளங்குகின்றது. திருநீற்றைக் காலையும் மாலையும் நெற்றியில் அணிந்து சிவனை வணங்குவது சைவ சமயிகளின் இன்றியமையாத கடமையாகும். தீட்சை பெற்றவர்கள் அனுட்டானங்களைத் திருநீற்றுக் கோலத்தினராய் மேற்கொள்வர். திருநீற்றின் வகைகளாக கல்பம், அனுகல்பம், உபகல்பம், அகல்பம் ஆகியவற்றினைச் சமய நூல்கள் குறிப்பிட்டுள்ளன. திருநீற்றினை

*உன்னை மட்டும் அறிவாளி என்று எண்ணாதே. மற்றவர் கருத்துக்கும் மதிப்பளிக்கப் பழகிக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை நடுவில் (உச்சியில்), நெற்றியில், மார்பில், தொப்பூழடியில், இடது தோளில், வலது தோளில், இடது கையின் நடுவில், வலது கையின் நடுவில், இடது மணிக்கட்டில், வலது மணிக்கட்டில், இடது இடுப்பில், வலது இடுப்பில், முதுகின் கீழ், கழுத்து முழுவதும், இடது காதுப்பொட்டில், வலது காதுப் பொட்டில் என்றவாறு உடலின் பல இடங்களிலும் அணிந்துகொள்ளலாமெனக் கூறப்படுகிறது. "நீறில்லா நெற்றிபாழ்" என ஔவையார் குறிப்பிட்டுள்ளதும் திருநீற்றின் பெருமையை விளக்கிப் பயனுறச் செய்யவே எனலாம்.

"நீறு" என்பது வெந்து தணிந்த சாம்பலைக் குறிக்கும். அது தெய்வத்தன்மையுடன் விளங்குகையில் "திரு" என்னும் அடைமொழி பெற்றுத் திருநீறு ஆகிறது. திருநீறு பிணி, தோஷம், தீட்டு முதலானவற்றை நீக்கித் தூய்மைப்படுத்துவதுடன் நல்லறிவையும், நல்லருளையும் கிட்டச் செய்கிறது. ஆலயங்களில் "திருநீறு போடுதல்" நடைபெறுவது கண்கூடாகும். நாம் விபூதியை உடம்பில் இட்டுக்கொள்வது, புண்ணிய தீர்த்தத்தில் நீராடுவதைவிடச் சிறந்ததாகும். பிரம்மதேவன் ஒரு தராசில் சொர்க்கம் முதலான உலகங்களையும், இன்னொரு தராசில் திருநீற்றையும் வைத்து எடைபோட்டபோது திருநீறே எடையில் தாழ்ந்து நின்று அதன் உயர்வைக் காட்டியதெனச் சிவபுராணம் கூறுகிறது.

கூன்பாண்டியனின் வெப்பு நோயினை நீக்குவதற்காக அவனது மேனியில் திருநீற்றினைப் பூசச்செய்து "மந்திரமாவது நீறு" எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகத்தினைப் பாடி இறைவனை வேண்டியவர் திருஞானசம்பந்தப் பெருமான். மந்திரமாயமைந்தது; தேவர்களின் மேனியில் பூசப்படுவது; அழகுடன் விளங்குவது; யாவராலும் துதிக்கப்படுவது; ஆகம மந்திரங்களில் கூறப்படுவது; சமயங்களில் பேணப்படுவது; திருவாலவாய் என்னும் சிவத்தலத்தில் உமாதேவியாருடன் வீற்றிருக்கும் சிவபெருமான் திருநீறேயாகும் என அப்பதிகத்தின் முதல் பாடல் கூறுகிறது. மேலும் "இராவணன் மேலது நீறு" எனவும், "எயிலது அட்டது நீறு" எனவும், "மாலொடயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு" எனவும், குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங்கூடக் கண்திகைப்பிப்பது நீறு" எனவும் சம்பந்தர் பாடியருளினார். சம்பந்தரின் சைவப் பணிபற்றிக் கூற முனைந்த சேக்கிழார், தமது பெரியபுராணத்தில்,

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறி திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தை கெடப் புகலியர் கோன் அமுதுசெய் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி.

எனப் பாடியதனூடாகப் புறச்சமயங்களான சமணம், பௌத்தம் ஆகியவற்றின் ஆதிக்கத்தை இல்லாமற் செய்து சைவநெறியானது தமிழ் நாட்டில் தழைத்தோங்கச் செய்த ஞானசம்பந்தரின் அற்புதத்தை விளக்கியுள்ளார். இந்த அற்புதத்தை அவர் திருநீற்றினால் சாதித்தார் என்கிறார். அதன் ஒளி விளங்கச் செய்தார் என்கிறார்.

திருநீற்றின் மகிமை கொண்டு இறையருளினால் புத்தரை வாதில் வென்றவர் மணிவாசகர். தன்னைக் கொல்வதற்காகச் சிவனடியார் வேடத்தில் வந்த முத்திநாதனின் சிவப்பொலிவையும் திருநீற்றுக் கோலத்தையும் கண்ணுற்ற மெய்ப்பொருள் நாயனர் அவனை, நாட்டின் எல்லைவரை

*அடுத்தவரை நம்பி வாழும்வரை துயரம் உன்னை விட்டு மறையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிச் சென்று பாதுகாப்புடன் அனுப்பிவைத்த செயலானது திருநீற்றின் உண்மையை எடுத்துக்காட்டுகிறது. "இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில் நீறும்" என அருணகிரியார் சிவபெருமானைத் திருப்புகழால் பாடுவார். வேதங்களால் சிறப்பித்துக் கூறப்பட்ட விபூதி, ஆன்ம நோய்க்கு மருந்தாக அமைவது. எளிமையாகக் கிடைக்கக்கூடியது அதிக பெருமையான முத்தியைத் தரவல்லது. திருமூலநாயனார் தமது பாடலொன்றில்,

கங்காளர் பூசும் கவச திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்வாரே யாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி செய்வாரே

என்று கூறுகின்றார்.

திருநாவுக்கரசரும் தமது "குனித்த புருவமும்" எனத் தொடங்கும் தேவாரத்தில் "பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்" என்று சிவன் திருக்கோலத்தை திருநீற்றுடன் பார்த்ததாகப் பாடுகிறார். விபூதி அணியும் நெற்றியினைச் சிவபெருமானாகிய நடராசமூர்த்தி திருநடனஞ் செய்கின்ற சிற்சபைக்கு நிகராகப் பெரியோர் கூறுவர். இதனைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

போதுவார் நீறணிந்து பொய்யாத வைந்தெழுத்தை
ஓதுவா ருள்ளமென வுரைப்பர் - நீதியார்
மெம்மா னமரர் பெருமானோ மான்கை
அம்மா னின்றாடு மரங்கு.

சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்தி நாயனாரின் தோழர். இவர் பட்டத்துயானை மீதேறிப் பரிவாரஞ் சூழப் பவனிவரும்போது எதிரே முதுகில் துணி மூட்டையைச் சுமந்து, தலையில் உவர் மண்ணைத் தாங்கியும் வந்துகொண்டிருந்த ஏகாலியொருவனின் உடலில், மழை பெய்ததால் கரைந்து உவர்மண் படியல்கள் வெய்யிலில் திருநீற்றுத் தழும்புகளாகத் தெரிந்தன. அதைக் கண்ணுற்ற சேரமான் யானையை விட்டிறங்கி அவனை வணங்கினார். எங்கெல்லாம் திருநீற்றுக் குறிகள் தெரிகின்றனவோ அவ்வண்ணங்களில் சிவனையே காண்கின்றேன் எனக் கூறிய பக்தியாளன் அவர்.

மாணிக்கவாசகரும் தமது அச்சோப் பதிகத்தில் "சுண்ணவெண்ணீறணிவித்துத் தூநெறியே சேரும் வண்ணம் அண்ணலெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே" என்றும், திருச்சாழலில் "பூசுவதும் வெண்ணீறு" என்றும் போற்றுவதைக் காண்கின்றோம். எனவே சைவசமயிகள் திருநீற்றின் பெருமை உணர்ந்து அதை அணிதல், போற்றுதல், மனம், மொழி, மெய்களால் சிந்தித்து வாழ்தல் இறையின்பத்தினைத் தருமென நம்புதல் முதலியவற்றைக் கடைப்பிடித்து வாழவேண்டும். உண்மையான சைவசமயியின் உறுதுணை திருநீறேயாகும். அதனையுணர்ந்து வாழ்வோமாக. "திருவெண்ணீறணியாத திருவிலூர்" இல்லை எனும்படி எம்மை வழிப்படுத்துவோமாக.

"முத்தி தருவது நீறு"

*மற்றவர்களின் புகழ்ச்சிக்காக நற்குணத்தைப் பின்பற்ற வேண்டாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாகிய தொண்டர்

—முருகவே பரமநாதன் அவர்கள்—

"பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே"
-சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

"பத்தில னேனும் பணிந்தில னேனும் உன்
உயர்ந்த பைங்கழல் காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப் பாய்எம் பெருமானே
முத்தனை யானே மணியனையானே
முதல்வனே முறையோ என்று
எத்தனை யானும் யான் தொடர்ந் துன்னை
உனைப் பிரிந்து ஆற்றேனே.
-திருவாசகம், யாத்திரைப்பத்து 4.

பத்து- பற்று. பத்து பற்று என்பதன் மருவு.

ஒன்பது ஒரு பூரண எண். உரையாசிரியர் ஒருவருக்கு இளம்பூரணர் என்று பெயர். இறைவன் (பரி) பூரணன். தாயுமானவர் "பரிபூரணானந்தமே" யெனப் பாடியுள்ளார் பூரண மாலை தந்தவர் பட்டினத்தார்.

"சிலந்தியிடை நூல்போற் சீவசெந்துக்குள்ளிருந்த
நலந்தனைத்தான் பாராமல் நலமழிந்தேன் பூரணமே"
-பாடலெண் 43.

பூரண எண்போலே இறைவன். ஒன்பதன் பெருக்கங்கள் கூட்டல்கள், கழித்தல்கள், வகுத்தல்கள் எல்லாமே கூட்டும்போது விடை ஒன்பதே.

$1+2+3+4+5+6+7+8+9 = 45, \; 4+5 = 9$

$9x9 = 81, \; 8+1 = 9, \; 12x9 = 108, \; 1+8 = 9$

எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல ஒன்பதும் மாற்றமடையாத தானம். பிரபஞ்சத்தினின்று வேறாகாத இறைவனைப் போலே இவ்வெண்ணுக்கு மாற்றமே இல்லை. நவகோள், நவமணி, நவலோகம், நவரசம், நவராத்திரி ஒன்பதாலமைந்தவை. இவ் வண்ணமே பத்து என்னும் எண்ணும். எண்சோதிடத்தில் பத்திற்கு ஓர் விழுமியம், பொருண்மியம் உண்டு.

பூச்சியத்தை விட்டுப் பார்த்தால் ஒன்றே மீதம். ஒன்றே குலம் ஒருவனே தேவன். இது திருமூலர் கூற்று. ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு என்பது பட்டினத்தார் வாக்கு. இரண்டாவது ஒன்று இல்லை. இன்று சைவாலயங்கள். இந்துக் கோயில்களிலே (புலம்பெயர் தேயங்களிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்கள் மெத்தனம். இவை தேசப்பிரதிஷ்டம் செய்ய வேண்டியனவே எனச் சமயிகள் எழுதுகின்றனர். ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள் என்கிறார். பாரதி, திருமுறைகளைப் புரட்டின் ஒன்றின் நிதானம் தென்படும். ஒன்று இறைவன், இரண்டதன் இன்னருள். பூச்சியம் வெட்டவெளி. பூஜ்ஜியத்தில் இருந்து இந்த உலகை நடத்துகிறான் இறைவன். எண்ணிலடங் காததை அநந்தமென அழைக்கிறோம். அவ்வண்ணமே இறை தத்துவமும். வெறும் பாழ், முப்பாழும் பாழ் என்பது பட்டினத்துப்பிள்ளை வாக்கு. எனவே பத்து ஒரு குறியீடு மட்டுமல்ல, அன்பு, ஈரம், பசை, காதல், வாரம் என்றெல்லாம் பொருள்படும். (பத்தூர் தலம்) ஆக திரு முறை திவ்வியப் பிரபந்தம் போன்ற பக்திப் பனுவல்களில் பத்தாகிய தொண்டர் பற்றிக் காண்போம். என்குரு தேவர் தவத்திரு சபாரத்தினமடிகளும் இவ்வரிசையில் அடங்குவர்.

"பத்துக் கொல்லாம் அடியார்தம் செய்கைதானே"

-அப்பர் பெருமான்.

"பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
பத்தில னேனும் பணிந்திலனேனும்"

-வாதவூரர்.

"பத்தாம் அடியார்க்கோர் பாங்கனுமாய்"

-அப்பரடிகள்.

"பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்"

-ஆளுடை நம்பி.

"பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்க்கரிய வித்தகன்"

-நம்மாழ்வார்.

பத்து- பக்தி, அன்பு, பழகியவர், பழவடியார்- வழிவழி இறைவனுக்குத் தொண்டு செய்பவர். அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கு மடியே னெனப் பாடியவர் வன்றொண்டர். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே. - அவ்வை.

"மெய்யடியார்கள் விரைந்து வம்மின்" - சேந்தனார்.

இப்படியான பொருட் செறிவுடன் - இன்னும் சிறந்த அர்த்தமுண்டு எனச் சொன்னவர் திருவாசக சுவாமிகள் உயர்வற உயர்நலமுடையவர் திருமால் "மயர்வற மதிநலம் உடைய வர்கள் ஆழ்வார்கள்.

"உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே"

-திருவாய்மொழி 1:1.1.

ஆழ்வார்கள் ஸ்ரீமந் நாராயணனிலே ஆழ்ந்த பக்தியுள்ளவர்கள். பெருமாளும் அவ் வண்ணமே. இவ்வண்ணமே. நாயன்மார்கள், பழவடியார்கள், சாதுக்கள் தொண்டர்கள்; துறவிகள் இறைவனிலே ஆழ்ந்த பக்தியுள்ளவர்கள். எல்லாருமே தொண்டால் மேன்மை பெற்றவர்கள். பக்தியாற் பணிந்தோர், மனதாற் பணிந்தோர். எனவே பத்தாகிய தொண்டர் என்பதற்கு, புற இலக்கணம் பத்துடையார் என்றும் பொருள்விரிப்பர். அச்சிறந்த பக்குவங்கள் வருமாறு.

*முதலில் நீ யார் என்பதை உணர்ந்துகொள். பின்னர் உன் செயலைத் தொடங்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) விபூதி, உருத்திராட்சம் அணிதல், சிவ சின்னங்களைப் போற்றுதல்.
02) குருபக்தியாய் வாழ்தல், குருவை வழிபடல், அவருக்குத் தொண்டாற்றுதல், அவர் உபதேசங்களைப் பின்பற்றல்.
03) பக்திப்பாடல்களைப் பாடுதல், பாராயணஞ் செய்தல், முற்றோதல்.
04) ஓங்காரம், பஞ்சாட்சரம், சரவணபவா, ஓம், நமோ நாராயணாய மந்திரங்களைச் செபித்தல், எழுதுதல்.
05) பூஜை ஆராதனை பண்ணுதல், அதற்கு உதவி புரிதல்.
06) சக்திக்கு இசைந்தபடி தான தர்மம் செய்தல்.
07) இறைவன் திருவிளையாடல்களைக் கேட்டல், திருமால் பெருமைகளை வாசித்தல்.
08) திருக்கோயில்களைப் போற்றுதல், பராமரித்தல், திருப்பணி செய்தல், வலம் வருதல், தூய்மையாய் வைத்திருத்தல், கேணி, கிணறு, குளம் என்பவற்றை இறைத்தல்.
09) பழவடியார் கூட்டத்தை ஆதரித்தல், மகேசுவர பூசை செய்தல், அவர்களோடு இருந்து சாப்பிடுதல்.
10) இறைவனடியவர்களை வணங்குதல், அறிவை வளர்த்தல், ஆச்சிரமத் தொண்டு இயற்றல், சமய நூல்களை அச்சுவாகனமேற்றல்.

இராவணன் சிவபக்தன். ஞானசம்பந்தரும், நாவேந்தரும் பதிகந்தோறும் அவனைப் போற்றினர். பத்துத் தலைகளை உடையவன் அவன் திறமை நோக்கி, பத்துத் தலை பேசப்படுகிறது. பத்துத் திக்குகளை வென்றவன். பத்து வல்லவங்கள் பெற்றவன், பக்தி உடையவன் என்று எடைபோடமுன் அவன் பதினெண் கலைகளிலும் வல்லவன். அவனுடைய பாண்டித்தியம் பத்து வகையானவை. எனவே பத்துக் கலைகளுக்கும் அதிபதி.

வைத்தியன், வைத்தியவிபுணன், ஆவியுலகத்தோடு பேசுபவன். சங்கீதமேதை. விண்ணிற் பறப்பவன், வானசாத்திரி, நிலவியலாளன். இவன் வாழ்ந்த மண் சிவபூமி. அதுவே இலங்கை. ஒட்டுமொத்தமாக ஆயின் அவனோர் பத்தாகிய தொண்டன். அவன் மனைவி ஐந்து சிறந்த பெண்மணிகளில் ஒருத்தி. அவளின் செவ்விகண்டு மணிமொழிப் பிரான் திருவாசகத்தில் ஓர் பாடல் தந்துள்ளார்.

ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுரு
வும்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர்
வண்டோதரிக்குப்
பேரரு ளின்பமளித்த பெருந்துறை
மேயபிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி
நாடனைக் கூவாய்.

ஆக நம் தெய்வம் சிவன். சிவனும் சமயமும் ஒன்று. சமயமே தெய்வம். இதை எண்ணி பத்துடையோமாய் இறைவனைப் பற்றுவோம்.

*நம்முடைய ஆற்றல் அதற்கு எதிராகத் தோன்றும் தடைகளின் அளவைப் பொறுத்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுசயா

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

கணவனுக்கு இனியவளாக நடப்பவளே உத்தமி. எந்தப் பெண் தன் கணவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறாளோ அவளை உத்தமி என்று அழைப்பார்கள்.

எப்பொழுது ஒருவர் புருஷனாக வந்து விட்டாரோ அவர் என்ன செய்தாலும் சரி தவறு என்ற பேச்சுக்கே இடமின்றி அவருக்கு இனியவளாக நடந்து கொள்பவளே உத்தமி. அப்படி எவரேனும் உண்டா? உண்டு. யார் அவள்?

## அனுசுயா

அனுசுயா என்று பெயர். அத்திரி முனிவரின் மனைவி. அத்திரி முனிவர் சிறந்த புருஷர். ஒழுக்கசீலர். கடும் தவஸி, மிருதுவானவர். அவருக்கு மிக ஏற்றவளாக அனுசுயா என்ற மனைவி இருக்கிறாள். எந்த நேரமும் மனதுக்குள்ளும், வெளியேயும் புருஷனைக் கொண்டாடிக் கொண்டே இருக்கிறாள்.

அவர்கள் எங்கிருக்கிறார்கள்? ஓர் அழகிய வனத்தில் குடியிருக்கிறார்கள். அதுதானே... அழகிய வனத்தில் காட்டு மரங்களுக்கு நடுவில் கணவரோடு வாழ்ந்தால் வேறு என்ன தோன்றும். கணவனைக் கொண்டாடத்தான் தோன்றும்.

## நாரதரும் மூன்று தேவியரும்

சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி என்ற மூன்று தேவியர்களும் நாரதரோடு கேலி செய்து பேசிக்கொண்டிருந்தார்கள். தேவியர்களின் கணவர்களான பிரம்மாவும் விஷ்ணுவும் சிவனும் இந்த தேவியர்கள் கடும் சோதனைக்கு ஆளாகப் போகிறார்கள் என்று தெரிந்து மௌனமாய் சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

## லக்ஷ்மி தேவி சொன்னாள்

"மனிதர்கள் சலனமுள்ளவர்கள். அவர்களால் ஏகாக்கிரகமாக இருக்கமுடியவில்லை என்று லக்ஷ்மி தேவி சொன்னாள்.

## சரஸ்வதி தேவி சொன்னாள்

ஆமாம்! புலன்களை தன்வயப்படுத்தி ஒரே நேர்கோட்டில் சிந்திப்பது என்பது மனிதருக்கு இயலாது. ஒரு சில கணங்கள் அமைதியானாலும் பல நேரங்களில் அவர்கள் தவறிழைத்து விடுகிறார்கள். காரணம் அவர்கள் மனிதர்கள். கர்வத்தோடு சரஸ்வதி தேவி பேசினாள்.

## பார்வதி தேவி தன் அபிப்பிராயத்தைச் சொன்னாள்

மிகப் பெரிய ஞானிகளும், ரிஷிகளும் முனிவர்களும் இந்த விஷயத்தில் தடுமாறி இருக்க, ஒரு சாதாரணப் பெண் எப்படி ஒரே விஷயத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்க

*அறிவைவிட ஆர்வமே அதிக செயல்களைச் செய்ய வல்லது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்? உள்ளத்தை முகத்தால் மூடி மறைத்துக் கொள்ளலாமே தவிர உள்ளே புடம்போட்ட தங்கமாக இருக்க முடியாது. பார்வதி தேவி தன் அபிப்பிராயத்தைச் சொன்னாள்.

"அட...... அப்படியானால், அழகிய வனத்தில் குடியிருக்கும் அத்திரி எனும் முனிவரின் மனைவி "அனுசுயா" என்பவள் மனதில் எவ்வேளையும் புருஷனைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறாள் அவளையே சோதனைசெய்து பார்த்து விடுங்கள். மனிதர்களில் உயர்ந் தவர்கள் இருக்கிறார்களா என்பது தேவர்களாகிய நமக்குத் தெள்ளத் தெளிவாக தெரிந்துவிடும்"

நாரதர் உரக்கச் சொல்ல அவர்கள் "ஆமாம் சோதித்துப் பார்த்துவிடலாம்" என்று உற்சாகமானார்கள். "யாரை வைத்து சோதனை செய்வீர்கள்.....?"

## நாரதரின் லீலை

நாரதர் மறுபடி இன்னும் ஒரு வலையை வீச அவர்கள் யோசிக்கத் தொடங்கினார்கள்.

"எதற்குச் சிரமம் உங்கள் கணவர்களைவிட அற்புதமான ஆண்கள் உண்டா....? அவர்களை அனுப்புங்களேன். அனுசுயா கற்புநெறி தவறாதவளா என்று சோதித்துப் பார்த்து விடுங்களேன்" நாரதர் சொல்ல அவர்கள் துள்ளிக்கொண்டு எழுந்தார்கள்.

எப்படி அனுப்பப் போகிறீர்கள்.... கட்டிளங் காளைகளாகவா....?

## தேவியர் கூற்று

தேவையில்லை நமது புருஷர்கள் மகா கம்பீரர்கள். வேதமறிந்த கிழவர்களாக உருமாறிப் போகட்டும். அந்தப் பெண் தடுமாறுகிறாளா என்று பார்ப்போம். மிகுந்த கர்வத்தோடு சரஸ்வதி சொல்ல மற்றவர்கள் அவளை ஆமோதித்தார்கள்.

## மிடுக்குடைய வேதியராக தோன்றினர்

வேறு வழியின்றி பிரம்மா, விஷ்ணு, சிவன் மூன்றுபேரும் அத்திரி முனிவரின் ஆச்சிரமத்தை அடைந்தார்கள். அனுசுயா எதிரே தோன்றினார்கள். ஆனால், மிடுக்குடைய வேதியராக வாசலில் நின்று ஏதேனும் உண்ணக் கொடுக்க வேண்டும் எனக் கையேந்தினார்கள்.

## அந்தணர்களை உபசரித்தாள் அனுசுயா

அந்தணர்கள் பிட்சையிடு என்று கேட்டால் உடனே இடுவதுதான் முறை. அனுசுயா பரபரப்பானாள். அத்திரி முனிவர் இமயமலை நோக்கி போயிருந்ததால் அவளே அவர்களை வரவேற்றாள். கால் அலம்ப நீரும், முகம் துடைத்துக்கொள்ள துணிகளும், உள்ளே வந்ததும் தாகத்திற்கு உண்டான பானங்களும் கொடுத்துவிட்டு இலை போட்டாள். உணவு பரிமாறினாள், விழுந்து நமஸ்கரித்து "உண்ணுங்கள்" என்று கைகூப்பி அடக்கத்துடன் வேண்டினாள். "இப்படிப் பரிமாறினால் நாங்கள் சாப்பிடுவதில்லை". "வேறு எப்படி பரிமாற வேண்டும்" என்றாள் அனுசுயா.

## வேதியர் அனுசுயாவைப் பார்த்துச் சொன்னார்கள்

"பெண்ணே! எங்கள் எதிரே துணியின்றி நிர்வாணமாய் பரிமாறுவதுதான் சிறப்பு" "இல்லையெனில்...." என்ன கேள்வி இது... இல்லையெனில் எழுந்து போய்விடுவோம். இந்த

*நல்ல வாழ்க்கை நடத்துவதற்கு நல்ல பண்புகளை முறையாகப் பெற்றிருக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்சிரமம் பெரும் சாபத்திற்கு உள்ளாகும்" அனுசுயா திடுக்கிட்டாள். என்ன இது... இப்படியொரு விசித்திரமான முறையை எவரும் சொல்ல மாட்டார்கள்... யார் இவர்கள்?

## தன் சூழ்நிலையை அறிய வந்திருப்பது வேதியர்கள் அல்ல சிவன், விஷ்ணு, பிரம்மா என்பதை அறிந்தாள்.

கண்மூடி தன் நெஞ்சுக்குள் முழு கவனமும் வைத்து தன்னை மறந்து தன் சூழ்நிலையை அறிய வந்திருப்பது வேதியர்கள் அல்ல. சிவன், விஷ்ணு, பிரம்மா என்ற மூன்று மிகப் பெரிய சக்திகள் என்பதை புரிந்துகொண்டாள்.

என்ன செய்வது? புருஷனைக் கண்மூடி வேண்டினாள். அவர் கால் கழுவிய நீரை எடுத்துவந்து அந்த வேதியர்கள்மீது தெளிக்க, அந்த வேதியர்கள் மூன்றுபேரும் உடனே சிறு குழந்தைகளாக மாறினார்கள். கைகால் உதைத்து இடுப்புத்துணி நெகிழக்கிடந்தார்கள். அவர்களை அள்ளி நெஞ்சோடு அணைத்துக்கொண்ட அனுசுயா அவர்கள் விருப்பப்படியே உடையின்றி உணவு பிசைந்து ஊட்டினாள். கொட்டிலில் கிடத்தினாள். கொஞ்சி சீராட்டினாள்.

## அத்திரி முனிவரின் அளவற்ற மகிழ்ச்சி

கணவர் வந்ததும் நடந்ததை விவரித்தாள். அத்திரி முனிவர் மனைவியினுடைய அன்பில் அளவற்ற பக்தியில் மகிழ்ந்தார். அவரும் குழந்தைகளைச் சீராட்டினார்.

## மூன்று தேவியரின் வருத்தம்

மூன்று தேவியர்களும், போன புருஷர்கள் வரவில்லையேயென்று நாரதரைக் கேட்க நாரதர் நடந்ததை விவரிக்க இனி என்ன செய்வது என்று அவர்கள் கையைப் பிசைய, தேவிகள் அனுசுயாவை அணுகி தாங்கள் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டார்கள்.

## மூன்று லிங்கங்களாக மாறினர்

அனுசுயா அவர்களை வரவேற்று உபசரித்து மறுபடியும் தன் கணவரது பாதத் தீர்த்தத்தை அந்தக் குழந்தைகளின் மீது தெளிக்க அவர்கள் மறுபடியும் சுயவுரு எடுத்தார்கள். அப்படி சுயவுரு எடுத்து மூன்று லிங்கங்களாக உருமாறிய லிங்கங்கள் மூன்றும் சுசீந்திரம் என்னும் திருக்கோவிலில் கொன்றை மரத்தடியில் இன்னமும் இருக்கிறது.

## தெய்வங்களையெல்லாம் மண்டியிட வைக்கிற சக்தி கற்புள்ள பெண்ணுக்கு உண்டு.

ஒரு பெண்ணின் கற்புக்கு காட்சியாய் அவள் புருஷ பக்திக்கு சாட்சியாய் கறுத்துக் கிடக்கின்ற ஒரு கொன்றை மரத்தடியில் ஒன்றின் அருகே ஒன்று உயரமாய் அடுக்கப்பட்டிருக்கிறது. தெய்வங்களையெல்லாம் மண்டியிட வைக்கின்ற சக்தி கற்புள்ள பெண்ணுக்கு உண்டு என்பதை காலம் காலமாய் மக்களுக்கு அந்த சக்தி உணர்த்தப்பட்டு வருகிறது.

*இன்று நாம் செய்யக்கூடிய நன்மைதான் நாளை நமக்கு நன்மை தரக்கூடியதாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

– திரு இ. ஜெயபாலன் அவர்கள் –

**முன்னுரை**

திருமூலருடைய வாக்கு தவத்தில் பிறந்த வாக்காகும். மூவாயிரம் ஆண்டுகள் அரச மரத்தின் அடியில் தவமிருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களை மொழிந்தருளினார் என்று சைவசமய வரலாறு கள் மூலம் தெரியவருகிறது.

பெரியபுராணத்தில் திருமூலருடைய வாழ்க்கையின் சரிதை சொல்லப்பட்டுள்ளது. திருக்கயிலை மலையில் சிவனருள் பெற்றுத் திகழ்ந்த தவயோகியாரில் இவரும் ஒருவர். தம்முடைய பழைய நண்பனான அகத்திய முனிவரைக் காண்பதற்காக பொதிகை மலை நோக்கிச் சென்றார். வழியிலுள்ள தலங்களை வணங்கிவிட்டு பின் திருவாவடுதுறை வந்து சிவதரிசனம் செய்து, சாத்தனூர் எனும் சிற்றூருக்கு வந்தபோது, அங்கே ஒரு பெரிய புல்வெளியில் பசுக்கள் கூட்டமாக நின்று புலம்புவதைக் கண்டார். அப்பசுக்களுக்கருகே சென்று பார்த்தபோது, அவற்றை மேய்த்துக் கொண்டிருந்த ஆயன் கிடப்பதையும், ஊமைப் பசுக்கள் அந்த உடலை மோந்துகொண்டு கண்ணீர் வடிப்பதையும் கண்டார். முனி வருடைய உள்ளம் கருணையால் உருகி யது. உடனே முனிவர் தம்முடைய உடலை ஒரு மரத்திலே மறைத்து வைத்துவிட்டு பரகாயப் பிரவேசம் என்ற சித்தியைப் பிர யோகித்து இடையனின் உடலுக்குள் தம் உயிரைச் செலுத்தினார்.

ஆயன் உயிர்பெற்று எழுந்ததைக் கண்டதும் பசுக்கள் களிப்புடன் துள்ளிக் குதித்தன. மாலை நேரத்தில் அவற்றை வீடு களுக்கு அழைத்துச் சென்றார். ஆயன் உடம் பில் நின்ற தவயோகி பசுக்களை அவற்றை இருப்பிடங்களில் சேர்த்தாகி விட்டது. இடை யனுடைய உடலில் பிரவேசித்த சித்தர் அவ னுடைய உலக வாழ்க்கையில் பிரவேசிக்க மனம் இல்லாமல் அவன் வீட்டுக்கு வெளியே சென்றார். அதுகண்டு ஆயன் மனைவி குழப் பத்தோடு வந்து கணவனை அழைத்தாள். “பெண்ணே உன்னோடு நமக்கு எதுவிதமான சம்பந்தமும் இல்லை” என்றார் தவயோகி. இதனைக் கேட்ட ஆயனின் மனைவி புலம்ப ஆரம்பித்தாள்.

இதனைக் கேள்வியுற்ற ஊரிலுள்ள பொதுமக்கள் நியாயம் விசாரிக்க அங்கே கூடினார்கள். தவயோகி ஓர் மடத்தில் போய் இருந்தார். யார் வந்து அழைத்தாலும் பயன் இல்லை! “உன்னுடைய கணவனுக்கு இன்று மாடு மேய்க்கப்போன இடத்தில் ஞானோ தயம் ஏற்பட்டுவிட்டது. இனிமேல் அவன் உன்னோடு வாழ மாட்டான். அவனை நீ மறந்துவிடு. “யாருக்கும் கிடைக்காத ஞானம் அவனுக்கு கிடைத்துவிட்டது” என்று சொல்லி ஊர்ப்பெரியவர்கள் ஆயனின் மனைவியை சமாதானப்படுத்தினார்கள்.

இதன் பிறகு தவஞானி காட்டுக்குத் திரும்பி வந்து வைத்த இடத்தில் தனது பழைய உடலைத் தேடினார். காணவில்லை! திருமறைப் பொருளை தெள்ளிய தமிழில் எடுத்துச் சொல்வதற்காகவே இறைவன் அந்த உடலை மறைத்தருளினான். இதனைத் தன்

*உலகில் தேடித் தேடி அலைந்தாலும் மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான உணர்வால் தெரிந்துகொண்ட தவ யோகி ஆயனாகவே நடந்து சென்று திரு வாவடுதுறையை அடைந்தார். தெய்வத் தன்மை பொருந்திய ஒரு படர்ந்த பெரிய அரச மரத்தைக் கண்டார். அதனடியில் அமர்ந்து சிவயோகத்தில் கண் இமைகளை மூடினார். ஓராண்டு கழித்து கண்களை திறந்து ஒரு பாடலை அருளினார். மறுபடியும் இமை களை மூடித் தவமிருந்தார். மீண்டும் பன்னி ரண்டு மாதங்கள் கழித்து நிஷ்டை கலைந்து அடுத்த பாடலை மொழிந்தார். இப்படியாக ஆண்டுக்கொரு பாடலாக அருளிச் செய்த நூலே "திருமந்திரமாகும்" என்பது சைவசமய வரலாறு. ஆயன் பெயரே மூலனாகும். அத னால் தவயோகியும் திருமூலர் என்ற நாமத்தை பெற்றார்.

திருமூலரைப் பற்றிய புராண வரலாற் றிலும், ஐதீகங்களாலும் நாம் உணரவேண்டிய உண்மை என்னவெனில் மோனத்திலிருந்து எழுந்து வந்த தவமொழிகளே திருமந்திரப் பாடல்களாகும். பேரின்பத்தைப் பெற்ற தவ யோகி அந்த இன்பத்தை வையகமும் பெற வேண்டும் என்ற கருணையில் தோய்ந்து ஞானத்தை வழங்குகிறார்.

திருமூலர் திருமந்திரம் என்று வழங்கி வருகின்ற தவநூலின் காப்புச் செய்யுள் இது. கடினமான காரியம் தடைகள் பல வந்தாலும் விக்கினங்களை தீர்த்து வைப்பவன் அழகிய ஆனைமுகன்.

**ஐந்து கரத்தினை ஆனை முகத்தனை**
**இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.**

ஐந்து கைகளும் ஆனை முகமும் இளம்பிறைச் சந்திரன் போன்று வளைந்து ஒளியோடு திகழ்கின்ற வெண் கொம்பு ஒன்று உடையவரான விநாயகரை நந்தி மகன் எனவும் ஞானக் கொழுந்தெனவும் பக்திப் பரவசத்தோடு பாடுகிறார் தவயோகி. விநாய கப் பெருமானுக்கு ஒற்றைக் கொம்பன் என் றும் ஒரு பெயர்.

"இந்து" என்றால் சந்திரன். இளம் பிறைச் சந்திரனைப் போன்று ஒளியும் அழகும் கொண்ட ஒற்றைக் கொம்பு என உவமானம் செய்கிறார்.

"எயிறு" - தந்தம் - கொம்பு.

"நந்தி" என்பது சிவபெருமானுக்குரிய பெயர். தவயோகியர் பல இடங்களில் "நந்தி" என்ற பெயராலேயே சிவபெருமானைப் பாடு கிறார். ஞானச்சுடராக ஒளி வீசுகின்ற பிள் ளைக் கடவுளை ஞானக்கொழுந்து என்று துதிக்கின்றார். கொழுந்து என்பது பெரும் தீயினின்று பிறந்த சுடருக்கும் பசுமையான இலைக்கும் உரிய சொல் (பொருளாகும்) ஆகும். "புந்தி" புத்தி என்னுடைய சுழிவில் விநாயகரை வைத்து அவருடைய திருவடி களைப் போற்றுகின்றேன் எனத் தொடங்கு கிறார். கல்லிலும் செம்பிலும் தெய்வ உரு வங்கள் செய்து வழிபடுவதுபோலவே தம் உணர்வைக் கொண்டு ஐந்து கரங்களும் ஆனை முகமும் ஒற்றைக் கொம்புடைய அத் திருவுருவத்தை பிரதிஷ்டை செய்து வழிபடு கிறேன் என்கிறார். புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

மூர்த்தி வழிபாடு என்ற பூஜையை செய்கின்ற தவயோகி, அந்த மானச தெய்வத் திற்கு அங்கங்களும் வடிவத் தோற்றமும் கொடுத்து தன் உள்ளத்திலே நிறுத்துகிறார்.

விநாயகருடைய ஐந்து கைகளும் ஐந்து தொழிலைக் குறிக்கின்றன என்பது யோகிகள் சித்தாந்தமாகும்.

பாசத்தை வைத்துள்ள கை படைப் புத் தொழிலைச் செய்கிறது. "அஞ்சேல்" என்று சொல்லி அபயகரம் நம்முடைய

*நாளைய அறுவடைக்கு இன்றே விதைப்பதுபோல் நாளைய வெற்றிக்கு இன்றே திட்டமிடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தைப் போக்குகிறது. அங்குசம் தாங்கிய கை "அழித்தல்" என்ற தொழிலைச் செய் கிறது. மோதகம் ஏந்திய கையானது "கரம்பு" என்ற தொழிலைச் செய்கிறது. கரம்பு என்றால் மறைத்தலைக் குறிக்கிறது. உலக அனுபவங் களை எமக்குக் கொடுத்து மெய்ப்பொருளை எமது பார்வையில் இருந்து மறைத்து விடு தலாகும். இதனையே "திரோதான சக்தி" என்று கூறுவார்கள். விநாயகருடைய "வரத கரம்" (வரம் தரும் கரம்) மக்களுக்கு வரம் நல்குகிற திருவருளைக் காட்டுகிறது! இப்படி ஐந்து செயல்கள் நிறைந்த உருவமே ஆனை முகக் கடவுளாகும். சிவபெருமானுடைய ஐந்து தொழில்களையும் விநாயகருக்கு ஏற்றி சொல்வது மரபு. அதாவது விநாயகப் பெரு மானை சிவபெருமானாக எண்ணி வழிபடுவது ஒரு முறையாகும்.

மற்றப் புலவர்களின் இலக்கிய நூல் கள் விநாயகர் வணக்கத்தோடு தொடங்குவது போலவே திருமூலரும் திருமந்திரத்தை காப்புச் செய்யுளுடன் தொடங்குகிறார். இப் பாடல் களைப் பயிலத் தொடங்கும் பக்தர்களுக்கு ஓர் அருமையான காப்பாகத் திகழும் இந்தத் தொடக்கச் செய்யுளை நாம் மறந்துவிட லாகாது. புனிதம் நிரம்பிய இந்தக் காப்புப் பாடலை ஓதி வழிபட்டுத் திருமூலருடைய தவமொழியை சிந்திப்போமாக!

(தொடரும்...

---

நாம் அழகாக இருக்கிறோம், படித்திருக்கிறோம், சொத்துக்கள் வைத்திருக்கிறோம் என்றால் இவையாவும் நமக்கு சொந்தமானவை அல்ல. நமது ஆன்மாவுக்கு அணிவிக்கப்பட்ட மாலைகள். இவையெல்லாம் சொற்ப காலத்துக்குள் வாடி வதங்கி உதிர்ந்துவிடும். ஆனால் இவற்றைச் சூடிக்கொண்டிருக்கும் ஆன்மா அழிவில்லாதது.

நாம் வீட்டில் வைத்திருக்கும் கணனி, மோட்டார் வாகனம் உட்பட எத்தனையோ இயந்திரங்கள் தங்கள் வேலைகளைச் செவ்வனே செய்கின்றன. ஆனால் அவையெல்லாம் தங்கள் திறமைபற்றிப் பெருமை காட்டுவதில்லை. அவற்றை வைத்திருக்கும் நாம்தான் அவற்றைப்பற்றி பெருமையாகப் பிதற்றிக்கொள்கிறோம். இப்படியாக இயந்திரங்களை வைத்திருந்தாலே பெருமைப்படும் நாம் நமது உடலைப்பற்றிப் பெருமைப்படாமலா இருப்போம்!!!

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்பதை உணர்ந்து செயற்படாமல் வீணாக அலட்டிக்கொள்கிறோம். உடல் மட்டுமன்றி உள்ளத்திலும் தேவையில்லாத விடயங்களைப் போட்டுக் குழப்பி அதை அமைதி இழக்கச் செய்கிறோம்.

ஒருநாள் பூமிக்கு வந்த கடவுள் ஒரு மிராசுதாரரைச் சந்தித்தார். மிராசுதாரரோ தன்னுடைய நஞ்சை, புஞ்சை, நிலப்பரப்புகள், சொத்துக்கள் எல்லாவற்றையும் காட்டி "இவை யாவும் எனக்குச் சொந்தம்" என்று கூறினார். கடவுள் அமைதியாக அவரின் உடலைச் சுட்டிக்காட்டி "இது எனக்குச் சொந்தம்" என்றார்.

எவ்வளவு பெரிய ஆணவக்காரனாக இருந்தாலும் இறுதியில் இறைவன் என்ற நெருப்புக்குச் சொந்தமாகி விடுகிறான்.

*வெற்றி பெறவேண்டும் என்று பதற்றம் இல்லாமல் இருப்பது வெற்றி பெறுவதற்குச் சிறந்த வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிந்து நில் துணிந்து செல்

– திரு வி.ரி. வேலாயுதம் அவர்கள் –

எண்ணித் துணிக கருமம். துணிந்த பின் எண்ணாதீர்கள். நாம் ஒரு காரியத்தை செய்யமுன் அதன் திட்டத்தை, செயலை முதலில் தீர்மானிக்கவும். அதைச் செய்து முடிக்க எவ்வளவு காலம் எடுக்கும், இது இக்காலத்துக்கு ஏற்புடையதா, பொருத்த மானதா என்று ஆற அமர சிந்தித்தே செயற் படுத்த வேண்டும். மலைபோன்ற காரியமாக இருந்தாலும் அதைத் தினைபோல எடுத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாகச் செய்து வந்தால் எறும்பு சீனியைக் கொண்டு சென்றதுபோல் அனைத்தும் எமது எண்ணப்படி நிறைவேறிவிடும். தாழ்வு மனப் பான்மையை முதலில் விட்டுத் தள்ளுங்கள். எங்களாலும் முடியும் என்று திடகாத்திரம் கொள்ளுங்கள்.

ஓர் காட்டில் முயல்கள் வசித்து வந்தன. அம் முயல்களுக்கு ஒரு நாள் தங் களைக் குறித்த கவலை ஏற்பட்டது. அது யாது கவலை. நாங்களும், எங்கள் உறவு களும் ஒவ்வொரு நாளும் பற்றைக்குள் ஏன் பதுங்கி இருந்து ஏங்கி ஏங்கி வாழ வேண்டும்? நாம் விட்ட தவறுதான் யாது? ஒரு சருகு சத்தம் கேட்டாலும் நிம்மதி இல்லையே. இவ் வாறு இறந்து இறந்து வாழ்வதிலும் பார்க்க ஒரேநாளில் எமது உயிரை நிம்மதியாக மாய்த்து விடுவோம் என்று கூறியது ஒரு கிழ முயல். அதற்கு ஆமாம் போட்டதுபோல் மற்றைய முயல்கள் யாவும் தலையசைத்து வரவேற்றன. இதற்கு நல்ல குளத்தையும், நேரத்தையும் தெரிவுசெய்துகொண்டு எல் லோரும் வரிசையாக தமது உயிரை விட குளத்தில் குதிக்க ஆரம்பித்தன. அந்த வேளை குளத்திலிருந்து கலீரென துள்ளிக் குதித்து ஓடியது ஆயிரம் தவளைகள். அப்போ அக் கிழ முயல் நண்பர்களே! நில்லுங்கள்! நில்லுங்கள்!! அவசரப் படா தீர்கள். இதோ இத் தவளைகள் எங்களைக் கண்டு பயந்துதானே குளத்தில் ஓடி மறைந் தன. எனவே, நாமும் ஏன் மற்றையோரைக் கண்டு உயிரை விடவேண்டும். பயப்படாதீர்கள். வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலும் உண்டு. ஆதலால், வீறுநடை போடுங்கள். துணிவே துணை. ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்து வாழ்வதுதான் உலகம். மேடு பள்ளமும், சுகமும் துக்கமும் எல்லோர்க்கும் உரியதே. இப்பெரிய பூவுலகில் எமக்கென்று வாழ்க்கை அமைக்க ஏன் முடியாது? என்று கூறி முன்னையதிலும் பார்க்க மிகவும் சந் தோஷமாக திரும்பிச் சென்று அம் முயல்கள் காட்டில் வசித்து வந்தனவாம். எனவே, அன் பர்களே! நாமும் ஏன் மற்றவர்களுக்குப் பயந்து வாழவேண்டும்? எங்களிடம் அறிவு இருக்கின் றது. வீரம் இருக்கின்றது. கடவுள் தந்த கை கால்கள் இருக்கின்றது. எமக்கென்று அறிந்த தெரிந்த தொழில் இருக்கின்றது. ஒருவரிடமும் நாம் கைநீட்டி இரக்க வேண்டியதில்லையே. கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு ஏன் அலைவான். ஏன், நாமும் மற்றை யோரைப் போல் செல்வந்தனாக வாழமுடியாது என்று சிந்தியுங்கள். செயலாற்றுங்கள். வெற்றி நிச்சயம்.

இதற்குப் பொருத்தமான இன்னுமோர் உதாரணம் தங்களுக்கு தேவைப்படுகிறது.

*ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல. சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது ஏழை ஒருவன் தெரு வீதியில் கைநீட்டிப் பிச்சை எடுத்து வந்தான். அப்போ ஓர் பணக்காரன் அவனுக்கு ஒரு நாணயத்தை அன்புடன் கொடுத்துவிட்டுச் சென்றான். அப் போது அவன் அப் பெரியவரைப் பார்த்து, அன்பரே! நீங்கள் எவ்வாறு பணக்காரன் ஆனீர்கள் என்று கூறுவீர்களா? என்று பணி வுடன் கேட்டான். அதற்கு அப் பணக்காரன் நீ விருப்பமுடன் கேட்பதினால் கூறுகிறேன் என்று கூறியபடி அருகில் உள்ள கல்லில் அமர்ந்தான். ஏழைப் பிச்சைக்காரனும் கல்லில் அமர்ந்தான். அவ்வேளை அவனருகில் மெழுகு திரி எரிந்துகொண்டிருந்தது. அதனை அணைத்து விடும்படி பணக்காரன் பணித்தான். அதை ஏன் அணைக்கிறீர்கள். வெளிச்சம் தேவையே என்று ஏழை கூறினான். இந்த நேரம் கதைப் பதற்கு வெளிச்சம் தேவையில்லையே என்று பணக்காரன் கூறியதும், ஏழைக்கு இவர் எப்படி பணக்காரனாக வந்தார் என்ற ஞானம் பிறந்தது. உடனே அவ் ஏழை அவரை மண்டி யிட்டு வணங்கி, ஐயா! நீங்கள் எப்படி பணக் காரனாகினீர்கள் என்பதை நான் இன்று புரிந்து கொண்டேன் என்றான். பணக்காரனும் ஏழைக்கு ஆசிகூறிச் சென்றார்.

நாட்கள் கடந்தன. ஏழை துணிவு கொண்டான். பிச்சைப் பாத்திரத்தை சுழட்டி எறிந்தான். தேவையில்லாதபோது விளக்கு எரிவது வீண் என்று நினைத்தான். அதை ஆதாரமாக நினைத்துக்கொண்டு அனைத்து நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கவ னித்து, ஒவ்வொன்றையும் அலசி ஆராய்ந்து தனது வாழ்க்கையை நடாத்திவரலானான். ஓரிரு வருடத்தில் அவனும் பெரிய பணக்கார னானதுடன் தான் இளமையில் கற்ற தொழி லுக்கும் தொழிலதிபனுமானான். இவனுக்கு ஆரம்ப முதலும் இல்லை. ஒருவரின் உதவி யும் இல்லை. தானும் தனது கடவுள் கொடுத்த இரு கைகளும்தான் உதவியது. தனக்குத் தெரிந்த தொழிலையே செய்தான். தனக்குத் தெரியாததை வேலை சொல்பவர் சொல்லச் சொல்லச் செய்தான். அதன் பின்பு அத் தொழிலும் அவன் தேர்ச்சி பெற்றான். அவ னுக்கு ஓய்வே இல்லை. வேலைகள் கூடிய தினால் வேலை கேட்பவர்களுக்கு தவணை கொடுத்தே வேலை செய்வான். அவ்வளவுக் குப் பல வேலைகளில் அவன் திறமைசாலி ஆகிவிட்டான்.

எதற்கும் துணிவும், தன்னம்பிக்கை யும், விடாமுயற்சியும் தேவை. இத்தனையும் இருந்தால் நீங்கள் வாழ்க்கையில் வெற்றி அடைவீர்கள். இது நிச்சயம்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் | 22 | பங் 09 | திங்கள் | தவத்திரு முருகேசு சுவாமிகள் |
| | | | | நல்லைக்குருமணி சுவாமிகள் |
| மார்ச் | 25 | பங் 12 | வியாழன் | யோகர் சுவாமிகள் |
| மார்ச் | 31 | பங் 18 | புதன் | காரைக்காலம்மையார் |
| ஏப்ரில் | 08 | பங் 26 | வியாழன் | பரமகுரு சுவாமிகள் |
| ஏப்ரில் | 10 | பங் 28 | சனி | குழந்தைவேற் சுவாமிகள் |
| ஏப்ரில் | 13 | பங் 31 | செவ்வாய் | செல்லப்பா சுவாமிகள் |

*சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம யாத்திரை -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

**-திருமதி ம. நிலா அவர்கள்-**

கதிர்காமத்துக்குச் செல்லும் அடியார்கள் அனைவரும் முருகன் ஆலயத்தை வணங்கிய பின் கதிர்காமத்தைவிட்டு புறப்படுமுன் ஏழுமலை என்று போற்றப்படும் மலையிலுள்ள முருகனைக் கட்டாயம் வணங்கியபின்தான் தத்தம் இடங்களுக்குச் செல்ல வேண்டும் எனும் நியதி நீண்டகாலமாகவே இருக்கின்றது. இதன் அடிப்படையில் எமது குழுவினரும் முதல் நாள் இரவு ஐயா கூறியபடி அதிகாலை 3 மணியளவில் எல்லோரும் எழுந்து மலை ஏறு வதற்கான ஆயத்தங்களுடன் மாணிக்க கங்கையில் நீராடி ஈர உடையுடன் ஆலயத்தில் நடை பெற்ற அதிகாலைப் பூசையைப் பார்வையிட்டு பூசகரின் ஆசீர்வாதத்துடன் ஆலயத்தைவிட்டு வெளியே எமது பேருந்து நிற்கும் இடத்திற்குச் சென்று பேருந்தின் மூலம் மலை அடிவாரத் திற்குச் சென்றோம்.



மலை அடிவாரத்திலும் ஐயாவைத் தெரிந்த பௌத்தமதம் சார்ந்த ஒரு பெண்மணியின் வியாபார நிலையத்திற்குச் சமீபமாக எமது பேருந்து நிறுத்தப்பட்டது. அப் பெண்மணியும் ஐயாவைக் கண்டதும் முகமலர்வுடன் வணங்கி எம்மை வரவேற்ற விதம்கூட எனக்கு ஒரு பேரதிசயமாகவே தெரிந்தது. ஐயாவும் அருச்சனைக்குரிய பொருட்களை வாங்குவதென்றால் இங்கேயே வாங்குங்கள் என்று கூறியதும் தங்களுக்கு தேவையானவற்றை வாங்கியபின் மலை அடிவாரத்தை நோக்கிப் புறப்பட ஆயத்தமானோம்.

விடாமுயற்சி மட்டுமே நம் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சிமலை முருகனுக்கு படைப்பதற்காக ஆச்சிரமத்தில் இருந்து கொண்டுசென்ற அவல், சர்க்கரை, தேங்காய், பலாப்பழம், வாழைப்பழம், பாத்திரங்கள், திருகுவலை போன்ற பொருட் களை ஒவ்வொருவரும் கையில் எடுத்தபடி மலை அடிவாரத்தை நோக்கி பயணப்பட்டோம். மலை உச்சியைப் பார்த்தபொழுது ஏறுவதே சிரமம், அதில் பொருட்களையும் கொண்டு ஏறுவது என்றால் எப்படி? என்ற பிரமிப்பு எனக்கு. ஆனாலும் ஐயா முன் செல்ல நாம் அனைவரும் அவரின் பின் கையில் எடுத்த பொருட்களோடு சென்று மலை அடிவாரத்தை அடைந்தோம்.




மலை ஏற முடியாதவர்களுக்கு மலை அடிவாரத்தில் ஆலயம் சார்ந்தவர்களால் மேலே போய் வருவதற்குரிய வாகன ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அதற்குரிய கட்டணமாக நபர் ஒருவருக்கு இருநூற்று ஐம்பது ரூபா செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றவர்கள் மட்டுமே வாகனத்தின்மூலம் மலை உச்சிக்கு சென்றுவரலாம்.

இந் நடைமுறையைக் கருத்திற்கொண்டு ஐயாவும் மலைக்கு ஏறுபவர்களை நோக்கி நடந்து போகின்றவர்கள் ஏறும் அடியார் கூட்டத்தோடு ஏறி மலை உச்சியில் போய் இருங்கள். நான் பின்னால் வருகின்றேன் என்று கூறி எங்களை மேலே ஏறச் சொல்லிவிட்டு மலை ஏற முடியாதவர்கள் அனைவரையும் வாகனத்தில் ஏற்றுவதற்குரிய ஒழுங்குடன் பொருட்களையும் ஏற்றி வருமாறு கணேசமூர்த்தி அண்ணனிடம் கூறிவிட்டு ஐயா மலை ஏறுவதற்குரிய முதற் கட்டமாக அடிவாரத்தில் கையில் கொண்டுசென்ற தேங்காயை உடைத்து கற்பூரம் கொளுத்தி அரோகரா என்ற ஒலியுடன் மலையில் ஏற ஆரம்பித்தோம்.


மலை ஏறுவது என்பது சாதாரண விடயம் அன்று. நான்கூட கீழ்ப் படியில் கால் வைக் கும்போது மேலே மலை உச்சிக்குப் போகும்வரை இப்படித்தான் ஒழுங்கான படிகள் கட்டி இருப்பார்கள். பயப்படாமல் ஏறலாம் என்ற சிந்தனையோடு ஏற முற்பட்டேன். ஆனால் போகப் போக சீரான படிகள் இல்லை. ஒரு சில இடங்களில் மரத்தின் வேர்களைப் பிடித்தும், சறுக் குப் பாதையூடாகவும் ஒருவித பயத்துடன் ஏறவேண்டியும் இருந்தது.

முயன்று செயல்களைச் செய்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அடியார்கள் கூட்டம் கூட்டமாகவும், அரோகரா என்ற ஒலியுடனும், முருக நாமத்துடனும் ஒன்றிணைந்து கூறிக்கொண்டு வரும்போது ஏற்படும் அதிர்வலைகள் என்னையும் பற்றிக்கொள்ள பயம் தெரியாத வகையில் மலையில் ஏற ஆரம்பித்தேன். அத்துடன் எமக்குப் பின்னே வந்து கொண்டிருந்த ஐயாவும் பயப்படாமல் ஏறுங்கள் என்று கூறியதோடு ஒரு சில இடங்களில் ஏறுவதற்குச் சிரமப்படும் அடியார்களின் கையைப் பற்றி அவர்களை ஏற்றிவிடும் பணியிலும் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருந்தது. ஒரு பக்கம் சறுக்குப் பாதை, மறுபக்கம் குரங்குகளின் அட்டகாசம். இவற்றை எல்லாம் தாண்டி மலை உச்சியை அடையும்போது ஏற்படும் பரவச நிலையை நாம் எங்கும் அடையமுடியாது.



உச்சிமலையை அண்டியதும் குளிர்ந்த காற்று, பனிமுகில் கூட்டம், அரோகரா எனும் அடியார்களின் சத்தம் மேலே ஏறிவிட்டோம் என்ற ஆனந்தக் களிப்பு எல்லாமாகச் சேர்ந்து நாம் மலையேறிய களைப்பைப் போக்கிவிட்டது. மலை உச்சியிலிருந்து பார்க்கும்போது கதிர்காமச் சூழல் மிகவும் அழகாகக் காட்சியளித்தது.



வாழ்க்கைக்கு மூச்சு எவ்வளவு அவசியமோ அப்படியேதான் உழைப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உச்சியை அடையுமுன் வாகனத்தில் வந்தவர்கள் அவல் குழைக்கும் மண்டபத்தில் கொண்டுவந்த பொருட்களோடு எமது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களோடு இணைந்து அவல் குழைக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். எமது குழுவைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அச் செயற்பாட்டில் பங்குபற்றி தங்களால் இயன்ற வரையில் உதவி செய்தனர். இச் செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது எம்மைச் சுற்றி என்ன



நடக்கின்றது என்று பார்த்தபொழுது மேலே வந்திருந்த அடியார்களில் அநேகர் கூட்டம் கூட்டமாக இருந்து தம் இயல்புக்கு ஏற்ற வரையில் கொண்டுவந்திருந்த அவலைக் குழைப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். எனக்கு ஒரே ஆச்சரியம். எல்லோரும் அவலைக் குழைத்து எங்கே படைக்கிறார்கள். என்ன செய்கிறார்கள் என்று பார்த்தபொழுது நான் இருந்த இடத்தில் முருகன் திருவுருவம் வரைந்த திரைச்சீலையினால் மறைக்கப்பட்ட கருவறையும் அதனைச்சூழ மண்டபமும் அடியார் கூட்டமும் காணப்பட்டது.

குழைத்த அவலை அடியார்கள் மண்டபத்தின் வெளிப்புறமாக அமைந்த படிகளில் ஏறி மேலே போய்க்கொண்டிருந்தார்கள். நானும் மேலே ஏறிப் பார்த்தபொழுது நடு முற்றத்தில் ஒரு உயரமான மேடையில் ஒரு பரந்த அகலமான பெரிய வேல் ஒன்று காணப்பட்டது. வேல் அமைந்த பின் பகுதியில் ஒரு சிறு சிவன் ஆலயத்தையும் காணக் கூடியதாக இருந்தது. அடியார்கள் குழைத்த அவலை நடுவில் காணப்பட்ட வேலின் அடிப் பகுதியில் வைத்து படைப்பதையும் ஒரு சிலர் தாம் குழைத்த அவலை அந்த வேலின்மீது பூசி வணங்குவதையும், பூசிய அவலை அள்ளி எடுத்துச் செல்வதையும் கண்டு இது என்ன வழிபாடு என்று என்னுள் யோசித்தபடி எல்லா இடத்தையும் பார்வை இட்டேன். அவல் படைத்து வழிபடும் இடமும் ஒரே அடியார் கூட்டம். கீழே உள்ள முருகன் ஆலயத்திலும் அதேநிலை. இவற்றைப் பார்வை இட்டபடி நாங்கள் குழைத்த அவலைப் படைப்பதற்கு ஆயத்தமானோம்.



(தொடரும்...

அளவில்லாத வேதனைகளைத் தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்வாழ்வும் இறைவாழ்வும்

வாழ்க்கைத் துணையைப் பற்றிட வேண்டும்.

துணையில் நம்பிக்கை வைத்தல் அவசியம்.

துணையுடன் அன்பு வைத்தல் வேண்டும்.

துணையைத் தூற்றித்திரிதலாகாது.

துணையை ஆராதித்தல் வேண்டும்.

துணைக்கு வேண்டிய தொண்டு ஆற்றுதல் வேண்டும்.

துணையைத் தவிர்ந்த ஏனைய பற்றுக்கள் இருத்தல் ஆகாது.

இல்லற வாழ்க்கையில் இருந்தவாறே பற்றற்றான் பற்றை நினைத்து வாழ்வின் பயனை அடைய முயற்சிக்க வேண்டும்.

இல்லறத்திலிருந்தாலும் அதில் மூழ்கி விடாது தாமரை இல்லைத் தண்ணீர் போல பற்றற்றிருத்தல் நல்ல பயன் தரும்.

நல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்க வேண்டும்.

பஜனை, தியானம் செய்தல் முக்கியமானது.

கடமை செய்வதன்மூலம் மோட்சகதி அடைய முயல்தல் வேண்டும்.

இறையைப் பற்றிட வேண்டும்.

இறையில் நம்பிக்கை வைத்தல் அவசியம்

இறையில் அன்பு வைத்து நடத்தல் அவசியம்.

இறையை வசைபாடலாகாது.

இறையாராதனை இன்பம் தரும்.

சரியை, கிரியைத் தொண்டுகளை ஆற்றுதல் அவசியம்.

இறை சிந்தனையுடன் முத்தியின்ப முயற்சியில் வழிநடத்தல் இன்றியமையாதது.

நாவுக்கரசர் போல ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும் தன்மையுடையவராக வாழ்தல் வேண்டும்.

தான தருமங்கள் செய்தல் அவசியம்.

நாம சங்கீர்த்தனம், திருமுறை, திருவாசக முற்றோதல், புராண படனம் செய்தல் வேண்டும்.

நால்வர், அறுபத்து மூவர் வழிநின்று முக்தியின்பம் அடையும் வழி நிற்றல் வேண்டும்.

–யூ.பி. ஆனந்தம்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/146/NEWS/2021

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org